விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆவணி 01 வெள்ளிக்கிழமை (17.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 241

அன்பு வாசகர்களே...
ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்
எழுதும்
ஆவணி மாத இராசி
பலன்கள் உள்ளே...
வாசிக்கத் தவறாதீர்கள்!

யாழ். நகர்ப்பகுதி விடுதியில்

## 3 இலட்சம் ரூபாய் பணமும் 12 பவுண் நகையும் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில் உள்ள விடுதியில் 3 இலட்சம் ரூபாய் பணமும் 12 பவுண் நகையும் திருடப்பட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதை தொடர்ந்து. விடுதி உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.நகர் விக்டோறியா வீதியில் வெளிமாவட்டத்தவர்களுக்கென கொடுக்கும் விடுதியிலேயே நேற்று இந்தத் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வெளிமாவட்டத்தில் இருந்து சகோதர மொழி 24

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில்

## இலங்கை தொடர்பாக இரு அறிக்கைகள் விவாதத்திற்கு

(கொழும்பு)

அடுத்த மாதம் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 39 ஆவது அமர்வில் இலங்கை குறித்த இரு அறிக்கைகள் விவாதிக்கப்படவுள்ளன. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 39-வது அமர்வு எதிர்வரும் செப்ரெம்பர் 10-ம் திகதி முதல் 28-ம் திகதி வரை ஜெனிவாவில் இடம் பெறவுள்ளது.

இந்த அமர்வில் கண்மூடித்தனமாக தடுத்து வைத்தல் தொடர்பான ஐ.நா செயற்குழு தனது இலங்கை பயணம் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளது. இதேபோன்று உண்மை நீதியை ஊக்குவி 23

## வயோதிபப் பெண் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -சங்கத்தானைபகுதியில் உள்ள வீடொன்றின் கிணற்றில் இருந்து லண்டனில் இருந்து வந்த வயோதிபப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது 24

## இந்தியாவின் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் நேற்று காலமானார்



(புதுடில்லி)

பாரதிய ஜனதா கட்சியின் ஸ்தாபகரும் இந்தியாவின் முன்னாள் பிரதமருமான அடல் பிகாரி வாஜ்பாய் நேற்று மாலை காலமானார்.

நீண்ட காலமாக 24

7 மோட்டார் குண்டுகள்

## நாகர்கோவிலில் கண்டுபிடிப்பு



(கரணவாய்)

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நாகர்கோவில் கிழக்கு பகுதியில் மோட்டார் 24

அதிகார பகிர்வின் மூலமே

# தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு

யாழில் சுகாதார அமைச்சர் ராஜித



**(யாழ்ப்பாணம்) அதிகார பகிர்வின் மூலமே தமிழ் மக்களின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய முடியும் என்பதுடன் தற்போது வடக்கு மக்களுக்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதென அமைச்சர் ராஜித சேனாரத்ன யாழில் தெரிவித்துள்ளார்.**

அதிகாரப் பகிர்வின் மூலமே வடக்கு மக்களின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய முடியும் என்பதுடன், தற்போது வடக்கு மக்களுக்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதென அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.யாழ்.போதனா 24

## மருத்துவத் தொழில் மக்கள் சார்ந்ததாக மாறவேண்டும்

முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

மருத்துவத் தொழில் மக்கள் சார்ந்ததாக மாற வேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. 23


## ஜெனிவாவில் தமிழ் அமைப்புக்கு கடும் சவால் கொடுப்போம்

சிங்கள அமைப்புக்கள் சூளுரை

(கொழும்பு)

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 39 ஆவது அமர்வில். புலம்பெயர் தமிழ் அமைப்புகளுக்கு நாம் பெரும் சவாலாக அமைவோம் என்று உலகளாவிய தேசப்பற்றுள்ள இலங்கையர் ஒன்றியத்தின் தலைவர் 23

## 2018-ம் ஆண்டு "யாழ் விருது" மோகனதாஸ் சுவாமிகளுக்கு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழுவால் ஆண்டு தோறும் வழங்கப்படும் "யாழ் விருது" இம்முறை சந்நிதியான் ஆச்சிரமத்தின் இயக்குநர் மோகனதாஸ் 23

## மருத்துவர் பற்றாக்குறையை உடனே நிவர்த்தி செய்யுங்கள்

ராஜிதவிடம் மாவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் காணப்படும் மருத்துவர்கள் மற்றும் தாதியர் பற்றாக்குறையை உடனே நிவர்த்தி செய்ய அமைச்சர் முன்வர 23

## ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகா, மகிந்த போட்டியிட தடையில்லை

சட்ட நிபுணர்கள் கருத்து தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் மீண்டும் போட்டியிடுவதில் சட்ட சிக்கல்கள் ஏதும் இல்லை என 23

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த

## கார் முற்றாக எரிந்து நாசம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டையில் மருத்துவர் ஒருவரின் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்ட கார் திடீரென தீப்பற்றி எரிந்து முற்றாகச் சேதமடைந்தது.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 8 மணியளவில் இடம் பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனைக்கோட்டை கூழவடியைச் சேர்ந்த மருத்துவர் ஒருவருடைய காரே 23

## சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும்

பிரிட்டன் உயர்ஸ்தானிகர் ஜேம்ஸ் டோரிஸ் வேண்டுகோள்



(லண்டன்)

இலங்கை மக்களிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் வழங்கிய வாக்குறுதிகளை இலங்கை நிறைவேற்ற வேண்டும் என இலங்கைக்கான பிரிட்டனின் உயர்ஸ்தானிகர் ஜேம்ஸ் டோரிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் நிறைவேற்றவேண்டிய நடவடிக்கைகள் இன்னமும் பல உள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் மீளக்கட்டியெழுப்பும் செயற்பாடுகளிற்கு பிரிட்டன் உதவுவதுடன் இலங்கை அரசாங்கம் தனது மக்களிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் வழங் 23

MIU MANIPAL INTERNATIONAL UNIVERSITY
2 வருடங்களுக்கு பிறகு நீங்கள் விரும்பும் நாட்டுக்கு செல்லும் வாய்ப்பு
2 years in malaysia Transfer to
( Canada, German, USA, France, UK, Australia )
AUG 19 2018 (10 am - 2 pm)
@ VALAMPURI HOTEL - JAFFNA
Mr. Sivabalan
SPOT ADMISSION
MEET UNIVERSITY REPRESENTATIVE



உங்கள் விபரங்களை எமக்கு WhatsApp மூலம் அனுப்பவும்
0775 545000
(C-3518)
Study In Malaysia Choose
manipal international university
nilai, malaysia
• ENGINEERING • BUSINESS • BIOTECHNOLOGY
FOUNDATION | DIPLOMA | DEGREE
மலேசியாவில் தமிழ் மாணவர்கள் அதிமாக கல்வி கற்கும் பல்கலைக்கழகம்
ICS Study Overseas
No: 77, ClockTower Road Jaffna.
Tel : 021 730 6000 Mob : 077 301 3060

# முல்லையிலிருந்து தென்னிலங்கை மீனவர்கள் பொலிஸ் பாதுகாப்புடன் வெளியேற்றம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நாயாறு பகுதியிலிருந்து வாடிகள் எரிப்பு தொடர்பில் கைதான தென்னிலங்கை மீனவர்கள் பொலிஸ் பாதுகாப்புடன் நேற்று வெளியேறினர்.

முல்லைத்தீவு நாயாறு பகுதியில் கடந்த 13 ஆம் திகதியன்று தமிழ் மீனவர்களுக்கு சொந்தமான 8 மீன் வாடிகள் மற்றும் உடைமைகள் விஷமிகளால் எரித்து அழிக்கப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து குறித்த பகுதியில் பதற்றமான சூழல் நிலவி வந்தது.

இதனையடுத்து அந்த பகுதியில் அத்துமீறி குடியேறி கடற்தொழில் நடவடிக்கையினை மேற்கொண்டுவந்த தென்பகுதி மீனவர்கள் ஒரு பகுதியினர் நேற்றையதினம் மாலை முதல் தாமாக வெளியேறிவருகின்றனர் .

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தமிழ் மீனவர்களின் உடைமைகளை எரித்தார்கள் என்ற சந்தேகத்தில் மூன்று தென்னிலங்கை மீனவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் நேற்றையதினம் படகுகள் வலைகள் என்பனவற்றை வாகனங்களில் ஏற்றிக்கொண்டு புறப்பட ஆயத்தமான வேளை தமது எரிக்கப்பட்ட சொத்துக்களுக்கு பதில் கூறுமாறு நாயாறு மக்களால் அவர்களின் சொந்த ஊர்களுக்கு செல்ல முடியாதபடி மக்கள் தடுத்ததையடுத்து ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டு மிகவும் பாதுகாப்பான முறையில் தென்பகுதி மீனவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதனால் அந்த பகுதியில் பதற்றமான நிலை ஏற்பட்டதோடு பொலிஸார் அசம்பா விதங்கள் எதுவும் ஏற்படாதவண்ணம் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (ம-281,315)

## திருவெண்காட்டில் இன்று கொடியேற்றம்

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

10 நாட்கள் நடைபெறும் மஹோற்சவத்தில் இரவுத்திருவிழாவில் தெய்வீக உரை சிறப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது.

அந்த வரிசையில் இன்று கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் எஸ்.பாலசண்முகனின் தெய்வீக உரை இடம்பெறும். (ம)

## ரவிராஜின் சிலைக்கு ராஜித அஞ்சலி

சாவகச்சேரி பிரதேச செயலக முன்றலில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் உருவச்சிலைக்கு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மலரஞ்சலி செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கான குருதி சுத்திகரிப்பு நிலையத்தை நேற்று வியாழக்கிழமை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில், சுகாதார அமைச்சருடன், பிரதி சுகாதார அமைச்சர், வட மாகாண சபை உறுப்பினர்களான கேசவன் சயந்தன், எம்.கே.சிவாஜிலிங்கம், நகரசபை தவிசாளர் சிவமங்கை, பிரதேச சபை தவிசாளர் க. வாமதேவன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ம-89)

## முக்கிய அறிவித்தல்

எமது சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபை தெரிவும் 19.08.2018 அன்று நடைபெறுவதாக இருந்த இக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் அன்றையதினம் நடைபெறாது என்பதனையும் 22.09.2018 அன்று எமது மேற்படி வருடாந்த பொதுக் கூட்டம் நடைபெறும் என்பதனையும் சங்க அங்கத்தவர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றோம்.

22.09.2018ஆம் திகதி நடைபெற இருக்கும் சங்கத்தின் வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டத்திற்கான அழைப்பிதழ் தனிப்பட்ட முறையில் அங்கத்தவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

**செ.பொன் குணரத்தினம்-செயலாளர்**
**வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்**
**16.08.2018**

(5389)

## அனைத்து தமிழ் அரசியல்வாதிக்கும் சிங்கள பொலிஸாரே பாதுகாப்பு

### ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

வடக்கில் வெவ்வேறு இடங்களில் இருந்து ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்ட போதிலும் மீண்டும் யுத்தம் ஏற்படுவதற்கு இடமளிப்பதில்லை என வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்தார்.

முல்லைத்தீவு விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்தே இந்தக் கருத்தை அவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் உரையாற்றிய அவர்,

பெரிய மழை பெய்து முடிந்தவுடன் நிலத்தில் ஈரம் இருப்பது போன்று வட மாகாணத்தில் இடம்பெற்ற முப்பதாண்டு யுத்தத்தின் பின்னர் இரண்டொரு ஆயுதங்கள் கண்டெடுக்கப்படலாம் என்று அவர் கூறினார்.

அது யுத்தத்தின் மறு ஆரம்பமல்ல என்று அவர் தெரிவித்துள்ளார்.

இன்று வடக்கில் இருக்கின்ற அனைத்துத் தமிழ் அரசியல் வாதிகளுக்கும் பாதுகாப்பு வழங்குவது சிங்கள பொலிஸ் அதிகாரிகள். பாராளுமன்றத்திலும் சரி மாகாண சபையிலும் சரி அனைத்துத் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் பாதுகாப்பு வழங்குவது சிங்கள பொலிஸ் அதிகாரிகளே.

எந்தவொரு தமிழ் அரசியல்வாதிகளிடமும் தமிழ் பொலிஸ் அதிகாரிகள் இல்லை என்று வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே மேலும் தெரிவித்தார். (ம)


WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித நபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-3498)



உ
அம்பாள் துணை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்





தெல்லிப்பழை
திருமஞ்சத் திருவிழா
(ஆறாம் நாள்)
காலம்:18.08.2018
சனிக்கிழமை மாலை 6.00 மணி
அனைவரும் கலந்து கொண்டு அம்பாளின் திருவருளைப் பெற்று உய்யுமாறு வேண்டுகின்றோம்.
விழா உபயகாரர்
நிர்வாக சபை, ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை
(க-3527)






வாகன கண்காணிப்புச் சாதனம்
EVT-Vehicle Tracking System
- வாகனத்தின் அமைவிடத்தை உடனுக்குடன் Smart Phone அல்லது Computer மூலம் அவதானிக்கலாம்.
- வாகனம் சென்ற பாதை, Parking time, Over Speed மற்றும் சென்ற தூரத்தை பார்க்கலாம்.
- வாகன Ac, Engine இன் இயக்கத்தை அறியலாம்.
- அரச மற்றும் தனியார் வாகனங்களிற்கும் பொருத்தமானது.
- Vehicle Running Chart இனை இலகுவாக Print செய்யலாம். (10 வினாடிகளில்)
- வெளிநாட்டில் இருந்தவாறும் வாகனத்தை அவதானிக்கலாம்.
- வாகனம் செல்லும் வேகத்தை இலகுவாக அவதானிக்கலாம். (விபத்துக்களைக் குறைக்கலாம்)
- Mileage Meter பழுதடைந்த / இல்லாத வாகனத்திற்கும் சென்ற தூரம், பாதை, வேகம் அனைத்தையும் அவதானிக்கலாம். (Tractor)
இன்னும் பல வசதிகள் உண்டு.
Garudan (PVT) LTD
077 888 7051
(Jaffna)
(5390)






யாழ்ப்பாணம் கோண்டாவில் மண்ணின் மைந்தன் **திரு.இராஜகோபாலசிங்கம் லக்ஷன்** அவர்கள் உலகின் முதன் நிலை காவல்துறையான METROPOLITON POLICE இல் (லண்டன்) உயர்பதவி பெற்றதையிட்டு நாம் மிகமகிழ்ச்சியடைகின்றோம்.

இவர் கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி University of Greenwich, University of west London ஆகியவற்றின் பழைய மாணவரும், Tesco நிறுவனத்தின் முகாமையாளரும் ஆவார்.


இவர் திரு.திருமதி இராஜகோபாலசிங்கம் தயாளினி தம்பதிகளின் புதல்வரும் கோண்டாவில் V.T.R இன் பேரனுமாவார். இவர் மேன்மேலும் பல உயர்பதவிகள் கிடைத்து யாழ்.மண்ணிற்கு பெருமைகள் சேர்க்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வாழ்த்துவோர்:-**
**குடும்பத்தினரும், உறவினர்களும்**
(538)

### "நற்சேவையாளர்களை வடக்கில் சேவை செய்ய விடுங்கள்"

# போர்க்காலத்தில் அமுலிலிருந்த இடமாற்றமுறை தேவையில்லை

## மத்திய சுகாதார அமைச்சர் ராஜிதவிடம் முதலமைச்சர் விக்னேஸ்வரன் இடித்துரைப்பு



(யாழ்ப்பாணம்)

**நற்சேவை செய்து வருபவர்களை தயவு செய்து தொடர்ந்தும் வடக்கில் சேவை செய்ய விடுங்கள் என மத்திய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவிடம் கோரிக்கை விடுத்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், போர்க்காலத்தில் அமுலில் இருந்த இடமாற்ற முறை தற்போது இருக்கத் தேவையில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.**

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட தாதியர் வீடுதி மற்றும் இலங்கை அரச மருந்தாக்கல், கூட்டுத்தாபனத்தின் அரச ஒசுசல மருந்தகத் திறப்பு விழா, மீள் வாழ்வு நிலையத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா என்பன நேற்று இடம்பெற்றன.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

யாழ்.போதனா வைத்தியசாலையானது மிகக்குறைந்த வளங்களுடன் செயலாற்றுகின்றபோதும்அதன்சேவைகள் மிகப் பெரிய அளவில் மக்களுக்குக் கிடைப்பதையிட்டு நாம் யாவரும் பெருமிதம் கொள்ள வேண்டும்.

இருதய அறுவைச் சிகிச்சைகள் இடம்பெறுகின்ற நாடளாவிய அரச மருத்துவமனைகள் நான்கில் ஒரு இடத்தை யாழ்.போதனா வைத்தியசாலையும் பெற்றிருக்கின்றது என்பது எமது இருதய அறுவைச் சிகிச்சை நிபுணர்களின் பிரதி உபகாரம் கருதாத சேவை மனப்பாங்கைப் படம் போட்டுக் காட்டுவதாக அமைகின்றது. இருக்கும்வசதிகளை வைத்து அவர்கள் செவ்வனே பலர் போற்றும் வண்ணம் தமது சிகிச்சைகளை அளித்து வருகின்றார்கள்.

இருதய அறுவைச்சிகிச்சை மேற்கொள்வதற்கான விசேட படுக்கை வசதிகள் இரண்டை மட்டுமே கொண்டுள்ள போதும் எமது வைத்திய நிபுணர் மிகச் சிறப்பாக இக் குறுகிய வளங்களுடன் சேவையாற்றுவது பாராட்டப்படவேண்டியது.

ஆனால் அப்பேர்ப்பட்ட ஒரு சிறந்த அறுவைச் சிகிச்சை நிபுணரை இங்கிருந்து வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக நான் அறிகின்றேன். நல்லவர்களை, திறனுடையவர்களை இங்கு விட்டு வைக்க மாட்டார்கள் போல் தெரிகிறது.

பளிகக்கார என்ற ஒரு சிறந்த ஆளுநர் இங்கு இருந்தார். அவரை இங்கிருந்து ஒரு வருடத்தில் மாற்றி ஒரு அரசியல்வாதியைக் கொண்டு வந்தார்கள். அவரின் நடவடிக்கைகள் எங்களை நீதிமன்று வரை கொண்டு சென்றுள்ளது. முதலமைச்சரால் அவருக்கு சென்ற வருடம் ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி அனுப்பப்பட்ட அமைச்சர் ஒருவர் பற்றிய தீர்மானம் இதுவரையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை.

அமைச்சரிடம் நான் கேட்டுக்கொள்வது நற்சேவை செய்து வருபவர்களை தயவு செய்து தொடர்ந்து இங்கு சேவை செய்ய விடுங்கள். தற்போதைய இங்கிருக்கும் அறுவைச்சிகிச்சை நிபுணர் நான் பதவிக்கு வந்த பின்னரே இங்கு வந்தார் அவரை மாற்ற வேண்டிய அவசியம் என்னவென்று தெரியவில்லை.

இரண்டு வருடங்களின் பின்னர் வடக்கு, கிழக்கு வைத்தியர்களை மாற்றம் செய்யும் பழக்கம் இங்கு போர்க்காலத்தில் அமுலில் இருந்தது. தற்போது அவ்வாறான முறை இருக்கத்தேவையில்லை. தயவு செய்து இது பற்றி அமைச்சர் உரிய நடவடிக்கைகளை எடுப்பார்என்றுநம்புகின்றேன்.

அது போன்றே ஏனைய துறைசார் வைத்திய நிபுணர்களும் இங்கு தமது சேவைகளைத் திறம்பட முன்னெடுத்துவருகின்றனர். தமது வளங்கள் குறைந்திருப்பினும் எமது வைத்திய நிபுணர்களின் திறன் நிறைந்திருப்பது எமது பாக்கியமே.

இங்கு கடமையாற்றும் எமது வைத்திய நிபுணர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று கோடி கோடியாகப் பணம் ஈட்டக்கூடியவர்கள். அவர்கள் தமது தாயகத்தின் பாலும் அதில் வசிக்கும் மக்கள் பாலும் கொண்டுள்ள அன்பின் நிமித்தமே இங்கு கடமையாற்றுகின்றார்கள். இதை எம்மக்கள் உணர வேண்டும்.

வைத்திய துறை என்பது உயிர்காக்கும் ஒரு சேவை. அந்தச் சேவையில் எந்த அவசர கடமையும் நாளைக்கென்று பிற்போட முடியாது. அதனால்தான் வைத்திய நிபுணர்களைக் கடவுளுக்கு ஒப்பானவர்களாக மக்கள் இனம் காண்கின்றார்கள்.

அந்த வகையில் வடபகுதி வைத்தியர்கள் தமது கடமைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அவர்களுக்கு இருக்கும் குறைபாடுகளையும் பிரச்சினைகளையும் அறிந்து, தெரிந்து வைத்து அவர்களுக்கு மிகவும் உதவியாக அமைச்சர் இருக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (இ-9)

## மத்திய சுகாதார அமைச்சர் ராஜித யாழில் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பு







(படங்கள்:-பொ.சோபிகா)



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் வைத்தியர் ராஜித சேனாரட்ன யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதலாவதாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட இலங்கை அரச மருந்தாக்கல், கூட்டுத்தாபனத்தின் அரச ஒசுசல மருந்தகத்தினை திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மீள்வாழ்வு நிலையத்துக்கான புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைத்ததுடன் வைத்தியசாலையின் நோயாளர் விடுதிகளை பார்வையிட்டார்.

பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட தாதியர் விடுதியைத் திறந்து வைத்தது டன் தாதியர் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்விலும் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் மதகுருமார்கள், பிரதி அமைச்சர் பைசல்காசிம், வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, திருமதி விஜயகலா மகேஸ்வரன், ஈ.சரவணபவன்,மாகாணசபை உறுப்பினர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-9-101)

### குருநகர் தொடர்மாடி குடியிருப்பில்

# 3 இலட்சம் பெறுமதியான தங்க நகைகள் திருட்டு!



(குருநகர்)

குருநகர் தொடர்மாடி குடியிருப்பில் உள்ள வீட்டில் எவரும் இல்லாத வேளை நுழைந்த திருடர்கள் தங்க நகைகளை திருடிச்சென்றுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் குறித்த வீட்டில் உள்ளவர்கள் மடு தேவாலயத்துக்கு சென்றிருந்த நிலையில் இரவு 11 மணியளவில் வீட்டின் ஜன்னலை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் வீட்டின் அலுமாரியை உடைத்து அதனுள் இருந்த 3 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் திருடிச்சென்றுள்ளனர்.

ஆலயத்தில் இருந்து வீடு திரும்பியவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-9-106)

### சுப்பர் கிண்ண கால்பந்து

# அட்லெடிகோ மட்ரிட் சம்பியன்



சுப்பர் கிண்ண கால் பந்தில் ரியல் மட்ரிட்டை 4-2 என வீழ்த்தி அட்லெடிகோ மட்ரிட் சம்பியன் பட்டம் வென்றது.

சுப்பர் கிண்ண கால் பந்து சம்பியனுக்கான ஆட்டம் எஸ்டோனியாவில் நேற்று நடைபெற்றது.

இதில் ஐரோப்பிய சம்பி யன் லீக் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற ரியல் மட்ரிட் அணியும் ஐரோப்பா லீக் கில் சம்பியன் பட்டம் வென்ற அட்லெடிகோ மட்ரிட் அணி யும் பலப்பரீட்சை நடத்தின.

ரியல் மட்ரிட் அணி கிறிஸ்டியானோ ரொனா ல்டோ வெளியேறியதற்குப் பிறகு முதன்முறையாக மிகப் பெரிய தொடரை சந்தித்தது.

ஆட்டத்தின் முதல் நிமிடத்தில் அட்டிலெடிகோ மட்ரிட் அணியின் டியேகோ கோஸ்டா முதல் கோலை பதிவு செய்தது. 27ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணியின் கரிம் பென்சிமா பதில் கோல் அடித்தார்.

இதனால் முதல் பாதி நேரத்தில் இரு அணிகளும் 1-1 என சமநிலை பெற்றது. 2ஆவது பாதி நேர ஆட்டம் தொடங்கியதும், ஆட்டத்தின் 63ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணிக்கு பெனால்டி வாய்ப்பு கிடைத்தது. இதை பயன்படுத்தி செர்ஜியோ ரமோஸ் கோல் அடித்தார். 79ஆவது நிமிடத்தில் டியேகோ கோஸ்டா கோல் அடித்தார்.

இதனால் 2-2 என ஆட் டம் சமநிலை பெற்றது. கடைசி 11 நிமிடத்தில் இரு அணி களும் கோல் அடிக்காத தால் ஆட்டம் சமனிலை யில் முடிவடைந்தது.

இதனால் கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. இதில் 98 ஆவது நிமிடத்தில் அட்லெ டிகோ மட்ரிட்டின் நிகுயெஸ், 104ஆவது நிமிடத்தில் கோக் ஆகியோர் கோல் அடித்ததால் அட்டிலெடிகோ மட்ரிட் 4-2 என ரியல் மட்ரிட் அணியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

# இந்தியா வன் மேன் ஆர்மி அல்ல – சங்கக்கார



இந்திய அணி விராட் ஹோலியை மட்டுமே சார்ந்திருக்கிறது என்பது நியாயம் அல்ல. திற மையான வீரர்கள் உள்ளனர் என்று சங்கக்கார தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து - இந்தியா இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. எட்ஜ்பாஸ்டன் மற்றும் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற ஆட்டங்களில் இந் தியா தோல்வியை சந்தித்தது. விராட் ஹோலி 200 ஓட்டங்கள் அடித்ததால் எட்ஜ்பஸ்டனில் 31 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்தது.

ஆனால் லோர்ட்ஸில் 23, 17 என நாற்பது ஓட் டங்களில் ஆட்டமிழந்ததால் இந்தியா இன்னிங்ஸ் மற்றும் 159 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல் வியை சந்தித்தது. தொடக்க வீரர்களான தவான், லோகேஷ் ராகுல், முரளி விஜய், நடுத்தர வரிசை துடுப்பாட்ட வீரர்களான புஜாரா, ரகானே, சகல துறை வீரர் ஹர்திக் பாண்டியா ஆகியோர் திணறி வருகிறார்கள்.

இதனால் இந்தியா முழுக்க முழுக்க விராட் ஹோலியை நம்பியே இருக்கிறது. அவர் வன் மேன் ஆர்மியாக இருக்கிறார் என்று பேசப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இலங்கை அணியின் முன் னாள் ஜாம்பவான் சங்கக்கார, இந்திய அணி ஹோலியை மட்டுமே சார்ந்திருக்கிறது என்பது நியாயம் அல்ல என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சங்கக்கார கூறுகையில்,

"கடந்த சில வருடங்களாக விராட் ஹோலியின் துடுப்பாட்டத்தை மற்றைய துடுப்பாட்ட வீரர்களு டன் ஒப்பிடுவது நியாயம் அல்ல. அவருடைய ஆட்டத்தை பார்க்கும்போது நம்பமுடியாத வகை யில் இருக்கும். சிறந்த பெர்போமர். ஆனால், மற் றைய வீரர்கள் சிறந்தவர்களே.

புஜாரா, ரகானே உண்மையிலேயே சிறந்த துடுப்பாட்ட வீரர்கள். புஜாரா டெஸ்டில் 50க்கு மேல் சராசரி வைத்துள்ளார். ரகானே வெளிநாட்டில் 50க்கு மேல் சராசரி வைத்துள்ளார். மற்ற வீரர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தக் கூடியவர்கள். போர்மில் இருக்கும்போது கேஎல் ராகுல் அபாயகரமானவர். முரளி விஜய், ஷிகர் தவான், தினேஷ் கார்த்திக் ஆகியோரும் குன்றந்தவர்கள் அல்ல" என்றார்.

# மரியோ ஓய்வு



குரோஷியா கால்பந்து அணியின் முன்கள வீரரான மரியோ மாண்ட்சுகிச் சர்வ தேச போட்டியில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித் துள்ளார்.

குரோஷியா கால்பந்து அணியின் முன்னணி வீரர் களில்ஒருவராகதிகழ்ந்தவர் மரியோ மாண்ட்சுகிச்.


ரஷ்யாவில் நடைபெற்ற உலக கிண்ண இறுதிப் போட் டியில் குரோஷியா 2-4 என தோல்வியடைந்து சம்பியனா கும் வாய்ப்பை இழந்தது.

இந்த போட்டியில் மாண்ட் சுகிச் 2ஆவது கோலை தன் அணிக்காக பதிவு செய்தார். 11 வருடமாக குரோஷியா அணிக்காக விளையாடி வரும் மாண்ட்சுகிச் சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக இன்ஸ்டாகிரா மில் தெரிவித்துள்ளார்.

இத்தாலியில் உள்ள யுவான்டஸ் அணிக்காக விளையாடி வரும் இவர், குரோஷியா அணிக்காக 89 போட்டிகளில் விளையாடி 33கோல்கள் அடித்துள்ளார். இரண்டு உலக கிண்ணம் மற்றும் மூன்று ஐரோப்பா சம்பியன்ஷிப்ஸ் தொடரில் விளையாடியுள்ளார்.

# 'பன்முக வித்தகர்' வடேகர் மறைவு

## சச்சின், அசார், கும்ளே இரங்கல்



இந்திய கிரிக்கெட் அணி யின் சிறந்த துடுப்பாட்ட வீரர், வெற்றி அணித் தலை வர், மனேஜர், தேர்வுக் குழுத் தலைவர் என பல பணிகளி லும் அசத்தியவர்தான் அஜித் வடேகர்.

இவரது மறைவுக்கு சச் சின், அசார், கும்ளே உள் ளிட்ட முன்னாள் வீரர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்திய டெஸ்ட் அணி யின் முன்னாள் தலைவர் அஜித் வடேகர் (வயது77), மும்பையில் பிறந்த இவர், கடந்த 1958-59ல் மும்பை அணிக்காக முதல் தர போட் டியில் அறிமுகமானார்.

பின், கடந்த 1966ல் மும்பையில் நடந்த மே. தீவுகளுக்கு எதிரான டெஸ் டில் அறிமுகமான இவர், கடந்த 1971இல் இந்திய டெஸ்ட் அணிக்கு தலைவ ராக பொறுப்பேற்றார்.

அணியை சிறப்பாக வழிநடத்திய இவர், மே. தீவுகள் மற்றும் இங்கிலாந்து மண்ணில் முதன்முறை யாக டெஸ்ட் தொடரை கைப் பற்றி புதிய வரலாறு படைத் தார்.

கடந்த 1974ல் இந்திய ஒருநாள் அணிக்கு தலை வராக நியமிக்கப்பட்டார். இதன்மூலம்ஒருநாள்போட்டி வரலாற்றில் இந்திய அணி யின் முதல் தலைவர் என்ற பெருமை பெற்றார்.

துடுப்பாட்ட வரிசையில் 3ஆவது இடத்தில்களமிறங் கிய அஜித் வடேகர், இது வரை 37 டெஸ்ட் (2113 ஓட்.,), 2 ஒருநாள் (73 ஓட்.,) போட்டிகளில் விளை யாடி உள்ளார். இதில் 16 டெஸ்ட் போட்டிக்கு தலைவ ராக இருந்த இவர், 4 வெற்றி, 8 'சமன்', 4 தோல் வியை பெற்றுக் கொடுத்துள் ளார்.

கடந்த 1974ல் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற இவர், 1990களில் அசார் தலைமையிலான இந்திய அணிக்கு முகாமை யாளராக செயற்பட்டார். பின், பி.சி.சி.ஐ., தேர்வுக் குழு தலைவரானார். கிரிக் கெட் அரங்கில் இந்தியா வுக்கு பெருமை தேடித்தந்த இவருக்கு நாட்டின் உயரிய அர்ஜுனா (1967), பத்மஸ்ரீ (1972) விருது வழங்கப்பட் டது. தவிர பி.சி.சி.ஐ., சார் பில் சி.கே. நாயுடு வாழ்நாள் சாதனையாளர், ஆண்டின் சிறந்த வீரருக்கான விருது களும் கிடைத்தன.

சமீபகாலமாக புற்று நோயால் பாதிக்கப்பட்டு மும்பையில் உள்ள மருத் துவமனையில்சிகிச்சை மேற் கொண்டு வந்த இவர், நேற்று முன்தினம் காலமானார்.

### 'டுவிட்டரில்' வெளியான இரங்கல் செய்தி

**சச்சின்:**

அஜித் வடேகர் காலமானார் என்ற செய்தி கேட்டு மிகவும் வருத்தமடைந்தேன். அவரு டைய அறிவுரைகளுக்கும், ஆலோசனை களுக்கும் எப்போதும் நன்றி உள்ளவர் களாக இருப்போம்.

**அசார்:**

இளம் வீரர்களுக்கு 'ரோல்மொடலாக' திகழ்ந்த அஜித் வடேகரின் மரணச் செய்தி வேதனை அளிக்கிறது. தந்தை போல என்னை வழிநடத்திய இவரது ஆத்மா சாந்தியடைய வேண்டிக் கொள்கிறேன்.

**கும்ளே:**

அஜித் வடேகர் மரணமடைந்தது கவலை யாக உள்ளது. இவர் பயிற்சியாளராக இருந்த தைவிட, தந்தைபோல செயல்பட்டதே அதிகம்.

# டெஸ்டில் விளையாட ரோகித் ரெடி

"டெஸ்ட் போட்டியில் வாய்ப்பு கிடைப்பது கடின மாக உள்ளது. எப்போது என்னை அழைத்தாலும், அணிக்காக விளையாட தயா ராக இருக்கிறேன்." என, இந்திய அணியின் ரோகித் சர்மா தெரிவித்தார்.

இங்கிலாந்து சென்று ள்ள இந்திய அணி, அங்கு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டியில் வீழ்ந்த இந்திய அணி 0-2 என பின்தங்கி உள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையி லான மூன்றாவது டெஸ்ட் நாளை நொட்டிங்காமில் ஆரம்பமாகிறது. இத்தொட ரில் தொடக்க வீரர்களான தவான், முரளி விஜய், லோகேஷ் ராகுல் சொதப்பி வருகின்றனர்.

டெஸ்டில் வாய்ப்பு கிடை க்க போராடும் சக இந்திய வீரர் ரோகித் சர்மா கூறிய தாவது,

ஒரு நாள் போட்டியில் இந்திய அணிக்கு ஆரம்பம் வழங்குகிறேன். ஆனால், டெஸ்டில் வாய்ப்பு கிடைப்பது கடினமாக உள்ளது. எப்போது என்னை அழைத்தாலும், அணிக்காக விளையாட தயாராக இருக்கிறேன்.

இதுவரை, ஆரம்ப' வீர ராகும் வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை. அணி நிர்வாகம் விரும்பினால், இந்த இடத்தில் களமிறங்கு வேன். இது எதுவும் எனது கையில் இல்லை.

கடந்த தென்னாபிரிக்க டெஸ்ட் தொடரில் இந்திய அணி முதலிரண்டு போட்டி யில் வீழ்ந்தது. பின், எழுச்சி கண்டு கடைசி போட்டியில் வெற்றி கண்டது. இது இங் கிலாந்து மண்ணிலும் நடக் கும் என நம்புகிறேன். கட ந்த முறை இங்கிலாந்து அணியை டெஸ்டில் வீழ்த்தி இருக்கிறோம். இதை எப்படி செயல்படுத்தினோம் என எண்ணி விளையாடினால் மீண்டும் வாகைசூட முடி யும். அதேநேரம், இந்த சவால் அவ்வளவு எளிதாக அமையாது. இவ்வாறு ரோகித் சர்மா கூறினார்.



# போரால் நாட்டை விட்டு வெளியேறிய தமிழர்கள் மீண்டும் திரும்ப வேண்டும்

## பிரதியமைச்சர் மௌலானா வேண்டுகோள்

(திருச்சி)

மூன்று தசாப்தங்களாக நீடித்த உள்நாட்டுப் போரால் நாட்டைவிட்டு வெளியேறிய தமிழர்கள் மீண்டும் நாடு திரும்ப வேண்டும் என தேசிய ஒருங்கிணைப்பு, நல்லிணக்கம் மற்றும் அரச மொழிகள் பிரதியமைச்சர் சயீட் அலீ சஹிர் மௌலானா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திருச்சி ஜமால் மொஹமட் கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்க கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மீண்டும் நாடு திரும்ப விரும்பும் மக்களுக்கு, குறிப்பாக தமிழ் ஆதிக்கம் மிக்க வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

ஆனால், தங்களது குடும்பங்களுடன் பல்வேறு நாடுகளில் குடியேறியுள்ள மக்கள் மீண்டும் நாடு திரும்புவதற்கு தயக்கம் காட்டி வருகின்றனர்.


இதேவேளை, வடக்கு, கிழக்கில் இராணுவ இருப்பைக் கட்டுப்படுத்தி இராணுவ மயமாக்கலை குறைப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து தமிழக மீனவர்களின் கைது குறித்து கருத்துரைத்த அவர், "இலங்கையின் கடல் எல்லைக்குள் நுழையும் இந்திய மீனவர்களே கைது செய்யப்படுகின்றனர். இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தையின் மூலம் மீனவர் பிரச்சினைக்கு சிறந்த தீர்வை பெற்றுக் கொள்ளலாம்" எனவும் அவர் ஆலோசனை வழங்கினார். (இ-7)

# நாமல், வசந்த மோசமான வரவு

(கொழும்பு)

கடந்த மே மாதம் தொடக்கம் ஜூலை மாதம் வரை 24 நாட்கள் நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவு தொடர்பான பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் 224 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 12 பேர் மாத்திரமே 24 நாட்களும் நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொண்டுள்ளனர்.




மேலும், 24 நாட்களில் 2 நாட்கள் மட்டுமே நாடாளுமன்றத்துக்கு வந்து நாமல் ராஜபக்ஷ மற்றும் வசந்த சேனநாயக்க ஆகியோர் மோசமான சாதனை படைத்துள்ளனர்.

ஆனால் 24 நாட்களும் வந்து சாதனை படைத்த 12 நாடாளுமன்ற உறுப்பினர்களில் தமிழ் எம்.பிக்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஞானமுத்து சிறிநேசன் ஆகியோர் உள்ளனர். மேலும் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் 23 நாட்கள் நாடாளுமன்றுக்கு வருகைதந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## காணி விற்பனைக்கு

அரியாலை கிழக்கில் வயற்காணியும் மானிப்பாய் இராஜகாரியர் வீதியில் தென்னந்தோட்டம் 8 1/2 பரப்பும் விற்பனைக்கு உண்டு.

T.P: 076 223 0696, 077 633 6853

(5384)



குருவே துணை

வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

## மனவளக்கலை பயிற்சிகள் ஆரம்பமாகிறது

தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கும் பேராசிரியர் **உழவன் முத்துவேல்** அவர்களால் பயிற்சிகள் நடத்தப்பட இருப்பதால் அயல் நாடுகளிலிருந்து வந்திருக்கும் உறவினர்கள் இந்த விடுமுறைக் காலப் பகுதியை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும் பாடசாலை விடுமுறைக் காலமாதலால் மாணவர்களுக்கு **சலுகை அடிப்படையில்** பயிற்சிகள் திங்கள் முதல் வெள்ளி வரை பகல் வேளைகளிலும் பயிற்சிகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

- ▲எளியமுறை உடற்பயிற்சிகள்
- ▲எளியமுறை தியானப்பயிற்சிகள்
- ▲காயகல்பப் பயிற்சி
- ▲அகத்தாய்வுப் பயிற்சிகள்.

காலம் : 18.08.2018 தொடக்கம் 24.08.2018 வரை
நேரம் : காலை 9.00 மணி தொடக்கம் 11.00 மணி வரை
மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை.

அத்துடன் VISION DIPLOMA கற்கைநெறிக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 19.08.2018 மாலை 4.00 மணிக்கு நடைபெற இருக்கிறது. அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

அகத்தாய்வு 1 மற்றும் 3ஆம் நிலைகள் 18.08.2018 சனி மற்றும் 19.08.2018 ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9 மணிக்கு நடைபெறும்.

பயிற்சிகளை வழங்குவோர்: மனவளக்கலை பேராசிரியர் உழவன் முத்துவேல்
மனவளக்கலை பேராசிரியர் V.பாஸ்கரன்.
துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன்.

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (தொ.இல: 021 222 2772)



பழைய மாணவர் ஒன்றியம்–பிரான்ஸ் கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம் "தொடுவானம்" நிகழ்ச்சி திட்ட ஆதரவில் ஸ்கந்தா விளையாட்டுக்கழகம் நடாத்தும் வட மாகாண அணிகளுக்கிடையிலான

## மாபெரும் மென்பந்தாட்டப் போட்டி 2018

அணிக்கு 11 பேர், 8 பந்துப்பரிமாற்றங்கள் மட்டுப்படுத்தப்பட்டது

காலம்-28.08.2018 முதல் 03.09.2018 வரை

முதலாம் பரிசு - ரூபா 50.000

இரண்டாம் பரிசு - ரூபா 25.000

வெற்றிக்கேடயங்கள்,பதக்கங்கள் இன்னும் பல சாதனை பரிசில்களுடன்

22.08.2018 முன்னர் பதிவு செய்யும் அணிகள் போட்டிக்கு அனுமதிக்கப்படுவார்கள்

பதிவுக்கான தொலைபேசி இலக்கங்கள்
0769191301,
0770281285

பதிவுக் கட்டணம் ரூபா 2000

ஸ்கந்தா விளையாட்டுக் கழகம்
ஸ்கந்தபுரம் . கிளிநொச்சி
தொடுவானம்


**மீனம்**



காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும், தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை.

**மேடம்**



கடன் பிரச்சினையை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல்நலம் சீராகும், உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**இடபம்**



தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மிதுனம்**



பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், நன்மைகள் நாடி வரும் நாள், பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள்.

**கும்பம்**



நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கடகம்**



தேவைகள் பூர்த்தியாகும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பெற்றோர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

## இராசி பலன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை | | புத. ராகு |
| செவ். கேது | சந்திராஷ்டமம் ரேவதி, அச்சுவினி | | சூரி |
| சனி | | குரு. சந் | சுக் |

17.08.2018

ஆவணி 1, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு

சஷ்டி காலை 6.30 மணிவரை

சுவாதி முன்னிரவு 9.58 மணிவரை

சுபநேரம் 6.05-7.35 மணிவரை

இராகுகாலம் 10.35-12.05 மணிவரை

வளவன்

**மகரம்**



ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், விரதம், வழிபாடுகளில் அதிக நம்பிக்கை கூடும், சான்றோர்களின் சந்திப்புண்டு.

**சிம்மம்**



சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், தொழில் சம்பந்தமான முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், கௌரவமான நாள்.

**தனுசு**



நினைத்தது நிறைவேறி நிம்மதி கிடைக்கும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள்.

**விருச்சிகம்**



பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்**



வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**கன்னி**




சுய முயற்சிகளின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, பகைவர் தொல்லை அகலும்.

# நல்லூர்க்கந்தன் மஹோற்சவம் நேற்று ஆரம்பம்



வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவம் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 25 நாட்கள் இடம்பெறும் மஹோற்சவத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 9 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.
(படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# சிறுப்பிட்டியில் மினி சூறாவளியால் வாழை, பப்பாசி செய்கை பாதிப்பு







(யாழ்ப்பாணம்)

மினி சுறாவளியின் தாக்கத்தினால் சிறுப்பிட்டி ஜனசக்தி குடியிருப்பு பகுதியில் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மழையுடன் கூடிய திடீர் காற்று வீசியது. இதன் தாக்கத்தினால் வீடுகளுக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதுடன் பெருந்தொகையான பப்பாசி மற்றும் வாழை மரங்களும் வலி.கிழக்கின் பல பகுதிகளிலும் அழிவடைந்துள்ளன.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது, மினி சூறாவளி காரணமாக சிறுப்பிட்டி ஜனசக்தி குடியிருப்புப் பகுதியில் பனை மரம் ஒன்று முறிவடைந்து வீடொன்றின் கூரையின் மீது வீழ்ந்ததில் அவ்வீடு பாரியளவில் சேதமடைந்துள்ளது. இதேவேளை மேலும் சில வீடுகளின் சீற்கள் காற்றின் வேகத்தினால் உடைந்துள்ளன. இவ்வாறாக வீட்டுக் கூரைகள், கொங்கிறீட் சுவர்கள் உடைந்து விழுந்த போதும் குடியிருப்பாளர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

இதுபோன்று சிறுப்பிட்டிப் பகுதியில் பெறுமதியான விவசாயச் செய்கைகளும் அழிவடைந்துள்ளன. பெறுமதி மிக்க வாழை, பப்பாசி போன்ற பயிர்கள் கடும் காற்றின் காரணமாக முறிவடைந்துள்ளன. அழிவடைந்த சொத்துக்களின் சேத விபரங்கள் இதுவரை மதிப்பிடப்படாத போதும் விவசாயிகள் பெரும் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

சூறாவளியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் செல்வதிசைநாயகம் தவநாயகம் ஆகியோர் நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளனர்.

பிரதேச சபைத் தவிசாளர் அப்பகுதியில் காணப்படும் அபாயகரமான மரங்களை அகற்றுவது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதுடன், மக்களின் பாதிப்புக்களை நிவர்த்திக்கும் கடமைப் பொறுப்புள்ள நிறுவனங்களின் கவனத்திற்குக் கொண்டுவரவும் உள்ளதாக மக்களிடம் உத்தரவாதமளித்துள்ளார்.

எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களில் குறித்த பகுதிகளுக்கு முன்னுரிமையளிக்குமாறும் வலி.கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளரிடம் மக்கள் கோரியுள்ளனர்.

தொடர்ந்தும் யாழ்.குடாநாட்டில் காற்றின் வேகம் அதிகரித்துக்காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-9)



மிருசுவில் வடக்கு அருள்மிகு பத்திரகாளி அம்மன்ஆலய வருடாந்த ஆடிச்செவ்வாய் பொங்கல், மடை உற்சவம் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்றது. இதன்போது அப்பிரதேசத்தைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு அவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக கற்றல் உபகரணங்கள் ஆலய முன்றலில் ஆலய நிர்வாகத்தினரால் வழங்கப்பட்டன.

# 'உத்தியோகபூர்வ பணி' நிலமெஹெவர நடமாடும் சேவை யாழில் அனைத்து பிரதேச செயலக பிரிவுகளிலும் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்பின் பேரில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேகுணவர்த்தனவின் வழிகாட்டலில் யாழ். மாவட்ட சகல பிரதேச செயலக பிரிவுகளிலும் பொதுமக்களுக்கான "உத்தியோகபூர்வ பணி" (நிலமெஹெவர) ஜனாதிபதி மக்கள் சேவை நடமாடும் சேவை நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்நடமாடும் சேவைகளில் அதிகளவான திணைக்களங்கள் பங்குபற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் இந்நடமாடும் சேவை நடைபெறும் தினங்களில் குறித்த இடத்துக்கு வருகை தந்து தமது தேவைகளைப் பூர்த்தி செய்யுமாறு யாழ். அரச அதிபர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார்.

சண்டிலிபாய்ப்பிரதேச செயலகப் பிரிவினர் எதிர்வரும் 24 ஆம் திகதி யாழ்.சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் உடுவில் பிரதேச செயலகப் பிரிவினர் 25 ஆம் திகதி உடுவில் பிரதேச செயலகத்திற்கும் கரவெட்டி செயலக பிரிவினர் 26 ஆம் திகதி கரணவாய்பொன்னம்பலம் வித்தியாலயத்துக்கும் மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவினர் 27 ஆம் திகதி மருதங்கேணி பிரதேசசெயலகத்துக்கும் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவினர் செப்டெம்பர் 14 ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை பிரதேச செயலக பீரிவினர் செப்டெம்பர் 15 ஆம் திகதி தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவினர் செப்டெம்பர் 16 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரிக்கும் வேலணை பிரதேச செயலகப் பிரிவினர் செப்டெம்பர் 17 ஆம் திகதி வேலணைப் பிரதேச செயலகத்துக்கும் தென்மராட்சி பிரதேச செயலக பிரிவினர் செப்டெம்பர் 28 ஆம் திகதி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கும் சங்கானை பிரதேச செயலகப் பிரிவினர் செப்டெம்பர் 29 ஆம் திகதி யாழ்.வட்டு இந்துக் கல்லூரிக்கும் ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவினர் செப்டெம்பர் 30 ஆம் திகதி சென்.அன்ரனிஸ் கல்லூரிக்கும் காரைநகர் செயலகப் பிரிவினர் ஒக்டோபர் முதலாம் திகதி காரைநகர் இந்துக் கல்லூரிக்கும் நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவினர் ஒக்டோபர் 12 ஆம் திகதி நெடுந்தீவு மகா வித்தியாலயத்துக்கும் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவினர் ஒக்டோபர் 13 ஆம் திகதி யாழ்.இந்துக் கல்லூரிக்கும் பருத்தித்துறை செயலக பிரிவினர் ஒக்டோபர் 14 ஆம் திகதி வடமராட்சி இந்து மகளிர் கல்லூரிக்கும் வருகைதந்து தேவையினை பூர்த்தி செய்யுமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார். (இ

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா:29செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L/ சொந்ததொழில்<br>தொ.இ: B/273 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 06 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:AAT<br>தொ.இ: G/480 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 23செவ் 8 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:MSc/ பொறியியலாளர் லண்டன் PR<br>தொ.இ: B/280 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 52 செவ் 4 இல்<br>உயரம்: 4'11"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/487 |
| பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 50 செவ் 1 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BSc/அரசதொழில்<br>தொ.இ: B/288 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 56<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BA/பட்டதாரி<br>தொ.இ: G/489 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 26 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc/அரசதொழில்<br>தொ.இ: B/289 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 31<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:MA/அரசதொழில்<br>தொ.இ: G/498 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தான மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறும் இம்மஹோற்சவத்தில் எதிர்வரும்செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும்மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.(இ)

## ST.JOHN'S COLLEGE, JAFFNA
## VACANCY

Applications are hereby invited from qualified persons to teach:

**SCIENCE (English Medium)- Grade- 6-11**
**SCIENCE (Tamil Medium)- Grade- 6-11**
**ENGINEERING TECHNOLOGY-A/L**

Please send your complete CV including the contact details of two non- related referees by post on or before 24th August 2018 to the address below. Only shortlisted candidates will be called for interview.

**The Principal**
**St.John's College**
**Jaffna.**

(C-3517)

## பணியாளர்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் நியூ மைதிலி ஜூவலர்ஸ் நிறுவனத்திற்கு ஆண், பெண் பணியாளர்கள், கணக்கு லிகிதர் தேவை. வயதெல்லை 22 முதல் 40 வரை விண்ணப்பம் கோரப்படுகின்றது. 19.08.2018 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 - 10.30 மணி வரையும் கிழமை நாட்களில் காலை 7.30-9.30 மணி வரையும் நேரில் வரவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**நியூ மைதிலி ஜூவலர்ஸ்**
**38, 40, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(இ-3522)




# HND IN CIVIL ENGINEERING

**Entry Qualifications**
- G.C.E. A/L or G.C.E. O/L + Engineering Foundation

**Duration** • 2 Years

TVEC REGISTERED

A/L's ▸ HND ▸ BSc ▸ MSc DEGREE COMPLETION IN SRI LANKA

LIVERPOOL JOHN MOORES UNIVERSITY

# BSc (Hons) CIVIL & STRUCTURAL ENGINEERING

UGC

ice

**Entry Qualifications**
- Higher National Diploma in Quantity Surveying or any other accepted programs.

**Why Study ICBT ?**
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

© 0770 746 553 | © 021 477 7888

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner Education Service Sector




# ICBT HND QUANTITY SURVEYING

TVEC REGISTERED

» **Entry Qualifications**
- G.C.E. A/L or Equivalent
- Certificate in related field

» **Duration: 2 Years**

**Why Study ICBT ?**
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

BIRMINGHAM CITY University

Accredited by RICS

# BSc (Hons) Quantity Surveying

» **Entry Qualifications**
- HND or Equivalent Qualifications Acceptable to the University
- Progression Routes for NDT, NDES(Civil), C&G (Civil), NCT(Civil / QS)

UGC RECOGNIZED

» **Duration: 1 Year**

Week End Part Time Classes

© 0770 746 553 | © 021 477 7888

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner Education Service Sector

# குடிநீர் வழங்கல் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்

## நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் தெரிவிப்பு





நீர் வழங்கல் அமைச்சை பொறுப் பேற்கும் போது வவுனியாவில் 5 சதவீதத்துக்கும் குறைவான மக்களே குழாய் நீரை பெற்றுக்கொண்டிருந்தனர். அவற்றை 30 சதவீதமாக அதிகரிப்பதற்கு பல்வேறு வகையான குடிநீர் வழங்கல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தி வருகின்றோம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

வவுனியா, மாவட்டத்தின் மாங்குளம் பாலர் பாடசாலைக்கு சுற்றுமதில் நிர்மாணிப்பதற்கான ஆரம்ப வேலைகளை நேற்று ஆரம்பித்துவைத்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பாவற்குளம், ஆணை விழுந்தான், பெரிய உலுக்குளம், ஈச்சங்குளம், நன்டிமித்ரகம, பொகஸ்வெவ, கற்குளம் ஆகிய இடங்களில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைச்சர் திறந்துவைத்தார். அத்துடன் சின்னசிப்பிக்குளம் பிரதேசத்தில் குழாய்க் கிணறு நிர்மாண வேலைகள் ஆரம்பித்து வைத்ததுடன், சூடுவெந்த பிளவு, ராஜேந்திரகுளம் ஆகிய இடங்களில் குழாய் பதிக்கும் வேலைத் திட்டத்துடன் பட்டானிச்சூரில் நீர் வழங்கல் இணைப்புகளையும் ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் ரவூப் ஹக்கீம்,

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத்திட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனமாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்பட்டுக்கொண்டிருக்கிறது.

வவுனியாவில் பாரிய குடிநீர் தட்டுப்பாட்டை எதிர் நோக்கியுள்ள மாங்குளம், நேரியகுளம், பாவற்குளம், செட்டிகுளம், மெனிக்பாம் உள்ளிட்ட 15 கிராமங்களில் சுத்தமான குடிநீரை வழங்குவதற்காக 2000 மில்லியன் ரூபா செலவிலான நீர் வழங்கல் திட்டங்களை நாங்கள் ஆரம்பித்திருக்கிறோம்.

பேராறுக்கு குறுக்காக ஒரு வாவியை அமைக்கும் திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த வேலைத் திட்டத்தை பொறுப்பேற்ற ஒப்பந்தகாரர் தரம் குறைந்த குழாய்களைப் பயன்படுத்திய காரணத்தினால் இடை நடுவில் கைவிடப்பட்டுள்ள இந்த வேலைத் திட்டத்தை அவசரமாக முன்னெடுப்பதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளோம்.

மல்வத்து ஓயாவுக்கு குறுக்காக நீர்ப்பாசனத்திணைக்களத்தினால் செயற்றிட்டமொன்று முன்னெடுத்து இத்திட்டத்தை வைத்து பாரியளவில் வவுனியா குடிநீர் வழங்கல் திட்டமொன்றை கொம்பிளாண்ட் என்ற சீன நிறுவனத்தின் உதவியில் முன்னெடுக்கவுள்ளோம்.

ஆசிய அபிவிருத்தி வங்கி -5 திட்டத்தின்மூலம் மன்னாரில் பாரிய குடிநீர் வழங்கல் திட்டமொன்றை கடந்த வருடம் பிரதமரை அழைத்து வந்து திறந்துவைத்தோம். பாரியளவிலான மன்னார் குடிநீர் வழங்கல் திட்டத்தை செயற்படுத்தி வரும் சீன நிறுவனம் இந்த வேலைத் திட்டத்தை தாமதப்படுத்தி வருகிறது.

முசலி பிரதேசத்தின் குடிநீர்த்தேவையைப் பூர்த்தி செய்வதற்கு வியாயடி குளத்திலிருந்து நீர் வழங்கல் திட்டத்தை ஆரம்பிப்பதற்காக 4750 மில்லியன் ரூபா செலவிலான நீர் வழங்கல் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படவுள்ளது. இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் முசலி பிரதேச மக்கள் அனைவருக்கும் குழாய் மூலம் சுத்தமான குடிநீர் வழங்கப்படும்.

மன்னார் மடுமாதா ஆலயத்தில் பாசிபடிந்த குளத்து நீரைப் பயன்படுத்த முடியாத நிலைகாணப்படுகிறது இதனை நேரில் பார்வையிட்ட பின்னர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, குடிநீர்த்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு அவர்களிடம் வாக்குறுதி அளித்துவிட்டு வந்திருக்கிறேன்.

எனினும், மடு நீர் வழங்கல் திட்டத்துக்கு 600 மில்லியன் ரூபாவை நேரடியாக வரவு, செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கித் தருமாறு கோரியிருக்கிறேன். அது கிடைத்தவுடன் உடனடியாக மடுவுக்கு நீர்வழங்கல் திட்டம் செய்து கொடுக்கப்படும்.

உலக வங்கி 7 மாவட்டங்களை உள்ளடக்கி அமுல்படுத்தவுள்ள நீர் வழங்கல் திட்டத்தில் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி உள்ளடக்கப்படுவதால்அவற்றுக்கு வேறு திட்டங்களை நாங்கள் செய்யவுள்ளோம் என்றார். (2)

# கிராமத்திற்குள் நுண்நிதி நிறுவனத்திற்கு தடை;மத்தியஸ்தர் சபையை நாடியுள்ள நிறுவனம்

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் நுண்நிதி நிறுவனங்களின் அதிகரித்த செயற்பாட்டினால் தற்கொலைக்கு முகம்கொடுக்கவுள்ள பெண்தலைமைத்துவக் குடும்பங்களின் நலனைக் கருத்திற்கொண்டு சாந்தசோலைக்கிராமத்திற்குள் செயற்படும் கிராம அமைப்புக்கள் சில ஒன்றிணைந்து அப்பகுதியில் வைத்து நுண்நிதி நிறுவனம் கடன் வழங்கவும் பணம் வசூலிக்கவும் கடந்த வாரத்தில் நிறுவனங்களுக்கு தடை விதித்திருந்ததுடன் அந்நிறுவனங்களுக்கு எழுத்து மூலமாக அறிவிப்புக்களும் அனுப்பிவைத்தனர்.

இதையடுத்து அப்பகுதியில் வசித்து வரும் சிலர் பெற்ற கடனை குறித்த அலுவலகங்களுக்குச் சென்று செலுத்தி வருகின்றனர். இதனிடையே நுண்நிதி நிறுவனம் ஒன்று அப்பகுதியில் தனது நிறுவனத்தினால் கடன் பெற்றுக்கொண்டவர்களுக்கு எதிராக மத்தியஸ்த சபையின் கடிதங்களையும் அனுப்பிவைத்துள்ளது. கடன் பணம் பெற்றுக் கொண்ட சிலருக்கு இக்கடிதங்கள் கிடைக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில், குறித்த நுண்நிதி நிறுவனம் எமது மத்தியஸ்த சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிப் பிணக்கு தொடர்பான தீர்வொன்றிற்கு கொண்டு வருவதற்கு தாங்கள் விரும்பிய மத்தியஸ்தர் ஒருவரை தெரிவு செய்வதற்கு எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் வவுனியா சைவப்பிரகாசா மகளிர் கல்லூரியில் நடைபெறுகின்ற கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நுண்நிதி நிறுவனங்கள் சிலவற்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடனாளிகளுக்கும் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (2-281)

# புதிய அபராத முறைக்கு எதிர்ப்பு வேலை நிறுத்தம் தொடரும்

## தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய அபராத முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பரந்தளவிலான வேலை நிறுத்தம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தமது பிரச்சினைகளுக்கு அதிகாரிகள் நிரந்தரத் தீர்வு வழங்கும்வரையில் வேலை நிறுத்தம் தொடரும் என அச்சங்கத்தின் அமைப்பாளர் குமார ரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டின் வீதிக் கட்டமைப்பை நவீன மயப்படுத்தி அபராத விதிப்பு பழைய முறைக்கு இருக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை என்று இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

அதேவேளை பேருந்து பணியாளர்கள் ஆரம்பித்துள்ள வேலை நிறுத்தத்திற்கு தமது சங்கமும் ஆதரவு வழங்குவதில்லை என்று அனைத்து மாகாண பேருந்து உரிமையாளர்கள் சங்கம் கூறியுள்ளது.

இந்நிலையில் பேருந்து பணியாளர்கள் ஆரம்பித்துள்ள வேலை நிறுத்த போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவதாக தேசிய முச்சக்கர வண்டிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது. (2-9)





ஆசிரியர் கல்வியாளர்களுக்கான நிகழ்வு ஆசிரிய அபிவிருத்திக்கான தென்னாசிய மீபே வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்வியியலாளன் ஆய்வு சஞ்சிகையை சர்வதேச ஐரோப்பிய பல்கலைக்கழக நிபுணத்துவ ஆலோசகர் கலாநிதி பா.தனபாலன் வெளியிட்டு வைக்க, மகாவலி தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.றிஸ்கான் பெற்றுக் கொண்டார். கல்வியியலாளர்கள் பலர் கலந்து கொண்டர். (படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

பேலியகொட, பட்டிய சந்தியில் ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாண வடக்கு குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


இதன்போது 9 கிராமும் 620 மில்லி கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. களனி பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய ஒருவரே இவ்வாறுகைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் புதுக்கடை நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளார். (2-9)

# கைவிடப்பட்ட காத்தான்குளம் நெற்களஞ்சியம்

## ஆலை உபகரணங்கள் திருட்டு; பல இலட்சம் பண மோசடி

## ஆராய்கின்றார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர்



(மன்னார்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட காத்தான்குளம் கிராமத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டு தற்போது வரை எவ்வித செயற்பாடுகளும் இன்றி சேதமாகியுள்ள நிலையில் காணப்படும் "காத்தான்குளம் நெற்களஞ்சியம் மற்றும் அரிசி ஆலையை மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை நேரடியாக சென்று பார்வையிட்டார்.

மாந்தை மேற்கு விவசாய அமைப்பின் வேண்டுகோளுக்கு அமைவாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் 19.7 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீட்டில் குறித்த நெற்களஞ்சியம் மற்றும் அரிசி ஆலை புனரமைப்பு செய்யப்பட்டு கடந்த 2011 ஆம் ஆண்டு வைபவ ரீதியாக மாந்தை மேற்கு விவசாய அமைப்பிடம் கையளிக்கப்பட்டது.

எனினும் குறித்த நெற்களஞ்சியம் மற்றும் அரிசி ஆலைக்கு பல இலட்சம் ரூபாய் பெறுமதியான உபகரணங்கள் மற்றும் இதரப் பொருட்களும் வழங்கப்பட்டிருந்தன.

மாந்தை மேற்கு விவசாய அமைப்பு 2011 ஆம் ஆண்டில் இருந்து சுமார் இரண்டு வருடங்கள் வரை இயக்கி வந்த நிலையில் கைவிட்டுள்ளனர்.

இந்த நிலையில் சுமார் 5 வருடங்களுக்கு மேலாக எவ்வித செயற்பாடுகளும் இன்றி பாழடைந்த நிலையில் காணப்படுவதோடு, அன்றைய காலத்தில் செயற்பட்டு வந்த மாந்தை மேற்கு விவசாய அமைப்பு எவ்வித பராமரிப்பு மற்றும் கொடுக்கல்-வாங்கல்களை உரிய முறையில் சமர்ப்பிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த ஆலையில் காணப்பட்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதியான உபகரணங்களும் தற்போது திருடப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அண்மையில் இடம்பெற்ற மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் குறித்த நெற்களஞ்சியம் மற்றும் அரிசி ஆலை தொடர்பாக முறைப்பாடுகள் முன் வைக்கப்பட்டன.

அதன்போது ஒருங்கிணைப்புகுழு இணைத்தலைவர்களினால் குறித்த பிரச்சினை தொடர்பில் குழு ஒன்றை அமைத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு மாந்தை மேற்கு பிரதேச செயலாளருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் எஸ்.கேதீஸ்வரன், குறித்த ஆலைக்குச் சென்று பார்வையிட்டதோடு, பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடினார்.

உடனடியாக கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வந்த மாந்தை மேற்கு விவசாய அமைப்பின் பிரதிநிதிகளை அழைத்து குறித்த விடயங்கள், அமைப்பினூடான கொடுக்கல்-வாங்கல்கள் நிலுவை தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளவுள்ளதாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை 2011 ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்த மாந்தை மேற்கு விவசாய அமைப்பினால் பல இலட்சம் ரூபாய் நிதி மோசடிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் முன் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)




## ஆதார வைத்தியசாலையாக தரமுயர்வு; தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டபோதும், அதன் தேவைகள் பூர்த்தி செய்யப்படாததனால் தாங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மல்லாவி வைத்தியசாலை அண்மையில் ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளபோதும், இதன் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலை காணப்படுகின்றது.

அதாவது, அவசர சிகிச்சைப்பிரிவு வசதிகள் நோயாளர்களுக்கான போதிய விடுதி வசதியின்மை போன்ற பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன.

இதனால் இங்கே சிகிச்சை பெறச்செல்லும் நோயாளர்கள் வவுனியா மற்றும் கிளிநொச்சி வைத்தியசாலைகளுக்கு மாற்றப்படுவதால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவை ஒரு புறமிருக்க பிரேத அறையில் குளிரூட்டி வசதிகள், தண்ணீர்வசதி என்பன இல்லாமையினால் சடலங்களை பாதுகாப்பதிலும் சிரமங்கள் காணப்படுகின்றன. இவ்வாறான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து தருமாறு பிரதேச மக்கள் கோரியுள்ளனர். (2-315)

## மாந்தை கிழக்கில் நிரந்தர வீடுகள் 899 குடும்பங்களுக்குத் தேவை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் மீள்குடியேறிய ஆயிரத்து 667 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டபோதும் 899 குடும்பங்களுக்கான நிரந்தர வீட்டுத் தேவைகள் காணப்படுவதாக பிரதேச செயலகத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தைகிழக்குப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 15 கிராம அலுவலர் பிரிவுகளிலும் மூவாயிரத்து 83 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன.

இந்நிலையில் ஆயிரத்து 667 புதிய வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டதுடன், பகுதியளவில் சேதமடைந்த 575 வீடுகள் புனரமைக்கப்பட்டுள்ளன.


இவைதவிர, இரண்டாயிரத்து 96 மலசலகூடங்கள், 105 கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் 208 கிணறுகளும் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. இதேவேளை ஆயிரத்து 709 குடும்பங்ளுக்கு வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

899 குடும்பங்களுக்கான புதிய வீடுகள், 75 குடும்பங்களுக்கான பகுதித் திருத்த வீடுகள், 50 மலசலகூடங்கள், 250 கிணறுகள், 270 திருத்தப்படவேண்டிய கிணறுகள் போன்ற தேவைப்பாடுகள் காணப்படுவதுடன் ஆயிரத்து 100 குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகளும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

## கிளிநொச்சி 155 ஆம் கட்டையிலுள்ள

# புகையிரதக்கடவை சமிக்ஞை சீராக இயங்குவதில்லை

## பொது மக்கள் குற்றச்சாட்டு



(பரந்தன்)

கிளிநொச்சி 155 ஆம் கட்டை பாரதிபுரத்திற்கு செல்லும் பிரதான வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் புகையிரதக்கடவை சமிக்ஞை சீராக இயங்குவதில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

விவேகானந்த நகர், பாரதிபுரம், கிருஸ்ணபுரம், மலையாலபுரம், விநாயகபுரம், அம்பாள்குளம் ஆகிய கிராமங்களுக்கு செல்லும் மக்கள் இவ் வீதியை பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் குறித்த புகையிரதகடவை சீராக இயங்குவதில்லை என்றும் எழுப்பப்படும் ஒலியானது சரியாக கேட்பதில்லை எனவும் கடவையை புகையிரதம் அண்மிக்கும் போதே சமிக்ஞை விளக்குகள் ஒளிர்வதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன எனவும் தெரிவிக்கின்றனர்.

இந்தப் புகையிரத சமிக்ஞை தொடர்ந்தும் சிவப்பு நிற சமிக்ஞை காட்டியவாறு உள்ளது எனவும் இதனால் அச்சத்துடனேயே கடக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

அத்தோடு புகையிரதக் கடவைக்கு காப்பாளர் ஒருவர் நியமிக்கப்படுவார். ஆனால் இந்த கடவையில் எவரும் கடமையில் இல்லை என்பதுடன் குறித்த கடவையில் புகையிரதத்தில் மோதுண்டு உயிரிழப்புக்கள், விபத்துக்கள் என்பன இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சேதமடைந்த சமிக்ஞை விளக்குகளை சீர் செய்யாது மக்களின் உயிர்களைக் கருத்தில் கொண்டு புதிய சமிக்ஞை விளக்கை பொருத்துவதோடு பாதுகாப்பு கடமைக்கு ஊழியர் ஒருவரையும் நியமிக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-312)

# சிகை அலங்கார நிலையம் சேதம்; மனிதநேயமில்லாத காட்டுமிராண்டிச் செயல்

## வடமாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம் கண்டனம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் நகர்ப்பகுதியில் துணுக்காய் வீதியில் மாற்றுத் திறனாளி நடத்திய சிகை அலங்கார நிலையம் சேதமாக்கப்பட்டமையானது மனிதநேயம் இல்லாத காட்டுமிராண்டிகளின் இரக்கமற்ற செயலாகும்.

இதனைஎமதுவடமாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம்வன்மையாகக்கண்டிக்கின்றது என அனுப்பிவைத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள கண்டன அறிக்கையில்,

துணுக்காய் வீதியில் மாற்றுத்திறனாளி நடத்தி வந்த சிகை அலங்கார நிலையம் கடந்த 12ஆம் திகதி நள்ளிரவு கடையின் பின் கதவை உடைத்து உள்நுழைந்து கண்ணாடி மற்றும் உட் கண்ணாடிகள் அனைத்தையும் அடித்து நொருக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

வட மாகாண அழகக சம்மேளனத்தின் முல்லை மாவட்ட அங்கத்தவரான குறித்த நபர் நீண்ட காலமாக குறித்த பகுதியில் அழகக நிலையத்தை நடத்தி வருகின்றார்.

மாற்றுத்திறனாளியாக உள்ள இவர் பல்வேறு இடப்பெயர்வுகளைச் சந்தித்தது மட்டுமல்லாது பலமன உளைச்சல்களுக்கும்ஆளான நிலையில் தமது குடும்ப நிலையை கவனத்திற்கொண்டு பல சிரமங்களுக்கு மத்தியில்தொழில் நிலையத்தை நடத்தி வருகின்றார்.

மனிதநேயம் இல்லாத காட்டுமிராண்டிகளின் இவ்வீனச் செயலை எமது வட மாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம் வன்மையாக கண்டிக்கின்றது.

அத்தோடு இவ்விடயம் சம்பந்தமாக மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் நிலைய உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைவாக பொலிஸார் விசாரணைகளை தீவிரப்படுத்தி மாற்றுத்திறனாளியான நிலைய உரிமையாளருக்கு நட்டஈடு பெற்றுக் கொடுப்பதோடு மட்டும் நின்றுவிடாது வல்லிபுரம் மதிவரனின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி நீதியின் முன் குற்றவாளியை நிறுத்தி தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

## தென்னை பயிர்ச் செய்கையாளர்களுக்கு களப்பயிற்சி

சர்வதேச தென்னை தினமான செப்டெம்பர் 2 ஆம் திகதியை முன்னிட்டு கிளிநொச்சி பன்னங்கண்டி நாற்று மேடையில் தென்னை பயிர்ச்செய்கை சபையும் ஜின சேனா நிறுவனமும் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவநிறுவகமும் இணைந்து கிளிநொச்சி மாவட்ட கற்பகதரு சங்க உறுப்பினர்களுக்கும் தென்னை பயிர்ச்செய்கை சபையினால் தெரிவு செய்யப்பட்ட தென்னை பயிற்சியாளர்களுக்குமான களப்பயிற்சி பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பிரதேச அபிவிருத்தி வங்கியினர் தங்களது கடன் திட்டங்கள் பற்றி விளக்கமளித்தனர். இது தொடர்பாக பிராந்திய முகாமையாளர். தே. வைகுந்தன் கருத்து தெரிவிக்கையில், எதிர்வரும் காலங்களில் அரச வங்கிகளில் இருந்தும் கடன்களை பெற்று தென்னை பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியுமென கூறினார். இப் பயிற்சியின் போது 60 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். (2)

# ஏழு மாதங்களில் 282 கொலைகள்

(கொழும்பு)

இந்த வருடத்தின் கடந்த ஏழு மாதங்களில் மட்டும் இலங்கையில் 282 கொலைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன், 992 பாலியல் வன்புணர்வு சம்பவங்கள், 1779 கொள்ளைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

282 கொலைச் சம்பவங்களில் 28 கொலைகள் துப்பாக்கி பிரயோகத்தில் இடம்பெற்றுள்ள நிலையில், கடந்த 2017ஆம் ஆண்டு 452 கொலைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கடும் மழை வெள்ளப் பெருக்கால் இலங்கை-கொச்சி இடையிலான விமான சேவைகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

இலங்கைக்கும், கேரளா-கொச்சிக்கும் இடையிலான விமான சேவைகள் யாவும் மறு அறிவித்தல் வரையில் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கேரளாவில் 50 ஆண்டுகளாக இல்லாத வகையில் கடந்த 8ஆம் திகதி முதல் கனமழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக பெரும்பாலான அணைகளின் வான் கதவு திறக்கப்பட்டுள்ளதால் அனைத்து ஆறுகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதுதவிர பல இடங்களில் மண் சரிவும் ஏற்பட்டு பெரும் சேதத்தை ஏற்படுத்தி வருகிறது.

வயநாடு, கோழிக்கோடு, மலப்புரம், கண்ணூர், காசர்கோடு, பாலக்காடு ஆகிய மாவட்டங்களில் அதிக சேதம் ஏற்பட்டுள்ளது. வயநாடு மாவட்டம் முழுவதும் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளது.

. இந்த மாவட்டத்திலுள்ள பானாசுரா சாகர் அணையும் நேற்று முன்தினம் அதிகாலை முழு கொள்ளளவை எட்டியுள்ளது.

நேற்றுமுன்தினம் வயநாடு மாவட்டத்தில் குறிச்சயா, மக்கி மலை, தாமரச்சேரி மலைப்பாதை ஆகிய இடங்களில் பெரும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் அடுத்த 24 மணி நேரத்துக்கு கனமழைதொடரும்என்றுவானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடலோர மாவட்டமான கொச்சியில் மீண்டும் கனமழை பெய்து வருகிறது. இதனால், மாவட்டத்தின் பல இடங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

கனமழையால், கொச்சி சர்வதேச விமான நிலையம் மற்றும் அதைச்சுற்றியுள்ள பகுதியில்மழை நீர்கடல்போல் தேங்கியுள்ளது. இதனால், விமான சேவை முடங்கியுள்ளது.

நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிவரை விமான சேவைகள் கொச்சின் விமான நிலையத்தில் நடைபெறாது என்றும் பயணிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் விமான நிலைய தரப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

# 'மூச்சு விட்ட மூன்று வருடங்கள்' நல்லாட்சி அரசு குறித்து ஜே.சி



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்துக்கு மூன்று வருடங்கள் பூர்த்தியாவதாகத் தெரிவித்த உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ஜே.சி.அலவதுவல, அதுவே இலங்கை அரசாங்கம் "மூச்சுவிட்ட மூன்று வருடங்கள்" எனவும் தெரிவித்தார்.

சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இம்மாதத்துடன் நல்லாட்சி அரசாங்கத்துக்கு மூன்று ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அந்த மூன்று வருடங்கள்தான் சுதந்திரமாக மூச்சுவிட்ட வருடங்களாக அமைந்தன. காரணம், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் பிடியிலிருந்து விடுபட்டு மூன்று ஆண்டுகள் ஆகின்றன" என்றார்.

குறிப்பாக, "ஆட்சி மாற்றத்தின் பின்னர் சர்வதேச மட்டத்தில் பல வெற்றிகளைப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. அதனால் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன. உலக நாடுகள் மத்தியில் இலங்கையின் தலைவர்களுக்கு வரவேற்புக் கிடைக்கின்றது.

ஜி.எஸ்.பி.வரிச்சலுகையும் மீளக் கிடைத்துள்ளது. கடந்த காலங்களில் வெளிநாட்டுக் கொள்கை சரியாகப் பின்பற்றப்படாமையால் பெரும் பின்னடைவைச் சந்திக்க நேரிட்டுள்ளது. அதனால் பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகள் பெரும் பயனடைந்துள்ளன" எனவும் தெரிவித்தார்.

அத்துடன், "கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் பலர் நாட்டை விட்டுச் செல்லும் நிலை ஏற்பட்டது. கட்டுநாயக்க, ரத்துபஸ்வல ஆகிய இடங்களில் இடம்பெற்ற அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது, பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். சிலாபத்தில் அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய மீனவர்கள் மீதும் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. ஆனால், நல்லாட்சியில் சகலருக்கும் ஆர்ப்பாட்டம் செய்ய முழுமையான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நல்லாட்சி அரசின் மூன்றாண்டு ஆட்சி நிறைவு காணி உறுதிப்பத்திரம் வழங்க ஏற்பாடு-கயந்த

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் மூன்றாண்டு நிறைவை முன்னிட்டு சில மாவட்டங்களில் மக்களுக்கான காணி உறுதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளதாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.



இன்று 17 ஆம் திகதி நல்லாட்சி அரசாங்கத்தின் மூன்றாண்டு நிறைவை முன்னிட்டு இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரும்அமைச்சரவைத்துணைப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதற்கமைய இன்று 17 ஆம் திகதி மொனராகலையிலும் 18 ஆம் திகதி மாத்தறையிலும் 19 ஆம் திகதி கேகாலையிலும் 21 ஆம் திகதி காலி மாவட்டத்திலும் உள்ள மக்களுக்கு காணி உரிமம் வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-7)

# சைட்டம் எதிர்ப்பு பெயர் மாற்றம்



(கொழும்பு)

சைட்டம் எதிர்ப்பு மாணவர் இயக்கம், சுதந்திர கல்விக்கான மாணவர் இயக்கம் என பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு விஹாரமாதேவி பூங்காவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாநாட்டில் இவ்வாறு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன்போது, பெயர்மாற்றம் செய்யப்பட்டது தவிர்ந்த மேலும் 6 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மாணவர்களின் கல்வி உரிமையை ஏற்றுக்கொள்ளுதல், நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் 6 வீதத்தை கல்விக்காக ஒதுக்கீடு செய்தல், பாடசாலை கல்வியில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்த்தல், தனியார் பல்கலைக்கழகங்களை இல்லாது செய்தல் உள்ளிட்ட 6 யோசனைகளே இதன்போது நிறைவேற்றப்பட்டுள்ளன. (இ-7)

# இலங்கையுடனான இராஜதந்திர உறவுகளுக்கு பாகிஸ்தான் பி.எம்.எஸ்.காஷ்மீர் கப்பல் சாட்சி

(கொழும்பு)

பி.எம்.எஸ்.காஷ்மீர் கப்பலின் விஜயம் இலங்கை-பாகிஸ்தானுக்கிடையில் காணப்படுகின்ற வலுவான இராஜதந்திர உறவுகளுக்கு சாட்சியாவதுடன் அதனை மேலும் வலுப்படுத்துவதனை இலக்காகக் கொண்டுள்ளது என பாகிஸ்தான் பி.எம்.எஸ் காஷ்மீர் கப்பலின் தளபதி அசுஹர் மெஹ்முத் தெரிவித்தார்.

பாகிஸ்தான் பி.எம்.எஸ் காஷ்மீர் கப்பலின் வரவேற்பு நிகழ்வுகள் மிகவும் வர்ணமயமான வகையில் சுதந்திர தின நிகழ்வுகளுக்கு இணையாக கடந்த 14 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தில் இடம்பெற்றது. இதன்போதே கப்பல் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெற்றோலிய வளங்கள் மற்றும் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க இந் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இலங்கை கடற்படையின் தளபதி வைஸ் அட்மிரல் எஸ்.எஸ்.ரணசிங்க, முப்படைகளின் அதிகாரிகள், இராஜதந்திரிகள், பாகிஸ்தானிய உயர் ஸ்தானிகர் பணியகத்தின் அதிகாரிகள், வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த பிரமுகர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



விருந்தினர்களை வரவேற்கையில் கப்பல் தளபதி அசுஹர் மெஹ்முத் மேலும் தெரிவிக்கையில்,

"இவ்விஜயம் இலங்கை-பாகிஸ்தானுக்கிடையில் காணப்படுகின்ற வலுவான இராஜதந்திர உறவுகளுக்கு சாட்சியாவதுடன் அதனை மேலும் வலுப்படுத்துவதனை இலக்காக் கொண்டுள்ளது" எனவும் கப்பல் பகுதியில் தரித்திருந்த காலப் பகுதியில் தங்களுக்கு வழங்கப்பட்ட சிறந்த விருந்தோம்பல் மற்றும் வரவேற்பிற்காக இலங்கை அதிகாரிகளுக்கு நன்றியும் கூறினார்.

அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவிக்கையில், "எனது நெருங்கிய நண்பர் இம்ரான்கான் பாகிஸ்தானிய பிரதமராக பதவியேற்கப்போவது மிகவும் பெருமைக்குரிய தருணமாகும்.

இம்ரானின் தலைமைத்துவத்தின் கீழ் இருநாடுகளினதும் உறவுகள் மேலும் அபிவிருத்தி நிலையை அடுத்த கட்டத்தினை அடையும் என நம்பிக்கை கொள்கின்றேன்" எனத் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை-பாகிஸ்தான் நட்புறவினை பிரதிபலிக்கும் வகையில் கேக்கை இலங்கை கடற்படையின் தளபதி, பாகிஸ்தானிய பதில் உயர்ஸ்தானிகர் ஜான்பாஸ்கான் மற்றும் பாதுகாப்பு ஆலோசகர்ஆகியோரால் இணைந்து வெட்டப்பட்டது. (இ-7)

# கொழும்பு மாநகர சபை உறுப்பினர்களின் சம்பளம் 125 வீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபை உறுப்பினர்களின் சம்பளத்தை 125 வீதத்தால் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாநகர சபையின் நிதி தொடர்பிலான நிலையியற்குழு இது தொடர்பிலான தீர்மானத்தை எடுத்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற மாநகர சபை அமர்வில், மாநகர சபை முதல்வர் ரோஸி சேனநாயக்க மாநகர சபை உறுப்பினர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான பிரேரணையை முன்வைத்தார்.

உறுப்பினர்களின் கௌரவத்திற்கு ஏற்ற வகையில் அவர்களின் கொடுப்பனவை 25 ஆயிரம் ரூபாவால் அதிகரிப்பது சிறந்தது என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. தற்போது உறுப்பினர்களுக்கு 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுவதுடன் உறுப்பினர்களின் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டால் 119 உறுப்பினர்களுக்கு தற்போது செலுத்தும் 23 இலட்சம் ரூபா கொடுப்பனவு 53 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கும் எனக் கூறப்படுகின்றது.

இந்த நிலை குறித்த விடயமானது தற்போது பெரும் சர்ச்சையினை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பிரமோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கிழக்கு ஊரி சாட்டி திருப்பதியுறை சிவபூ தாரஜ் தேவஸ்தான பிரமோற் சவ விஞ்ஞாபனம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற் றத்துடன் ஆரம்பமாகும். 9 தினங்கள் நடைபெறும் பிரமோற்சவத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக் கிழமை சப்பறத் திருவிழாவும் 25 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெற வுள்ளன. (இ

## தொண்டராசிரியர்கள் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் இறுதிக் கட்ட நியமனத்தில் பாதிக்கப்ப ட்டு ஆளுநர் அலுவலகத்தில் மேன்முறையீடு செய்த தொண் டராசிரியர்கள் அனைவரும் அனைத்து ஆவணங்களு டனும் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரிய குளத்தில் அமைந்துள்ள புதிய கல்லூரி மண்டபத்தில் ஒன்று கூடுமாறு வட மாகாண சங்கப் பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர்.

தொடர்புகளுக்கு யாழ்ப் பாணம்-அருட்செல்வம் தொலை பேசி இலக்கம்- 077 437 96 06, கிளிநொச்சி, மன்னார், வவு னியா, முல்லைத்தீவு- மதிவத னன் தொலைபேசி இலக் கம்- 077 262 0307. (இ

## ஆலய மகா சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தான மகா சபைக் கூட்டம் எதிர்வரும் 19.08.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

இதில் மகா சபை அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது பங்குபற்றும் படி ஆலயத் தலைவர் அறிவித்துள்ளார். (இ

## நல்லூர் ஆலயச் சூழலில்

### 'காட்சி ஒன்று கருத்து இரண்டு'

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தன் மஹோற் சவத்தை முன்னிட்டு தொலைக் காட்சியின் அனுசரணையில் ஆன்மீகநிகழ்வுகள் நல்லூர் செல் லப்பா சுவாமிகள் நினைவால யத்தில் மாலை 4.30 மணி யளவில் நடைபெறுகின்றது.

இதில் இரண்டாம் நாளான இன்று ''காட்சி ஒன்று கருத்து இரண்டு'' என்னும் தலை ப்பில் கோப்பாய் ஆசிரிய பயி ற்சி கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் சொற்பொழிவாற் றுவார். தொடர்ந்து பஜனை நிகழ்வுகள் இடம்பெறும். (இ

## தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தசுவாமி கோயி லின் மஹோற்சவத்தை முன்னி ட்டு இலங்கை இளங்கலை ஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணை யில் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8.15 மணிவரை தெய்வீக இசைய ரங்கு நடைபெறுகின்றது.

இதில் இன்று வெள்ளிக்கி ழமை பாட்டு ஜே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன், க.சித் திரா, வயலின் அ.ஜெயரா மன், ஆர்மோனியம் ந.செல் வச்சந்திரன், மிருதங்கம் சதா வேல் மாறன், கடம் அ.செல் வரத்தினம், கெஞ்சிரா எஸ்.சிவ மூர்த்தி ஆகியோரின் இசைய ரங்கு இடம்பெறும். (இ

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று இரண்டாம் திருவிழா



### நல்லூர் வெண்பா

*தங்கத் தமிழின் துணையான சிறுவன்ரீ*
*எங்கும் தமிழின் ஒளிலோங்க-பங்கமெலாம்*
*போக்கவே பார்வதி பாலகன் கரக்கூர்வேல்*
*காக்கும் கதியில் விரைந்து.*

**கு. சரவணன்.**

## அல்லைப்பிட்டி கடற்பகுதியில் சீன அதிகாரிகள் அகழ்வு





(யாழ்ப்பாணம்)

யாழ்.அல்லைப்பிட்டி கடற் பகுதியில் சீன நாட்டுக் கப்பல் ஒன்று கடந்த 500 ஆண்டு களுக்கு முன்பு மூழ்கியதாக தெரிவித்து, சீன நாட்டுத் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் இலங்கைத் தொல் பொருள் திணைக்களத்து டன் இணைந்து அகழ்வு ஆராய்ச்சியில் ஈடுபட்டுள் ளனர்.

யாழ்ப்பணத்திற்கும் சீனா விற்கும் 1200 ஆண்டுகளு க்கு முன்னர் தொடர்புகள் இருந்திருக்கலாம் என தெரி விக்கும் வரலாற்று ஆய்வா ளர்கள், அல்லைப்பிட்டி பகு தியில் 500 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை கடற்பரப் பில் பயணித்த ஓர் கப்பல் விபத்திற்கு உள்ளாகி மூழ்கி யதாகவும், அதன் எச்சங்கள் அப்பகுதியில் இருப்பதாகவும் கடந்த 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆரம்ப ஆய் வில் சீன நாட்டு தொல்பொ ருள் ஆய்வாளர்கள் ஈடுபட்டு இருந்தனர்.

அதன்போது சில சீன நாட்டு நாணயம் மற்றும் சீனக் கப்பலின் சில பாகங் களும் மீட்கப்பட்டதாக தெரி விக்கப்பட்டு அப்பகுதியில் ஆய்விற்கு ஏற்பாடு செய் யப்பட்ட நிலையில் நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு போர் கார ணமாக குறித்த ஆய்வுப் பணி இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் தற்போது சீன அரசு உத்தியோக பூர்வ மாக இலங்கை அரசிடம் எழுத்தில் விண்ணப்பித்து இரு நாட்டு அரசுகள் ஒப்பந் தம் மேற்கொண்டு அதன் அடிப்படையில் தற்போது சீன மற்றும் இலங்கை நாடுக ளின் தொல்பொருள் திணை க்களங்கள் இணைந்து அல் லைப்பிட்டி கடற்பகுதியில் குறித்த ஆய்வில் ஈடுபட்டுள் ளனர்.

அதேவேளை பருத்தித் துறை துறைமுகப் பகுதியில் காணப்படும் ஒல்லாந்தர் கால கோட்டை மற்றும் அதற்கு முற்பட்ட கால துறைமுக சான்றுகளை மீட்கும் வகை யிலும் இலங்கை தொல்லி யல் திணைக்களம் ஆய்வுப் பணிகளை ஆரம்பித்து உள் ளது.

ஆசிய அபிவிருத்தி வங் கியின் நிதி உதவியுடன் பருத்தித்துறை துறைமுகம் புனரமைக்கப்படவுள்ள நிலை யில் அதற்கு முன்னதாக அங்கிருக்கும் வரலாற்று தொல்லியல் சான்றுகளை மீட்பதற்காக தொல்லியல் திணைக்களம் ஆய்வுப் பணி களை ஆரம்பித்துள்ளது.

அத்துடன் குறித்த இரு ஆய்வுப் பணிகள் தொடர்பி லான முழுமையான தகவல் களை உத்தியோக பூர்வமாக ஊடகங்களுக்கு தெரிவிக் கப்படும் என தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-9)

### "இன்னல் தீர்த்தெமை ஆட்கொள்வாய்"

*என்ன வளமில்லை ஐயா!*
*எமக்கேன் இந்தகுறை ஐயா!*
*சொன்ன வாக்கை மீறலாமா!*
*சோகத்திலெம்மை ஆழ்த்தலாமா!*
*உன்னை நினைத்தே நாமிங்கு வந்தோமையா!*
*உள்ளமினும் இரங்காதோ தனிவடிவேலையா!*
*இன்னமும் பாராமுகம் எதுக்கையா!*
*இன்னல் தீர்த்தெமை ஆட்கொள்வாய்*
*நல்லை ஆளும் கந்தையா!*

**பொ. புனிதன், வரியப்புலம்.**

### "நிலை தடுமாறுதே ஆறுதல் தாருமையா!"

*நிலை தடுமாறுதே நிம்மதியும் போகுதுவே!*
*நிரந்தர தீர்வுதனை நிர்மலா தந்திடுவாய்!*
*தலைப்பரம் கொண்டோரது தன்னலச் செயல்தனை*
*தணிகாசலா! நீயே தடுத்து தண்டனை கொடையா!*
*மலைபோல் துன்பம் மனதை வாட்டிவதைத்தாலும்*
*மால்மருகா! ஓடிவந்து நீதான் தீர்த்திடனும்!*
*அலைபோல் பக்தர்களின் அரோகரா கோசங்களுடன்*
*ஆடிவரும் நல்லூர் கந்தா!*
*நீயே ஆறுதல் அளித்திடுவாய் ஆறுமுகா!*

**பொ. புவனேந்திரன் சுன்னாகம்.**

## மாவட்ட சிறுவர் சபை மீள அமைத்தல்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட சிறுவர் சபை மீள அமைத்தலும் பயிற்சியும் கடந்த 13 ஆம் திகதி யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு இணைப் பாளர் க.மனோகரன் தலை மையில் நடைபெற்றது.

15 பிரதேச செயலகங்களி லிருந்தும் வருகைதந்திருந்த பிரதேச சிறுவர் சபை உறுப் பினர்களும் சிறுவர் கழக நிர்வாக உறுப்பினர்களுக் கும் முன்னைய மாவட்ட சிறுவர் சபை உறுப்பினர்க ளுக்கும் சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் பங்களிப்பு, சிறுவர் கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள், அனர்த்தங் களால் சிறுவர்களுக்கு ஏற்ப டும் தாக்கங்கள், சிறுவர்களு க்காக பணிபுரியும் நிறுவனங் கள் மற்றும் வளங்களை அடையாளம் காணல் போன்ற விடயங்கள் இந்தப் பயிற்சி யில் நடைபெற்றது. இப் பயிற் சியின் வளவாளர்களாக மாவ ட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு இணைப்பாளர் க.மனோகரன் மற்றும் ஜெ.தற்பரன் சட்டத்த ரணி, சி.சி.எச். நிறுவன நிகழ்ச்சித்திட்ட இணைப் பாளர் ஸ்ரீ.கஜேந்திரன் ஆகி யோர் கலந்துகொண்டனர்.

மாவட்ட சிறுவர் சபைக் கான தேர்தல் வாக்கெடுப்பில் 12 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் இரண்டு வருடங்களுக்கு செயற்படுவார்கள். இந் நிகழ் வில் சி.சி.எச். நிறுவன நிக ழ்ச்சித்திட்ட இணைப்பாளர், வேள்விசன் நிறுவன உத்தி யோகத்தர், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் கள், சிறுவர்கள், பெற்றோர் கள் கலந்து கொண்டனர். (இ-7)

### தொலைபேசியை வைத்திருந்த மாணவனிடம் விசாரணை

கம்பஹாவில் க.பொ.த. உயர்தரப் பரீட்சை நடை பெறும் நிலையம் ஒன்றில், உயர்தரப் பரீட்சை எழுதிக் கொண்டிருந்த பரீட்சார்த்தி ஒருவர், தனது கையடக்கத் தொலைபேசியை வைத்துக் கொண்டு பரீட்சை எழுதிய சம்பவம் தொடர்பில், பரீ ட்சைகள் நிறைவடைந்த பின் னர் உடனடியாக விசாரணை ஆரம்பமாகும் என்று, பரீட்சை கள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார். குறித்த மாணவனுக்கு ஏனைய பாட பரீட்சையை எழுதுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என் றும் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (இ-7)

### ஆறுமுகன் கொடியேறுது பார்



*காக்கும் வேலவனே*
*காண்பவரின் பேரொளியே*
*கோயிலுறை மயிலூரான்*
*கொடியின்று ஏறுது பார்!*
*ஆக்கமெல்லாம் உன் தயவால்*
*அடியவரும் நலம் காண*
*ஆவணியில் ஆனந்தமாய்*
*அழகன் கொடி உயருது பார்*
*தூக்கமது நாமிழந்து*
*தவித்திருந்த போதொழிந்து*
*திக்கெட்டும் மகிழ்வினிலே*
*தங்கக்கொடி பறக்குது பார்*
*ஏக்கமது மனம்மகிழ*
*எந்நாளும் துணை நீயே!*
*ஆறுமுகன் ஏறுங்கொடி*
*ஆறுதலும் கோடி பெறும்*

**கலைமாமணி க. ஆர். திருத்துவராஜா**

### நல்லைக் குமரப் "பா"

**அண்ட சராசரம் யாவையுமே**
**ஆம்ந்தே காக்கும் நோக்குடையான்**
**பண்டும் இன்றும் என்றும்வன்**
**பாழும் வினைகள் ஓட்டிடுவான்**
**எண்ணி யவனை மனமுருகி**
**ஏற்றிற் றன்னைக் காட்டிடுவான்**
**வண்ண மயிலில் வேலுடனே**
**வருவான் நல்லைக் குமரப்பா!**

**கலாபூஷணம், சந்தக்கவிஞர். நவ. பாலகோபால்**

## நாட்டின் முன்னேற்றத்திற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும்-சி.பி.தமிழில் அழைப்பு

(கொழும்பு)

நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல அனைவ ரும் ஒன்றிணைய வேண் டும் என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.பி.ரத்நாயக்க அழைப்பு விடுத் துள்ளார். கொழும்பில் நேற்று முன் தினம் புதன்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ் வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

இதன்போது தமிழ் மொழி யில் உரையாற்றிய அவர், இனவாதம் மற்றும் மதவா தம் இல்லாத அரசாங்கம் ஒன்றினை உருவாக்குவ தற்காக அனைவரும் ஒன்றி ணைய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

# பாரதம்

## கேரளாவில் தொடரும் அவலம்! உயிரிழப்பு 80 ஆக உயர்வு

### மீட்புப்பணிகள் தீவிரம்





(திருவனந்தபுரம்)

கேரள வெள்ள அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 80 ஆக அதிகரித்துள்ளதுடன், குறித்த பிரதேசங்களில் மீட்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த மீட்பு நடவடிக்கைகளுக்காக பிரதமர் நரேந்திர மோடியின் விசேட பணிப்பின் பேரில், 3 ஹெலிகொப்டர்களுடன் மேலதிக இராணுவத்தினரும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் மீட்புப் பணிகளுக்காக 18 விசேட படையணிகளுடன், மீட்பு நடவடிக்கைகளுக்கான விசேட உபகரணங்களும் அனுப்பி வைத்துள்ளதாக மத்திய அனர்த்த முகாமைத்துவப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந் நிலையில், ஓடக்காயம், ஊரங்காத்திரி, வெற்றிலப்பாரா ஆகிய மூன்று மாவட்டங்களில், பாரிய மண்சரிவுகள் இடம் பெற்றுள்ளதாகவும் மத்திய அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (7)

## பாடசாலையில் குண்... 50 மாணவர்கள் ...




(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டின் காபூல் நகரில் உள்ள பாடசாலை வகுப்பறையில் தற்கொலைப்படை பயங்கரவாதிகள் நடத்திய குண்டுத் தாக்குதலில் 50 பேர் பலியாகினர். ஆப்கானிஸ்தான் நாட்டின் காபூல் அருகே உள்ள தாஷ்த் இ பார்ச்சி என்ற

## முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் உடல் நிலை மிகவும் கவலைக்கிடம்

### நலம் விசாரிக்கும் அரசியல் தலைவர்கள்



(டில்லி)

முன்னாள் பிரதமர் வா்ஜ்பாயின் உடல்நிலை மேலும் மோசமடைந்துள்ள நிலையில், பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானி நேற்று வைத்தியசாலைக்கு சென்று உடல் நிலை குறித்து விசாரித்தார்.

முன்னாள் பிரதமர் வாஜ்பாய் (வயது 93) உடல் நலக் குறைவு காரணமாக கடந்த ஜூன் மாதம், டில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

சிறுநீரக குழாய் நோய்த் தொற்று, சிறுநீர் பாதை நோய்த்தொற்று, மார்பு வலி உள்ளிட்ட பல்வேறு பாதிப்புகள் இருந்ததால் தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. வாஜ்பாயின் உடல் நிலை சீராக இருப்பதாகவும், வைத்தியர்கள் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் வைத்தியசாலை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பிரதமர்மோடிமற்றும்மூத்த அமைச்சர்கள் அவ்வப் போது வைத்தியசாலைக்கு சென்று வாஜ்பாய் உடல் நிலைபற்றி விசாரித்து வருகின்றனர். (7)

## 50 வருட பழைமையான பாலம் வீழ்ந்து விபத்து; உயிரிழந்தவர்களுக்கு பாப்பரசர் இரங்கல்!



(ரோம்)

இத்தாலியில் 50 வருட பழைமைவாய்ந்த பாலம் இடிந்து வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தவர்களுக்கு பாப்பரசர் பிரான்சிஸ் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அத்துடன், காயமடைந்தவர்களும் விரைவில் குணமடைந்து வருவதற்கு, தான் பிரார்த்திப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இத்தாலியின் ஜெனோவா நகரில் நேற்று முன்தினம் பாலம் இடிந்து வீழ்ந்ததில் 46 பேர் இதுவரை உயிரிழந்துள்ளதுடன் 16 பேர் காயமடைந்துள்ளதாகவும், 12 பேரை காணவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மோப்ப நாய்கள், சுமார் 250 தீயணைப்புப் படையினர்கள் மற்றும் மீட்புப் பணியாளர்கள் தொடர்ந்தும் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், குறித்த விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு பாப்பரசர் பிரான்சிஸ் நேற்று புதன்கிழமை இரங்கல் தெரிவித்திருந்ததுடன், விபத்தில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருபவர்களும் விரைவில் குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என பிரார்த்திப்பதாக கூறினார். (7)

## துருக்கி இரட்டை வரி விதிப்பு

### வெள்ளை மாளிகை கண்டனம்

(அங்காரா)

அமெரிக்க இறக்குமதி பொருட்கள் மீதான வரிகளை துருக்கி இரட்டிப்பாக்கியுள்ளமைக்கு வெள்ளை மாளிகை கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

துருக்கி பொருட்களின் இறக்குமதி மீதான வோஷிங்டனின் நகர்வை தொடர்ந்து, அமெரிக்க இறக்குமதிகளின் வரிகளை இரட்டிப்பாக்க துருக்கி தீர்மானித்தது.

இந்நிலையில் இது தொடர்பாக வெள்ளை மாளிகையில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த வெள்ளை மாளிகையின் பேச்சாளர் சாரா சண்டர்ஸ் இதனை தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், துருக்கியின் இந்த வரி விதிப்பானது நிச்சயமாக வருந்தத்தக்கது. அது மாத்திரமின்றி துருக்கி தவறான திசையில் காலடி எடுத்து வைத்துள்ளது.

துருக்கியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அமெரிக்க பாதிரியார் விடுவிக்கப்படினும், துருக்கி மீதான வரிகள் நீக்கப்படமாட்டாது. வரி விதிப்பானது தேசிய பாதுகாப்பு சார்ந்தவை எனத் தெரிவித்தார். கடந்த 2016ஆம் ஆண்டு துருக்கியின் ஆட்சியை கலைப்பதற்கு முன் னெடுக்கப்பட்ட நடவடிக்கையின் போது, அமெரிக்காவைச் சேர்ந்த அண்ட்ரூ பிரன்சன் என்ற பாதிரியார் துணை புரிந்ததாக குற்றஞ் சாட்டப்பட்டது.

இதனைத் தொடர்ந்து துருக்கியில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக பணியாற்றி வந்த குறித்த அமெரிக்க பாதிரியார் கைது செய்யப்பட்டு, ஒன்றரை வருட காலமாக சிறை வைக்கப்பட்டார்.

சிறையிலிருந்து கடந்த 26ஆம் திகதி விடுவிக்கப்பட்ட பாதிரியார் தற்போது வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், அவர் மீதான குற்றச்சாட்டு நிரூபணமாகும் பட்சத்தில் 35 வருடகால சிறைத்தண்டனை விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், அவரை விடுவிக்க வேண்டுமென அமெரிக்கா தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வருகின்றது.

இந்த விடயம் இரு நேட்டோ நட்பு நாடுகளுக்கும் இடையே முரண்பாடுகளையும், பதற்றங்களையும் தோற்றுவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## 57 ஆண்... திருட்டுப்போ... இந்தியாவிட...


(லண்டன்)

இந்தியாவில் இருந்து 57 ஆண்டுகளுக்கு முன்பு திருட்டுப்போன 12ஆம் நூற்றாண்டை சேர்ந்த வெண்கல புத்தர் சிலையை பிரிட்டன் பொலிஸார் இந்தியாவிடம் ஒப்படைத்தனர்.

வெண்கலத்தால் ஆன 12ஆம் நூற்றாண்டை சேர்ந்த 14 புத்தர் சிலைகள் பீகார் மாநிலம் நாளந்தாவில் உள்ள தொல்லியல் துறை அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வந்தன. இந்த சிலைகள் 1961ஆம் ஆண்டு காணாமல் போனது.

இந்த சிலைகளில் ஒரு புத்தர் சிலை மட்டும் பல கைகளுக்கு மாறி இறுதியில் லண்டனில் உள்ள கலை மற்றும் தொல்பொருட்கள் கூடத்தில் இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஏலத்துக்கு விடப்பட இருந்தது. இந்த சிலை இந்தியாவில் இருந்து திருடப்பட்டது

## பிரிட்டனில் ... கொண்டாடி...






# வெளிநாடு

## ண்டுவெடிப்பு

## ர் உயிரிழப்பு



உள்ள வகுப்பறையில் தற்கொலைப்படைப் பயங்கரவாதிகள் நடத்திய குண்டுத் தாக்குதலில் 50 பேர் பலியாகியுள்ளனர்.

பல்கலைக்கழக நுழைவுத்தேர்வுக்கு பயிற்சி பெற்று வரும் மாணவர்கள் இருந்த வகுப்பறையை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பலியான அனைவருக்கும் 18 வயதுக்கும் குறைவாக இருக்கும் என குண்டு தாக்குதலை நேரில் பார்த்தவர்கள் கூறியுள்ளனர்.

மேலும், பலர் காயமடைந்துள்ளதால் பலியானவர்களின் எண் ணிக்கை அதிகமாகலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

பகுதியில் தனியார் கல்வி மையம் செயற்பட்டு வருகிறது.

இந்நிலையில், இந்த மையத்தில்

## சூடானில் படகு கவிழ்ந்து விபத்து! 25 சிறுவர்கள் நீரில் மூழ்கிப்பலி

(கார்டவும்)

சூடானில் நைல் நதியில் சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பாடசாலைச் சிறுவர்கள் 25 பேர் நீரில் மூழ்கி பலியான சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சூடானில் தலைநகர் கார்டவும் பகுதியில் இருந்து 750 கிலோ மீற்றர் வடக்கே அமைந்த நைல் நதியில் படகு ஒன்று சென்று கொண்டிருந்தது. அதில் பாடசாலைக்கு செல்லும் சிறுவர்கள் 40 இற்கும் மேற்பட்டோர் பயணம் செய்துள்ளனர்.

இந்நிலையில், இயந்திரக் கோளாறு காரணமாக பாதி வழியில் நின்ற படகு திடீரென தண்ணீரில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.



இதில், படகில் பயணம் செய்த பாடசாலைச் சிறுவர்களில் 25 பேர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளதாக முதல்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

உயிரிழந்த சிறுவர்களின் சடலங்களை மீட்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

படகு கவிழ்ந்து சிறுவர்கள் 25 பேர் பலியான சம்பவம் அப்பகுதி மக்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (7)

## வர்த்தகப்போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைக்கு தயார்

### துருக்கி தெரிவிப்பு

(அங்காரா)

வர்த்தகப் போரினை முடிவுக்கு கொண்டுவரும் முகமாக மேற்கொள்ளப்படவுள்ள பேச்சுவார்த்தைக்கு, அமெரிக்கா உடன்பட்டால், அதற்கு தயாராக இருப்பதாக துருக்கி தெரிவித்துள்ளது.

துருக்கி ஆட்சி கவிழ்ப்பு முயற்சிக்கு அமெரிக்க பாதிரியார் ஒருவர் துணை புரிந்ததாக குற்றம் சாட்டி அவரை துருக்கி அரசு வீட்டுக்காவலில் வைத்துள்ளது.

இதன் பின்னணியில் இரு நாடுகளுக்குமிடையில் முறுகல் நிலை தொடர்ந்து வரும் நிலையில், பாதிரியாரை விடுவிக்குமாறு அமெரிக்கா கோரிக்கை விடுத்தது.

இருப்பினும், துருக்கி அரசு அவரை விடுவிக்க மறுப்பு தெரிவித்ததால், துருக்கிக்கு எதிராக அமெரிக்கா வரி விதித்தது.

அமெரிக்காவின் இச்செயற்பாட்டிற்கு எதிராக துருக்கி நேற்று முன்தினம் இரட்டை வரி விதித்துள்ள அதே சந்தர்ப்பத்தில், துருக்கியின் பொருளாதாரத்தை பாதிக்கும் வகையில் அமெரிக்கா செயற்படுவதாலேயே வரிவிதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக துருக்கி தெரிவித்திருந்தது.

இந்நிலையில், அமெரிக்கா உடன்பட்டால் பேச்சுவார்த்தைக்கு தயார் என துருக்கி ஜனாதிபதி எர்டோகனின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இரு நாடுகளுக்குமிடையில் தொடரும் முறுகல் நிலையை தவிர்க்கும் பொருட்டு வெள்ளை மாளிகையின் பேச்சாளருடன், அமெரிக்காவுக்கான துருக்கி தூதுவர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் எர்டோகனின் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (7)

## ண்டுகளுக்கு முன் போன புத்தர் சிலை

### டம் ஒப்படைத்த பிரிட்டன்



என்பது அறியாமலேயே அது ஏலத்துக்கு கொண்டு செல்லப்பட்டதாக தெரிகிறது.

இதற்கிடையே, இங்கிலாந்து கலைப்பொருட்கள் குற்றப்பிரிவு பொலிஸாரும், இந்தியா பிரைட் புராஜெக்ட் என்னும் அமைப்பைச் சேர்ந்த விஜய் குமார் என்பவரும் இந்த வெண்கல புத்தர் சிலை நாளந்தாவில் இருந்து திருட்டுப்போன அதே புத்தர் சிலை தான் என்பதை கடந்த மார்ச் மாதம் உறுதி செய்தனர்.

இதைத்தொடர்ந்து, இந்த சிலையை இந்தியாவுக்கு மீட்டுக் கொண்டு வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் இந்த சிலையை லண்டன் நகரின் ஸ்கொட்லாந்து யார்டு பொலிஸார் சட்டரீதியாக மீட்டனர்.

இந்த புத்தர் சிலை லண்டனில் நேற்று முன்தினம் நடந்த இந்திய சுதந்திர தின விழாவின் போது முறைப்படி அங்குள்ள இந்திய தூதரக அதிகாரி வை .கே.சின்ஹாவிடம் ஒப்படைக்கப்பட்டது. (7)

## ல் சுதந்திரதினத்தை டிய இந்திய வீரர்கள்




(லண்டன்)

பிரிட்டனில் சுற்றுப்பயணம் செய்து வரும் இந்திய கிரிக்கெட் அணியினர் இந்தியாவின் சுதந்திர தினத்தை ஒட்டி தேசியக் கொடியை ஏற்றி மரியாதை செலுத்தியுள்ளனர்.

இந்திய அணி தற்போது பிரிட்டனில் சுற்றுப்பயணம் செய்து வருகிறது. முதல் இரண்டு டெஸ்ட் போட்டியில் தோல்வியை சந்தித்ததால் கடும் விமர்சனத்துக்கு உள்ளான இந்திய அணி மூன்றாவது டெஸ்ட் போட்டிக்காக தீவிர பயிற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், இந்தியாவின் சுதந்திர தினத்தை ஒட்டி வீரர்கள் தங்கியுள்ள ஹோட்டலுக்கு வெளியே தேசியக்கொடி ஏற்றப்பட்டு அனைத்து வீரர்களும்மரியாதை செலுத்தினர். இந்த புகைப்படங்களை டுவிட்டரில் பதிவு செய்து அவர்கள் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர். (7)

## காஸா எல்லைக்குள் வர்த்தகப் பொருட்களை மீண்டும் அனுமதித்த இஸ்ரேல்



(ஜெருசலேம்)

இஸ்ரேல் மீண்டும் காஸா எல்லைக்குள் வர்த்தக பொருட்களை நேற்று முன்தினம் புதன்கிழமை அனுமதித்துள்ளது. இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே நீண்ட கால யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவதில் எகிப்து மத்தியஸ்தம் வகிப்பதன் ஒரு சமிக்ஞையாக இது அமைந்துள்ளது.

பாலஸ்தீனிய குடியேற்றத்தின் மேலாதிக்க ஆயுதக் குழுவாக ஹமாஸ் திகழ்கின்றது. ஆனால், இஸ்ரேலுக்கும் இஸ்லாமிய குழுவிற்கும் இடையிலான ஒரு உடன்படிக்கை தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டது. ஆனால் ஹமாஸ் தனது ரொக்கெட் ஆயுதங்களை கட்டியெழுப்ப போராடுவதன் மூலம் எந்தவிதமான விடுதலையும் பெற முடியும் என எதிர்பார்க்க முடியாது.

இஸ்ரேல் மற்றும் காஸாவுக்கு இடையிலான கெரம் சலாம் வர்த்தக கடவையில், பெருந்தொகையான பழங்கள் மற்றும் மரக்கறி வகைகள், எரிபொருட்கள், கட்டட தயாரிப்பு பொருட்கள் என்பன கொண்டு செல்லப்பட்டுள்ளன.

சுமார் 2 மில்லியன் மக்களுக்காக இந்த பொருட்கள் நேற்றுக் காலை கொண்டு செல்லப்பட்டதாக அங்கு நிலை கொண்டுள்ள செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, காஸாவின் மீன்பிடி வலயத்தையும் இஸ்ரேல் விஸ்தரித்துள்ளது. தெற்கு கடற்கரையிலிருந்து 3 முதல் 9 வரையான கடல் மைல்கள் மற்றும் வடக்கில் ஆறு கடல் மைல்கள் வரை இஸ்ரேல் கடற்படை முற்றுகைக்கு உட்பட்ட கடல் பகுதியில் மீன்பிடியில் ஈடுபடலாம் என்று காஸாவின் மீனவர் சங்கத்தின் தலைவர் கூறினார். (7)

# ஜனாதிபதி ,பிரதமர் பெயரைப் பயன்படுத்தி நிதிமோசடி செய்தால் கடும் நடவடிக்கை

## பிரதியமைச்சர் மனுஷ நாணயக்கார எச்சரிக்கை



(கொழும்பு)

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பெயர்களைப் பயன்படுத்தி வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை பெற்றுத்தருவதாகத் தெரிவித்து நிதி மோசடி செய்யும் நபர்களுக்கு எந்தவித மன்னிப்பும் இல்லை. அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப் படுமென வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் மனுஷ நாணயக்கார எச்சரித்துள்ளார்.

பிரதமர் அலுவலகத்தில் பணிபுரிவதாகவும் சிரேஷ்ட அமைச்சர் ஒருவருக்கு மிகவும் நெருக்கமானவர் எனவும் தெரிவித்து, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுத்தருவதாக வாக்குறுதியளித்து நிதி மோசடி புரிந்த நபர் ஒருவர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அதிகாரிகளால் கடந்த வாரம் அம்பாறை உகன பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்டிருந்தார். இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

'வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து பணம் அறவிடும் சம்பவங்கள் இடம்பெறுவதாக தகவல் கிடைத்து வருகின்றது. பிரதமரின் செயலாளர் என தன்னை அறிமுகப்ப டுத்திக் கொண்டு ஜேர்மனியில் தொழில் பெற்றுத்தருவதாக தெரிவித்து பணம் அறவிட்டுக்கொண்டிருக்கும் நிலையில் அண்மையில் நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

அதனால் நாட்டு பிரஜைகள் யாராக இருந்தாலும் வெளிநாட்டு தொழிலுக்குச் செல்வதாக இருந்தால் அதற்குரிய முறையில் செல்லவேண்டும். அதற்காக அவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் தங்களை பதிவுசெய்து கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி, பிரதமர் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் ஹரீன் பெர்ணாந்து மற்றும் பிரதி அமைச்சராக இருக்கும் எனது பெயரையோ அல்லது வேறு அமைச்சர்களின் பெயர்களையோ பாவித்து வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற்றுத்தருவதாகத் தெரிவித்து யாராவது பணம் அறவிடும் நடவடிக்கையை மேற்கொள்வதாக இருந்தால் அது மோசடி நடவடிக்கையாகும். இவ்வாறானவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக செல்பவர்கள், யாருக்கும் பணம் கொடுக்கத்தேவையில்லை. அத்துடன் ஜப்பான், இஸ்ரேல் அல்லது கொரியா ஆகிய நாடுகளில் தொழில் வழங்கும்போது பணம் அறவிட எவருக்கும் அனுமதி வழங்கியதில்லை.

அவ்வாறு பணம் அறவிடுவதாக இரு ந்தால் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் அனுமதிக்கப்பட்ட பணம் மாத்திரமே அறவிடப்படும். அதனை பணியகத்தின் இணையத்தளத்தினூடாக அறிந்துகொள்ளலாம்.

எனவே, மக்களின் அறியாமையை பயன்படுத்தி யாராவது ஜனாதிபதி, பிரதமரின் பெய்ர்களைப் பிரயோகித்து பண மோசடிகளில் ஈடுபடுவது தொடர்பாக அறிந்தால் அது தொடர்பில் எங்களுக்கு அறியத்தரவும். அது தொடர்பாக கடும் நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் பின்வாங்க மாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மின்கம்பத்துடன் மோதி ஒருவர் பலி!





(அம்பாறை)

அம்பாறை, உகன பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சமனலபெந்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியை விட்டு விலகி அருகில் இருந்த மின்கம்பத்துடன் மோதியதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் பலத்த காயமடைந்தவர் அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உகன, ஹிமிதுருவ பகுதியைச் சேர்ந்த 71 வயதுடைய உக்குபண்டா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் உகன பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# பாராளுமன்ற பாதுகாப்பு அதிகரிக்கப்படும்

## அமைச்சர் கயந்த தெரிவிப்பு



(கொழும்பு)

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் அமைந்திருக்கும் பாதுகாப்பு கட்டடத்தை புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி புனர்நிர்மாணம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி பாராளுமன்ற தொகுதியின் முன்பக்க நுழைவாயில் பகுதியில் அமைந்துள்ள ஜயந்திபுர பாதுகாப்புக் கட்டடம் மற்றும் பின்பக்க நுழைவாயில் பகுதியிலுள்ள பின்னியர பாதுகாப்புக்கட்டடம் ஆகியவற்றை பாதுகாப்பு மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளுக்கு தேவையான நவீன வசதிகளுடன் மேம்படுத்தவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட குறித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

# ஆமாம் சாமிகள் மத்தியில் வாழ்வதா?

தான் சொல்கிறபடி எல்லோரும் கேட்டுக் கொண்டு அதன்படி நடக்க வேண்டும் என்கிற உணர்வு மனிதனுக்கு இரத்தத்தோடு ஊறி விட்டிருக்கும் போல் தெரிகிறது.

எனக்குத் தெரிந்து ஒரு திரைப்பட இயக்குநர் பிரபலமானவர். டிஸ்கஷன் என்ற பெயரில் ஹோட்டல் அறையில் தங்குவார். உதவி இயக் குநர்களைக் கும்பல் சேர்ப்பார். கதையோ சம்பவமோ ஆளுக்கு ஒன்றைச் சொல்ல அனுமதித்து விட்டு, கடைசியில் அவர்கள் சொல்கிற எதையும் ஏற்காமல், இவர் தன் கைவசம் வைத்திருக்கிற சரக்கைச் சொல்லி அதற்கு மற்றவர்களை ஆமாம் சாமி போட வைத்து விடுவார். அவர் சொல்லும் சம்பவங்களில் பலவீனம் ஏதும் இருந்து, அதை எவ்ரேனும் சுட்டிக் காட்டினால் மறுநாள் அவன் குளோஸ்! வேறு வகையில் சொல்லப் போனால் இவர் என்ன சொன்னாலும் மற்றவர்கள் ஆமாம், சாமி போட வேண்டும்.

பார்த்தார்கள் உதவி இயக்குநர்கள்! அவர் என்ன சொன்னாலும் "கரெக்ட் சேர்" "பிரமாதம் சேர்" என்றார்கள். இப்படிச் சொல்லி இந்த இயக்குநரைக் கவிழ்த்தே விட்டார்கள்.

சொல்கிற பேச்சைக் கேட்காத பிள்ளைகள் மீது பெற்றோருக்குக் கோபம் கோபமாக வரு கிறது. ஆனால் இப்பெற்றோர் சில உண்மைகளை மறந்து விடுகிறார்கள். நம் பிள்ளைகளுக்கும் சுயமாகச் சிந்திக்கத் தெரிகிறது; அவர்களுக்கென்று தனி இரசனை இருக்கிறது என்பதே அது!

பிள்ளைகள் நாம் சொல்வதைக் கேட்டுக் கொள்ளவில்லை என்ற ஏக்கம், நாம் என்ன அவர்களின் கெடுத்தலுக்கா சொல்றோம்? என்ற அடிப்படையில் மட்டும் எழுந்ததாக இருக்கக்கூடாது! அவர்களது கண்ணோட்டங்களையும், இன்று நிலவும் நடைமுறை விடயங்களையும் அனுசரித்ததாகவும் இருக்க வேண்டும்.

இளைய தலைமுறையையும் செக்கு மாட்டுச் சிந்தனையில் சிக்க வைக்காமல், அவர்களையாவது சுயமாகச் சிந்திக்க அனுமதிக்க வேண்டும். நம் இல்லத்துப் பிள்ளைகள் நமக்கு ஆமாம் சாமி போடுபவர்களாக இருந்தால் காலப்போக்கில் சிறுசிறு முடிவிற்குக்கூட நம்மை எதிர்பார்க்க ஆரம்பித்து விடுவார்கள். இது நல்லதா?

மாற்றுக்கருத்து என்பது இன்னுமொரு கண்ணோட்டம். அதாவது எதிர் இருக்கையிலிருந்து பார்க்கும் வேற்றுப் பார்வை அல்லது கூடுதல் சிந்தனை. இவற்றைத் தெரிந்து கொண்டால் தான் என்ன?

கவிழ்ப்பவர்கள் மட்டும் எதிரிகள் அல்லர். நீங்க என்ன சொன்னாலும் சரி என்பவர்களும் இந்த இனத்தவர்களே.

பலர் எண்ணுவதுபோல் நாம் என்ன சொன்னாலும் ஜிங்சக் போடுகிறவர்கள் நமக்கு வேண்டியவர்கள் அல்லர். மாறாக, இவர்கள் முத்திரை குத்திக்கொள்ளாத மோசமான எதிரிகள்!

ஒத்து ஊதுகிறவர்களும் தாளத்துக்கேற்ப மேளம் தட்டுகிறவர்களும் இசைத்துறை க்கு மட்டுமே தேவை. நடைமுறை வாழ்க் கைக்கு இவர்கள் சரிப்பட்டு வரமாட்டார்கள்.

லேனா தமிழ்வாணன்

# இந்திய மருத்துவக்கழிவுகள் குறித்து இராஜதந்திர மட்டத்தில் தலையீடுகள்



## அமைச்சர் சம்பிக்க பகிரங்கம்

(கொழும்பு)

**இந்திய மருத்துவக் கழிவுகள் இலங்கைக் கடற்பரப்பில் கரையொதுங்கிய சம்பவம் தொடர்பில் இராஜதந்திர மட்டத்தில் தலையீடுகள் இருப்பதாக அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றம் சாட்டியுள்ளார். எந்தவொரு நாடாக இருப்பினும் மருத்துவக் கழிவுகளை அகற்றுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.**

புத்தளம் பகுதி கடற்பரப்பில் அண்மையில் அபாயகரமான மருத்துவ கழிவுகள் கரையொதுங்கியதுடன் அவை தற்போது அகற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவம் தொடர்பில் கண்டியில் வைத்து நேற்றுக்காலை ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மருத்துவக் கழிவுகள் அகற்றப்பட்டிருப்பினும் அதனால் கடலிற்கு ஏற்பட்ட தாக்கம் தொடர்பில் இதுவரையில் கண்டறியப்படவில்லை என கடலோர பாதுகாப்பு ஆணையம் தெரிவித்துள்ளது. (இ-7)

### ஊடகவியலாளர் கடத்தல் விவகாரம்

# வாக்கு மூலம் வழங்கத்தயார் மகிந்த ராஜபக்ஷ அறிவிப்பு




(கொழும்பு)

த நேசன் பத்திரிகையின் ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டு துன்புறுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்க தான் தயார் எனவும், இதற்காக இன்று முற்பகல் 10 மணிக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளார்.

இதன்படி, குற்றப் புலனாய்வுத் திணைக்கள உதவிப் பொலிஸ் அதிகாரியொருவரின் தலைமையில் குழுவொன்று விஜேராம மாவத்தையிலுள்ள மகிந்த ராஜபக்ஷவின் வீட்டுக்குச் சென்று இந்த வாக்கு மூலத்தைப் பெறவுள்ளது.

கீத் நொயர் கடத்தல் சம்பவம் தொடர்பில் வாக்கு மூலம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு நான்கு தடவைகள் நேரம் கோரப்பட்ட போதும் அதற்கு மகிந்த பதிலளிக்கவில்லையெனவும், இதனால், அவரிடம் நேரம் ஒதுக்கித் தருமாறு கோரி அறிவித்தல் வழங்கப்பட்டதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

குற்றப்புலனாய்வு பிரிவின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்னவின் கையொப்பத்துடன் கூடிய குறித்த அழைப்பாணை முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு கடந்த் 12 ஆம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கல்வி அமைச்சு CIDயில் முறைப்பாடு

(கொழும்பு)

விடுமுறை மாதங்களில் ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்குவதை நிறுத்த கல்வி அமைச்சு, அமைச்சரவை பத்திரமொன்றை தயாரித்து வருவதாக வெளியாகியுள்ள பொய்யான தகவல்களுக்கு எதிராக கல்வி அமைச்சு குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடொன்றை தாக்கல் செய்துள்ளது.

நேற்று முற்பகல் கல்வி அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடன் குறித்த எழுத்து மூல முறைப்பாடு அமைச்சின் சட்டத்தரணி ஊடாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சரின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் விரைவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குறித்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# பாராளுமன்றில் சுயாதீனம் இறுதித் தீர்மானம் இல்லை

## கூட்டு எதிரணி - கம்மன்பில தகவல்



(கொழும்பு)

பாராளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் விவகாரம் தொடர்பில் கூட்டு எதிரணியினர் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை என பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

பொரளை என்.எம். பெரேரா நிலையத்தில் நேற்று முன்தினம் கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச துறைகளில் சேவையாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கான ஓய்வூதியம் ஒவ்வொரு மாதமும் பத்தாம் திகதி வழங்கப்படுவது வழமை. எனினும் இம்மாதம் அது வழங்கப்படவில்லை. ஓய்வூதியம் பெறுபவர்கள் ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் தாம் உயிருடன் வாழ்வது குறித்து கிராம உத்தியோகத்தர் ஊடாக அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

எனவே அந்த அத்தாட்சி பத்திரம் வழங்கப்படவில்லை என்ற காரணத்தைக் கூறியே ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை.

அக்காரணத்தைக் கூறி அரசாங்கம் சம்பளம் வழங்காதிருக்குமாக இருந்தால், ஜனவரி மாதமே அதற்கான நடவடிக்கையை எடுத்திருக்க வேண்டும். அதனைச் செய்யாது ஏன் ஓகஸ்ட் மாதத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் அத்தாட்சிப் பத்திரம் வழங்கியவர்களின் சம்பளமும் வழங்கப்படவில்லை. நீண்டகாலம் அரச சேவையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு இருக்கும் ஒரேவருமானம் ஓய்வூதியம்தான். எனவே அதனையும் வழங்காதிருப்பது அரசாங்கம் செய்யும் பாரிய குற்றமாகும்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது, சிலர் கூட்டு எதிர்க்கட்சி பாராளுமன்றில் சுயாதீனமாக செயற்பட வேண்டும் எனக் குறிப்பிட்டனர்.

எனினும் அது குறித்து இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை. அது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் நிபுணர் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மணல் விநியோகத்திற்காக போலி அனுமதிப்பத்திரம் தயாரித்தவர் கைதானார்

(கொழும்பு)

புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தினால் மண் மற்றும் மணல் விநியோகத்திற்காக வழங்கப்படுகின்ற அனுமதிப் பத்திரத்தை தயாரிக்கும் போலி நிறுவனம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெயாங்கொட, களகெடிஹேன பிரதேசத்தில் நடத்தப்பட்ட அந்த நிறுவனம், சீதுவை பொலிஸ் விஷேட அதிரடிப்படை அதிகாரிகளால் சுற்றிவளைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது அங்கிருந்து போலி அனுமதிப்பத்திரம் தயாரிக்க பயன்படுத்தப்பட்ட இரண்டு கணனிகள், அச்சு இயந்திரம், ஸ்கான் இயந்திரம் மற்றும் இறப்பர் முத்திரைகள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

22 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக திட்டமிட்ட குற்ற விசாரணைப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (இ-7)

# தமிழக மீனவர்கள் 27 பேருக்கும் மீண்டும் விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 27 பேரையும் மீண்டும் விளக் கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி சபேஷன் உத்தரவிட்டுள்ளார்.

இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் பகுதிகளைச் சேர்ந்த 27 தமிழக மீனவர்கள் கடந்த 11 ஆம் திகதி இலங்கை கடற்பரப்பிற்குள் அத்து மீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை, நெடுந்தீவுக்கு தென் கிழக்கு பகுதியில் வைத்து இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இதையடுத்து அவர்கள் 27 பேரையும் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி சபேஷன் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது நீதிவான் அவர்களை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந் நிலையில் விளக்கமறியல்காலம்நிறைவுற்று மீண்டும் அவர்கள் நேற்று முன்தினம் நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி அவர்களை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (இ-9)

# பணிப்பகிஷ்கரிப்பு தோல்வி

(கொழும்பு)

தனியார் பேருந்து ஊழியர் சங்கத்தினால், நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் முன்னெடுக்கப்பட்டுள்ள பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் தோல்வியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் போராட்டத்தில், அரச முற்போக்குச் சாரதிகள் சங்கம், மேல் மாகாணத் தனியார் பேருந்து சாரதிகள் சங்கம், இலங்கைத் தனியார் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் சங்கம், துறைமுகக் கொள்கலன் வாகனச் சங்கம் மற்றும் கொழும்பு நகர்ப்புற ஆட்டோ சங்கங்கள் ஆகியனவும் இணைந்துள்ளதாக நேற்றுக் காலை அறிவிக்கப்பட்டது.

இருப்பினும், தனியார் பேருந்து ஊழியர்களின் போராட்டத்தால், இன்னல்கள் ஏற்படும் பட்சத்தில், இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான மேலதிக பேருந்துகளை, சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென, போக்குவரத்துப் பிரதியமைச்சர் அசோக் அபேசிங்க தெரிவித்தார்.

இதேவேளை குறித்த பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் தோல்வியடைந்துள்ளதாக அபேசிங்க மேலும் தெரிவித்தார். (இ-7)


# 25 படகுகளுக்கு தீ வைத்த விசமிகள்! பொலநறுவையில் பெரும் பதற்றம்






(பொலநறுவை)

பொலநறுவை,மனம்பிட்டி மகாவலி கங்கையில் மணல் அகழ்விற்குப் பயன்படுத்தப்படும் 25 படகுகள் இனந்தெரியாத சிலரால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன.நேற்று முன்தினம் இரவு இவ்வாறு குறித்த படகுகளுக்கு தீ மூட்டப்பட்டுள்ளது. இதனால் பொலநறுவையில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.





## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு 200 பட்டதாரிகள்

(கொழும்பு)

இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவுக்கு, விசாரணை அதிகாரிகளாக பட்டதாரிகள் 200 பேர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என, ஆணையாளர் நெவில்குருகே தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கான நேர்முகப்பரீட்சை அடுத்த மாதம் இடம்பெறவுள்ளது. இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு அதிகாரிகள் 400 பேர் தேவைப்படுவதுடன், தற்போது 200 பேர் வரையே கடமையாற்றி வருகின்றனர் என அவர் தெரிவித்தார். (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## எண் 4 (ராகு)

## (சாகசச்சக்கரவர்த்திகள்)

**4 ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்.**


கூர்மையான மதிநுட்பம் வாய்ந்தவர்கள். பிறரைக் கண்டிப்புடன் நடத்துவார்கள், நல்ல துணிச்சலுடையவர்கள். பேச்சாற்றல் மிக்கவர்கள். தன்னம்பிக்கை அதிகமிருக்கும். நடை,உடை, பாவனைகளில் கட்டுப்பாடும், குறித்த நேரத்தில் நினைத்ததை முடிக்கும் சாமர்த்தியமும் இருக்கும். பேச்சினில் இனிமை குறைவாக இருக்கும். கர்வத்துடன் பேசுவது போல் தோன்றும். வாழ்க்கையில் உண்டாகும் போராட்டங்களுக்கு மனம் நொந்து விடாமல் எல்லாம் நன்மைக்கு என்று எண்ணி மனதைத் தேற்றிக் கொள்ளப் பழக வேண்டும். செயற்கரிய செயல்கள் செய்யும் வல்லமை உண்டாகும். மிகக் கடினமான உழைப்பாளிகள். எவ்வளவு பெரிய எதிர்ப்புகள் வந்தாலும், எதிர்த்து நின்று சமாளிக்கும் சாதுர்யமிக்கவர்கள். பல்வேறுவிதமான திருப்பங்கள் வாழ்வில் திடீர் திடீரென்று நிகழும். கலைகள் மீது ஆர்வமிருக்கும். வீணான கவலைகள் மனதை வாட்டியெடுக்கும். பெரிய பெரிய பொறுப்புகளால் சிரமப்படுவார்கள். தூரதேச தொடர்பு இவர்களுக்குக் கிடைக்கும். கடமை தவறாத கண்ணியவான்கள். பிறருக்கு விட்டுக்கொடுத்துப் பழகிக் கொண்டால் நிரந்தரமான வெற்றி கிடைக்கும். உடலின் தாதுசக்தி குறையாமல் பாதுகாக்க வேண்டும். இல்லையெனில் நரம்பு நோய்கள் தாக்கும். கல்வியில் சிறந்து விளங்குவார்கள். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தான வாழ்க்கை அமையும். போர்வீரர்கள் போன்று வாழ்வார்கள். உணவு முறையில் மிதமாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். பேச்சில் இனிமை தேவைப்படும். இல்லையெனில் வீண்பேச்சு பேசிப் பிரச்சினைக்கு உள்ளாவார்கள். எதிரிகளை உருவாக்கிவிடும்.

**13 ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்**

பிறருக்கு உதவும் பெருந்தன்மை வாய்ந்தவர்கள். நேர்மையை விரும்புவார்கள். வாழ்க்கையில் எதிர்பாராத திடுக்கிடும் சம்பவங்களால் ஆபத்துகள் வந்து நீங்கும். இளம் வயது முதலே பெரும் போராட்டத்தை சந்திக்க வேண்டியிருக்கும். குடும்பப் பொறுப்புகளால் மனம் நோக வேண்டி வரும். சிறு வயதிலேயே மனதை பாதிக்கும் சம்பவங்களைச் சந்திப்பார்கள். மனோதிடத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும். பெண்களால் இவர்கள் வாழ்க்கையில் பெரும் பாதிப்புக்களைச் சந்திப்பார்கள். இடையூறுகள் வந்து கொண்டேயிருக்கும். உடல் வலிமை மிக்கவர்கள். பொதுக் காரியங்களைத் தலைமை தாங்கி நடத்தி வைப்பார்கள். சிந்தனை அடிக்கடி மாறும் இயல்புடையது. இவர்கள் வாழ்க்கையின் பிற்கூறு மிகவும் மகிழ்ச்சிகரமானதாக அமையும். ஆன்மீக ஈடுபாடு உண்டாகும். வாழ்வின் துயரங்களுக்கு பெரியோர்களின் நல்வாக்கு, ஆன்மீகம் போன்றவற்றால் நிவர்த்தியடைவார்கள். சூறாவளியில் சிக்கித் தவிக்கும் படகுபோல கஷ்டப்பட்டு முடிவில் மீண்டு வருவார்கள். வெற்றி பெறுவார்கள். எதிர் நீச்சல் போட்டுத்தான் வாழ்க்கையில் முன்னேற முடியும். பிறரால் நம்பிக்கை மோசடி செய்யப்படுவார்கள். ஆன்மீகம் இவர்களுக்கு கைகொடுக்கும்.

**22 ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்**

நன்மையைக் காட்டிலும் தீமையே இவர்களை அதிகம் கவரும். பல சந்தர்ப்பங்களில் விதி இவர்களைத் தவறான பாதைக்கு இழுத்துச் செல்லும். நட்பு கிடைக்கும். குடும்ப வாழ்க்கை சிக்கலில்லாமல் இருக்கும். லோட்டரி, ரேஸ், கார் பந்தயம், திடீர் அதிர்ஷ்டம் போன்றவற்றில் அதிகமான நாட்டமிருக்கும். பொருள் சம்பாதிப்பதில் திறமைசாலிகள்.




நல்ல நிர்வாகத் திறமையிருக்கும். எதையும் துணிச்சலாகப் பேசுவார்கள். எளிதில் பணம் சேர்க்கும் பாக்கியசாலிகள். தீமையையே மனம் நாடிச் செல்லும். இவர்களைச் சுற்றிலும் எதிரிகள் பழி தீர்க்கக் காத்திருப்பார்கள். எச்சரிக்கையுடன் நடக்காவிட்டால் விபரீதங்கள் நிகழும். போட்டி, பந்தயங்கள், சூதாட்டம் இவர்களுக்குக் கைகொடுக்கும். சட்டத்திற்குப் புறம்பான காரியங்களில் ஈடுபட்டு பணம் சம்பாதிப்பார்கள். ஆன்மீகத்தில் மனதை ஈடுபடுத்தி தூய்மை காண வேண்டும். பெரியோர்கள் நேர்மையான வழியில் செல்லும் இவர்கள் உன்னதமான நிலையை அடைவார்கள். இயந்திரங்கள், புத்தகம், மோட்டார், வாகனம், பேருந்து, லொறி டிராவல்ஸ் போன்ற தொழில்களால் பெரும்பணம் சம்பாதிப்பார்கள். மக்கள் ஆதரவுடன் நடத்தும் ஹோட்டல், கலைத் தொழில்கள், பந்தயங்கள், கடைகள் போன்றவையும் பணம் பெருக்கும் தொழிலாகும்.

**31 ஆம் திகதியில் பிறந்தவர்களின் குணாதிசயங்கள்**

மனதைரியமிக்க இவர்கள் எதிலும் துணிசலுடன் ஈடுபடக்கூடியவர்கள். நல்ல தைரியசாலிகள். மிதமிஞ்சின கற்பனை ,வளமிருக்கும். புதிதாக இவர்களின் நட்பு கிடைத்தவர்கள். இவரை எளிதில் சாதாரண மனிதல்ல என்பதை அடையாளம் கண்டு கொள்வார்கள். மதிநுட்பமும் விஞ்ஞான அறிவும் தெரிந்தவர்கள். சூட்சும பலமுடைய மனதை உடையவர்கள். புதிய சகாப்தம் படைப்பார்கள். தூய்மையான சிந்தனை வளமிருக்கும். இவரை மேதைகள், அறிவாளிகள் என்று உலகமே பாராட்டும். தன் மனம் கூறும் கூற்றுப்படியே செயலாற்றுவார்கள். பிறர் கூறும் எதையும் யோசிக்கக்கூட மாட்டார்கள். தன் இஷ்டப்படி காரியம் ஆற்றுவார்கள். சுதந்திரப் பறவைகள். தானதர்மங்கள் செய்வதில் ஆர்வமிக்கவர்கள். இலாப நட்டங்களைப் பார்க்காமல் தன் விருப்பப்படி நடந்து கொள்வார்கள். பொதுஜன ஈடுபாடு அதிகமாக இருக்கும். கதை, கட்டுரை, கவிதை, காவியம் போன்றவற்றில் ஆர்வமிருக்கும். எப்பேர்ப்பட்ட எதிரியையும் எளிதில் வென்று வீழ்த்தும் ஆற்றல் படைத்தவர்கள். இவர்களை ஏமாற்றுவது கடினம். ஆன்மீகத்தில் புரட்சி செய்வார்கள். தனிமை இவர்களை மகிழ்விக்கும். சுதந்திரமாக இருப்பதையே விரும்புவார்கள். சில நேரங்களில் பேச்சும், எழுத்தும் தீவிரவாதம் கலந்ததாக இருக்கும். தலைமைப் பதவிகள் கிடைக்கும். இருந்தாலும் நிரந்தரமாகத் தக்க வைக்க மாட்டார்கள். நண்பர்களிடமும் உறவினர்களிடமும் விசுவாசமிருக்கும். செயற்கரிய செயல்கள் செய்வதில் வல்லவர்கள்.சாதனைகள் பல செய்வார்கள். ஒரு மனதுடன் செயற்பட்டு வெற்றி மேல்வெற்றி பெறுவார்கள். சாப்பாட்டு விடயத்தில் கவனம்தேவை.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

இவ்வாறான ஒரு பின்னணியில், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப கால கட்டங்களில், இலங்கையின் பௌத்த சிங்கள தேசியவாதிகளால் பௌத்த மதம், ஆரிய இனக்கொள்கை, சிங்கள வரலாற்றுணர்வுகள் என்பன பௌத்த சிங்களத் தேசியவாதத்தின் மூல ஆதாரங்களாக மிக வீறுடன் முன்னெடுக்கப்படுவதைக் காணமுடிகிறது.


தொடர்ந்து இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிகளில் இலங்கையின் தெற்கு பிராந்தியங்களில் தோற்றம் பெற்ற பல்கலைக் கழகங்களில் கற்ற பெரும்பான்மையான கல்விமான்கள் குறிப்பாக சமூக, சமய, மொழி, அரசியல் வரலாற்றுத்துறை சார்ந்த சிங்களக் கல்விமான்கள், இத் தேசியவாத உணர்வுகளால் உந்தப்பட்டும் கவரப்பட்டும் இலங்கையின் மதம், மொழி, இனம் சார்ந்த வரலாறுகளை, ஒரு உணர்வு அணுகு முறைக்கு உட்படுத்துவதை, அவர்களுடைய நூல்களினூடாக அறியமுடிகின்றது.

இருந்தும், ஒரு சில கல்விமான்கள், சிறப்பாக, குணவர்த்தனா, தெரணியகல, செனிவரத்தன போன்ற வரலாற்று, தொல்லியல் அறிஞர்கள் இலங்கையின் ஆரம்பகால வரலாற்றை அறிவியற் கண்ணோட்டத்தில், நவீன விஞ்ஞான முறை ஆய்வுகளைப் பயன்படுத்தித் தமது முடிவுகளைக் கல்வித்துறை நேர்மையோடு, கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக எழுதி வருகின்றனர்.

ஏற்கனவே காட்டப்பட்ட இக் கல்விமான்களின் புலமைசார் வெளியீடுகளினூடான, அவர்களின் பங்களிப்பு இலங்கையின் ஆதிகால வரலாறு சம்பந்தமாக மிக முக்கியத்துவம் பெறுகின்றது. அவ்வாறான ஆய்வுகளுக்கும், அணுகுமுறைகளுக்கும் பெரும்பான்மையான சிங்களக் கல்விமான்களும் அரசியல்வாதிகளும் முக்கியத்துவம் கொடுக்காமல் இருப்பதுடன், அவர்களின் ஆய்வின் முடிவுகள் கண்டனத்திற்கு உள்ளாவதையும் அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் இலங்கைத் தமிழ்க் கல்விமான்கள் ஆரம்பகால இலங்கைத் தமிழர் பற்றிய வரலாற்று ஆய்வில், பல்வேறுபட்ட அரசியல் சூழ்நிலை காரணமாகத் தங்கள் பங்களிப்பை முழுமையாகச் செய்ய தவறியமையையும் காணமுடிகின்றது.

ஒரு சில தமிழ் வரலாற்று ஆய்வாளர்கள் இம் முயற்சியில் இறங்கியபோதும் அவர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டை மட்டும் மையப்படுத்தி தமது பங்களிப்பைச் செய்தமை, இலங்கையின் பூர்வீகத் தமிழர் சார்ந்த, அவர்கள் வாழ்ந்த பிரதேசம் சார்ந்த, வரலாற்று உண்மைகளை வெளிக்கொணர முடியாமல் போய் விட்டது.



அநுராதபுரத்தை ஆட்சி செய்த தமிழ் மன்னன் எல்லாளன்

> “இவ்விரு தமிழ் மன்னர்களின் பின் சிலகாலம் அசேலன் என்னும் மன்னனின் ஆட்சியின் பின்னர், எளார என்று பாளி மொழியிலும் எல்லாளன் எனத் தமிழ்மொழியிலும் அழைக்கப்படும் தமிழ் மன்னன் நாற்பத்துநான்கு வருடங்கள் தொடர்ச்சியாக நல்லாட்சி புரிந்த தாகப் பாளி நூல்கள் கூறுகின்றன. இதுபற்றி கி.பி மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தீபவங்ஸ என்ற பாளி நூலில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது”

## தமிழரின் தோற்றமும் ஆரம்ப வரலாறும் கி.மு 300-கி.பி 300

இதற்கு விதிவிலக்காக, பேராசிரியர் இந்திரபாலாவின் அண்மைக்கால புலமைசார் வெளியீடு இவ் விடயத்தில் பாரிய பங்களிப்பைச் செய்துள்ளமையை எந்தக் கல்விமானும் மறுக்கமாட்டார்கள் என்பது திண்ணம்.

எனவே, மேற்கூறப்பட்ட சுருக்கமான பின்னணியின் மூலம், இலங்கையின் ஆரம்பகால வரலாற்றில் இலங்கையின் பூர்வீகத் தமிழர் பற்றிய வரலாறுகள் ஏன் முக்கியத்துவம் பெறவில்லை என்பதை விளங்கிக்கொள்ள முடிகிறது.

இச் சந்தர்ப்பத்தில் பூர்வீகத் தமிழர்கள் எவ்வாறு இலங்கையின் ஆரம்பகால் அரசியலும் ஆட்சியிலும் பங்கெடுத்துள்ளார்கள் என்று அறிவதன் மூலம் அவர்கள் பற்றிய ஆரம்ப கால வரலாற்றினை அறிந்து கொள்ள முடியும்.

அத்துடன் இலங்கையின் ஆரம்ப கால வரலாறு, சிங்கள பௌத்த வரலாறு மட்டுமல்லாது, தமிழ் சைவ வரலாறாகவும் இடம் பெறுகின்ற தென்பதையும் அறியமுடியும்.

ஆரம்ப வரலாற்றுக் காலத்தில், கி.மு. மூன்றாம் நூற்றாண்டுகளில் வட இந்தியாவில் ஆட்சிபுரிந்த மௌரியப் பேரரசன் அசோகன், கலிங்கப்போரின் முடிவில் பௌத்த மதத்தைத் தழுவுகின்ற நிகழ்வு நடைபெற்றது.

இதன் விளைவாக அசோகனால் இலங்கைக்கு மகிந்ததேரரின் தலைமையில் பௌத்த தூதுக்குழு ஒன்று பௌத்த மதத்தை நிலை நாட்டுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டது. அக்குழு இலங்கைக்கு வரும்பொழுது, அநுராதபுர இராச்சியத்தில் தீசன் என்ற மன்னன் ஆட்சி செய்து கொண்டிருந்தான்.

மகிந்தனின் பௌத்த போதனைகளால் கவரப்பட்ட மன்னன் பௌத்த மதத்திற்கு மாறி, மீண்டும் இரண்டாவது தடவையாக முடிசூடிய சம்பவம் நடந்தேறியது. அசோக மன்னனின் விருப்பத்தின் பேரில் மதம் மாறிய தீச மன்னன் அசோக மன்னனின் “தேவநம்பிய” என்ற விருதைப் பெற்று, தேவநம்பியதீசன் என்ற பெயரில் வரலாற்றில் இடம்பெறுகின்றான்.

இவ்வரலாற்று நிகழ்வு நடந்து, தேவநம்பிய தீச மன்னனின் இறப்பிற்குப் பின்பு சில வருடங்களில் அநுராதபுர அரசில் சேனன், குத்திகன் என்னும் இரு மன்னர்கள் இருபத்து இரண்டு வருடங்கள் நல்லாட்சி நடத்தினர். இவ்வாறு பாளி வரலாற்று நூல்க ளினூடாக அறியமுடிகின்றது.

இவ்விரு தமிழ் மன்னர்களின் பின் சிலகாலம் அசேலன் என்னும் மன்னனின் ஆட்சியின் பின்னர், எளார என்று பாளி மொழியிலும் எல்லாளன் எனத் தமிழ் மொழியிலும் அழைக்கப்படும் தமிழ் மன்னன் நாற்பத்துநான்கு வருடங்கள் தொடர்ச்சியாக நல்லாட்சி புரிந்த தாகப் பாளி நூல்கள் கூறுகின் றன. இதுபற்றி கி.பி மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தீபவங்ஸ என்ற பாளி நூலில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

“எளார என்ற பெயருடைய சத்திரியன் அசேலனை வெற்றி கொண்டு நாற்பத்துநான்கு ஆண்டுகள் அறவழியில் ஆட்சி நடத்தினான்”

மேலும், தீபவங்ஸ கூறிய இதே விடயத்தை கி.பி ஐந்தாம் நூற்றாண்டில், தீபவங்ஸத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட மகாவம்ச நூல் மேலும் விரிவுபடுத்திப் பின்வருமாறு கூறுகின்றது.

“சோழநாட்டிலிருந்து, இங்கு வந்த உயர்குடிப் பிறந்த எளார என்னும் தமிழன் அசேல மன்னனை வென்று நாற்பத்துநான்கு ஆண்டுகள் தகராறு தீர்ப்பதில் நண்பர்களுக்கும், பகைவர்களுக்கும் சமநீதி செலுத்தி ஆண்டான்”

இவ்வாறு நல்லாட்சி செய்த தமிழ் மன்னன்மீது, தெற்கில் மஹாகமவில் ஆட்சிசெய்த குறுநில மன்னனாகிய துட்டகாமினி, வடக்கு நோக்கித் தன் அரசை விரிவுப்படுத்துவதன் நோக்கில் படையெடுப்புக்களை நடத்தினான். இவன், பல குறுநில அரசுகளை வென்று, இறுதியாக அநுராதபுர அரசை நோக்கிப் படையெடுத்து, அங்கு எல்லாளனைக் கொன்று, அநுராதபுர அரசைக் கைப்பற்றிய தாக பாளி நூல்கள் கூறுகின்றன. நல்லாட்சி புரிந்த எல்லாளனைக் கொன்ற இடத்தில், ஒரு சைத்தியம் எழுப்பி அதனை எல்லோரும் வழிபட்டுச் செல்ல வேண்டும் என்று துட்டகாமினி கட்டளை இட்ட தாகவும் மேற்படி நூல்கள் கூறுகின்றன.


மேற்கூறப்பட்ட வரலாற்றுச் செய்திகளில் இருந்து சில முக்கியமான விடயங்களைக் கருத்திற் கொள்ள முடிகின்றது. முதலாவதாக, அநுராதபுரத்தில் தமிழ் மன்னர்கள் நீண்டகாலமாக ஆட்சி செய்திருக்கின்றார்கள்.

மேலும், சேனன், குத்திகன், எல்லாளன் ஆகிய மன்னர்களைவிட வேறு தமிழ் மன்னர்களும், துட்டகாமினியின் ஆட்சியின் பின்னர் வருகின்ற மூன்று நூற்றாண்டு காலப்பகுதியில் அநுராதபுரத்தில் ஆட்சி செய்திருக்கின்றார்கள்.

ஆனால், அவர்களுடைய வரலாறுகள் சேனன், குத்திகன், எல்லாளன் மன்னர்கள் பற்றிய குறிப்புக்கள் வரலாற்றில் முக்கிய இடம் பெற்றதுபோல் இடம் பெறவில்லை.

(தொடரும்)

# சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ் தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயமும் இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதித்துவமும்



கலாநிதி
க. தவலிங்கம்,
தவிசாளர் - எல்லை
நிர்ணய ஆணைக்குழு

**வாக்கின் சமபலம்**
**(One man one Vote value)**

வாக்கின் மூலம் பாராளுமன்ற அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும்போது ஒருவரால் அளிக்கப்படும் வாக்கும் மற்றவரால் அளிக்கப்படும் வாக்கும் சம பலத்தைக் கொண்டதாக இருத்தலே ஜனநாயகமாகும். உதாரணமாக ஒரு தொகுதியில் சனத்தொகை/ வாக்காளர் 10,000 பேராகவும் மற்றைய தொகுதியில் சனத்தொகை/ வாக்காளர் 100,000 பேராகவும் இருப்பின் முதலாவது தொகுதி வாக்காளரின் பலம் இரண்டாவது தொகுதி வாக்காளரின் பலத்தைப்போல் 10 மடங்காகும். எனவே தொகுதிகள் எல்லை நிர்ணயம் செய்யும் போது தொகுதிகளில் உள்ள சனத்தொகை/ வாக்காளர் எண்ணிக்கை கிட்டத்தட்ட சமமாக இருக்கும் வண்ணம் எல்லை நிர்ணயம் செய்யப்படல் வேண்டும் என்பதே அடிப்படையாகும்.

எல்.எம்.டி.த. சில்வா ஆணைக்குழுவின் எல்லை நிர்ணயத்தின் போது மாகாண மட்டத்தில் வாக்கின் பலம் எவ்வாறு இருந்ததென்பதை ஒப்பிட்டு பார்க்கும் போது வடமாகாணத்தில் குறைந்த சனத்தொகையைக் (23,300 பேர்) கொண்ட தொகுதியான வவுனியாவிற்கும் கூடிய சனத் தொகையைக் (71,100பேர்) கொண்ட தொகுதியான பருத்தித்துறைக்குமிடையேயுள்ள வாக்குப்பலம் 1:3 ஆக காணப்படுகின்றது. அதாவது வவுனியாத் தொகுதியிலுள்ள ஒருவரது வாக்கு பருத்தித்துறைத் தொகுதியிலுள்ள மூவரின் வாக்குகளுக்குச் சமனாகும்.

இதேபோல் மற்றைய மாகாணங்களின் தொகுதிகளின் வாககுப் பலத்தை ஒப்பிடும் போது மேல் மாகாணத்தில் 1:1.9 ஆகவும், மத்திய மாகாணத்தில் 1:1.6 ஆகவும், தென் மாகாணத்தில் 1:1.3 ஆகவும், கீழ் மாகாணத்தில் 1:1.5 ஆகவும், வடமேல் மாகாணத்தில் 1:2.7 ஆகவும், வடமத்திய மாகாணத்தில் 1:1.7 ஆகவும், ஊவா மாகாணத்தில் 1:1.5 ஆகவும், சப்ரகமுவ மாகாணத்தில் 1:3 ஆகவும் வாக்குப் பலம் காணப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவ்ரையில் ஆகக் குறைந்த சனத்தொகையைக் (20,900பேர்) கொண்ட பொலநறுவைத் தொகுதிக்கும் ஆகக்கூடிய சனத்தொகையைக் (108, 700 பேர்) கொண்ட களனித் தொகுதிக்குமிடையேயுள்ள வாக்குப்பலம் 1:5 ஆகும். அதாவது பொலநறுவைத் தொகுதியிலுள்ள ஒருவரது வாக்கு களனித் தொகுதியிலுள்ள ஐவரின் வாக்குகளுக்குச் சமனாகும்.

இவ் எல்லை நிர்ணயத்தின் படி சுதந்திர இலங்கையில் 1947, 1952 மற்றும் 1956 ஆகிய வருடங்களில் மூன்று பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன.

**இலங்கையில் அரசியற் கட்சிகளின் தோற்றம்**

1931ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்பினூடாக சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப் பட்டாலும் பிரித்தானிய மாதிரியிலான பாராளுமன்ற அரசாங்க முறை முழுமையாக அறிமுகப்படுத்தப்படவில்லை. பிரித்தானிய மாதிரியிலான பாராளுமன்ற அரசாங்க முறை என்பது கட்சி முறை அரசாங்கத்திற்குரிய அரசாங்க முறையாகும்.

அதாவது பொதுத்தேர்தலில் எக்கட்சி பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுக்கொள்கின்றதோ அந்தக்கட்சியிடம் அரசாங்கத்தை அமைக்கும் பொறுப்பை ஒப்படைக்கும் முறை இதுவாகும். 1935ஆம் ஆண்டுவரை இலங்கையில் அரசியற் கட்சிகளென்பது இருக்கவில்லை. 1928இல் ஏ.ஈ. குணசிங்காவினால் தொழிற் கட்சி என்ற பெயரில் ஒரு கட்சி உருவாக்கப்பட்ட போதும் அது ஓர் அரசியற் கட்சிக்குரிய பண்புகளைக் கொண்டதாக அமையவில்லை.

இலங்கையின் முதலாவது அரசியற் கட்சியான லங்கா சமசமாஜக்கட்சி (LSSP) 1935இல் தோற்றம் பெற்றது. இதனைத் தொடர்ந்தே டொனமூர் அரசியல் யாப்புக் காலத்தில் (1931-1947) இலங்கை இந்திய காங்கிரஸ் (1939), இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (1943), அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி (1944), பொலசெவிக் லெனினிஸ்ட் கட்சி (1945), ஐக்கிய தேசிய கட்சி (1946), சுயராட்சியக் கட்சி (1947) என்பன தோற்றம் பெற்றன. பாராளுமன்ற அரசாங்கம் நடைமுறையில் இல்லாதபோதும் சர்வஜன வாக்குரிமையின் அறிமுகம் கட்சிகளின் தோற்றத்தினை ஊக்குவித்திருந்தது.

இலங்கையின் பிரதான இயக்கமாக விளங்கிய இலங்கை தேசிய காங்கிரஸ், எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவினால் உருவாக்கப்பட்ட சிங்கள மகாசபை, முஸ்லிம் மக்களின் நலன்களைப் பேணுவதற்காக உருவாக்கப்பட்ட முஸ்லிம் லீக் ஆகிய மூன்று அமைப்புக்களும் மற்றும் சில தமிழ்க் குழுக்கள் ஒன்றிணைந்தே ஐக்கிய தேசிய கட்சியை உருவாக்கின.

**சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தல்-1947**

முதலாம் பாராளுமன்றத் தேர்தலுக்கான நியமனப்பத்திரம் கோரப்பட்டதும் 89 தேர்தல் தொகுதிகளுக்குமாக 361 அபேட்சகர்கள் தேர்தல் களத்தில் குதித்தனர். வடமாகாணத்திலிருந்து 30 அபேட்சகர்களும் கிழக்கு மாகாணத்திலிருந்து 24 அபேட்சகர்களும் தேர்தல் களத்தில் குதித்தனர்.

இத்தேர்தலில் டீ.எஸ். சேனநாயக்கவின் தலைமையில் அமைத்துக்கொண்ட ஐக்கிய தேசிய கட்சியும், கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வாவின் லங்கா சமசமாஜ கட்சியும், கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வாவினால் ஆரம்பிக்கப்பட்ட பொலசெவிக் லெனினிஸ்ட் கட்சியும், டாக்டர். எஸ்.ஏ. விக்கிரமசிங்கவினால் ஆரம்பிக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியும், ஏ.ஈ. குணசிங்கவினால் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்கட்சியும், ஜீ.ஜீ. பொன்னம்பலத்தினால் ஆரம்பிக்கப்பட்ட அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியும், இலங்கை இந்தியா காங்கிரஸ் கட்சியும், ஜேம்ஸ். ஜீ. பெர்னாண்டோவினால் ஆரம்பிக்கப்பட்ட சுயராட்சியக் கட்சியும் மற்றும் சில சுயேட்சை அபேட்சகர்களும் தேர்தலில் போட்டியிட்டனர். இத்தேர்தலில் ஒரே கட்சியை சார்ந்த பலர் ஒரே தேர்தல் தொகுதியில் போட்டியிட்டனர். உதாரணமாக பொலநறுவைத் தொகுதியில் போட்டியிட்ட ஆறு பேரில் ஐந்து பேர் ஐக்கிய தேசிய கட்சியை சார்ந்தவர்களாகும்.

**அட்டவணை-3**



**அபேட்சகர்களின் சின்னங்கள்**

1931ஆம் ஆண்டு மற்றும் 1936ஆம் ஆண்டுத் தேர்தல்களில் அபேட்சகர்களை அடையாளப்படுத்துவதற்கு வாக்குப்பெட்டிகள் வெவ்வேறு நிறங்களில் வைக்கப்பட்டன. 1947ஆம் ஆண்டுத் தேர்தலில் நிறவாக்குப்பெட்டிகள் அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக அபேட்சகர் களை அடையாளப்படுத்துவதற்கு சின்னங்கள் வழங்கப்பட்டன. 1947 ஆம் ஆண்டுத் தேர்தலில் அட்டவணை-3இல் காட்டப்பட்டுள்ள 24 சின்னங்களில் ஒன்றை அபேட்சகர் தெரிவுசெய்து பாவிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இச் சின்னங்கள் அபேட்சகர்களுக்கே ஒழிய கட்சிகளுக்கல்ல. கட்சிகளுக்கு சின்னங்கள் ஒதுக்கும் முறை 1960 ஜுலையில் நடைபெற்ற தேர்தலுடன் ஆரம்பமாகியது. இதனால் ஒரே கட்சியைச் சேர்ந்த அபேட்சகர்கள் வெவ்வேறு தொகுதிகளில் போட்டியிடும்போது வெவ்வேறு சின்னங்களின் கீழ் போட்டியிடவேண்டியதாயிற்று. உதாரணமாக அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஜீ.ஜீ. பொன்னம்பலம் யாழ்ப்பாணத் தொகுதியில் சைக்கிள் சின்னத்திலும் அதே கட்சியைச் சேர்ந்த எஸ்.ஜே.வி. செல்வநாயகம் காங்கேசன்துறைத் தொகுதியில் திறப்புச் சின்னத்திலும் அதே கட்சியைச் சேர்ந்த சி. வன்னியசிங்கம் கோப்பாய் தொகுதியில் யானைச் சின்னத்திலும் போட்டியிட்டனர்.

முதலாம் பாராளுமன்றத் தேர்தல் 1947ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 23, 25, 26, 27, 28, 30 மற்றும் செப்டெம்பர் மாதம் 1, 4, 6, 8, 9, 10, 11, 13, 15, 16, 17, 18, 20ஆம் திகதிகளில் (மொத்தம் 19 நாட்கள்) நடைபெற்றன. இத்தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி 42 ஆசனங்களையும், லங்கா சமசமாஜ கட்சி 10 ஆசனங்களையும், பொலசெவிக் லெனினிஸ்ட் கட்சி 5 ஆசனங்களையும், கம்யூனிஸ்ட் கட்சி 3 ஆசனங்களையும், தொழிற்கட்சி 1 ஆசனத்தையும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி 7 ஆசனங்களையும், இலங்கை இந்தியா காங்கிரஸ் கட்சி 6 ஆசனங்களையும், மற்றும் பல சுயேட்சை அபேட்சகர்கள் 21 ஆசனங்களையும் பெற்று வெற்றி பெற்றனர். புத்தளம் தொகுதியில் சுயேட்சை அபேட்சகரான எஸ்.எச். இஸ்மாயில் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்.

வட மாகாணத்தில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஜீ.ஜீ. பொன்னம்பலம் யாழ்ப்பாணத்தொகுதியிலும் (14324 வாக்குகள்), எஸ்.ஜே.வி. செல்வநாயகம் காங்கேசன்துறைத் தொகுதியிலும் (12126 வாக்குகள்), சி. வன்னியசிங்கம் கோப்பாய் தொகுதியிலும் (9619 வாக்குகள்), கே. கனகரத்தினம் வட்டுக்கோட்டை தொகுதியிலும் (11721 வாக்குகள்), ரீ.இராமலிங்கம் பருத்தித்துறை தொகுதியிலும் (10396 வாக்குகள்), வீ. குமாரசாமி சாவகச்சேரி தொகுதியிலும் (11813 வாக்குகள்) வெற்றி பெற்றனர். சுயேட்சை அபேட்சகரான அல்பிரட் தம்பையா ஊர்காவற்றுறை தொகுதியிலும் (5552 வாக்குகள்), சி. சிற்றம்பலம் மன்னார் தொகுதியிலும் (5877 வாக்குகள்), சி. சுந்தரலிங்கம் வவுனியா தொகுதியிலும் (4026 வாக்குகள்) வெற்றி பெற்றனர்.



எஸ்.ஜே.வி.செல்வநாயகம்



சி. வன்னியசிங்கம்




சி. சிற்றம்பலம்



சி. சுந்தரலிங்கம்

கிழக்கு மாகாணத்தில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எஸ். சிவபாலன் திருகோணமலைத் தொகுதியிலும் (5252 வாக்குகள்), ஐக்கிய தேசிய கட்சி சேர்ந்த ஏ.ஆர்.ஏ.எம். அபூபக்கர் மூதூர் தொகுதியிலும் (3480 வாக்குகள்), ஏ.எல். சின்னலெப்பை மட்டக்களப்பு தொகுதியிலும் (4740 வாக்குகள்), எம்.எஸ். காரியப்பர் கல்முனைத் தொகுதியிலும் (6886 வாக்குகள்), சுயேட்சை அபேட்சகர்களான வீ. நல்லையா கல்குடாத் தொகுதியிலும் (5559 வாக்குகள்), எம்.எம். இப்ராஹிம் பொத்துவில் தொகுதியிலும் (7407 வாக்குகள்), சோமசுந்தரம் உடையார் எதிர்மன்னசிங்கம் பட்டிருப்புத் தொகுதியிலும் (5672 வாக்குகள்) வெற்றி பெற்றனர்.



வீ. நல்லையா

சிங்கள மக்களின் செல்வாக்குடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சட்டத்தரணி க.வே. நடராசா பண்டாரவ்ளைத் தொகுதியில் 5092 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

(குறிப்பு-1983ஆம் ஆண்டுக் கலவரத்தின் போது இவருடைய பதுளை வீடு,சொத்துக்கள் எரிக்கப் பட்டதால் அவர் அங்கி ருந்து இடம் பெயர்ந்தார்).

(தொடரும்...)

## அண்மையில் விடுவிக்கப்பட்ட வலி.வடக்கு வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலயக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் தெற்கு ஞான வைரவர் ஆலயப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வயாவிளான் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மீள்கட்டுமானம் மற்றும் வாழ்வாதாரங்களை ஒட்டிய ஆரோக்கியமான கருத்துப்பரிமாற்றமும் இக் கூட்டத்தில் இடம்பெறும்.

பரிபாலன சபை உறுப்பினர்கள், ஆலய நலன் விரும்பிகள் இக்கூட்டத்திற்கு தவறாது சமுகம் தந்து தங்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் வழங்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வளாவிளான் தெற்கு ஞான வைரவர் ஆலயமும் சூழவுள்ள குடியிருப்புக்களில் பெரும் பகுதியும. இராணுவக் கட்டமைப்பில் இருந்து 28 வருடங்களின் பின்பு 19.06.2018 அன்று விடுவிக்கப்பட்டது.

இராணுவக் கட்டமைப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் நடைபெறும் முதலாவது கூட்டமாதலாலும் ஆலய கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டியிருப்பதாலும் விரிவுபடுத்தப்பட நிகழ்ச்சி நிரலைக் கொண்டதாக இக்கூட்டம் அமையவுள்ளது என செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

## ரயில்வே தொழிற்சங்கங்கள் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை

மீண்டும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கப் போவதாக ரயில்வே தொழிற்சங்கங்கள் அரசிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

அரசாங்கம் கொடுக்கப்பட்ட கால வரையறைக்குள் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் எதிர்வரும் 21 ஆம் திகதியிலிருந்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கப் போவதாக ரயில்வே தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன. (இ-7)

## காசோலையில் கள்ளக் கையெழுத்து

# 57 இலட்சம் ரூபா மோசடிக் குற்றச்சாட்டில் சமுர்த்தி உத்தியோகத்தர் உட்பட 9 பேர் கைது

## தென்னை மரத்திலிருந்து 27 இலட்சம் ரூபா மீட்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்ட பிரதான சமுர்த்தித் திணைக்களத்திற்குரித்தான 57 இலட்சம் ரூபா நிதி மோசடி கையாடல் செய்யப்பட்டமை தொடர்பாக 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமைப் பொலிஸ் பெருங்குற்ற தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு சமுர்த்தித் திணைக்களத்திலுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் கணக்காளரின் கையொப்பத்தை காசோலையில் இட்டு பணத்தை மோசடி செய்ததாக விசாரணையில் தெரியவந்ததையடுத்தே நேற்று முன்தினம் குறித்த 9 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் உள்ள சமுர்த்தி திணைக்களத்தின் கணக்குப்பகுதிக்குப் பொறுப்பாகக் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் கடந்த 14ஆம் திகதி சமுர்த்தி திணைக்களத்திற்குரித்தான 57 இலட்சம் ரூபாவை சமுர்த்தி திணைக்களத்தின் கணக்காளரின் சரியான கையொப்பத்தை காசோலையில் இட்டு அதனை வங்கியில் கொடுத்து பணத்தை பெற்றுச் சென்றுள்ளார்.

கொழும்பிலுள்ள சமுர்த்தி திணைக்களத்தில் இருந்து செவ்வாய்க்கிழமை குறித்த அலுவலகத்தின் (திணைக்களத்தின் சராசரி நிலுவையை) மீதியை பரிசோதித்து கொழும்புக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்போது சமுர்த்தி திணைக்களத்தின் கணக்குக்கான வங்கிப்பணம் பரிசோதிக்கப்பட்டது.

சமுர்த்தி திணைக்களத்தின் வங்கிக்கணக்கை பரிசோதித்ததில் 57 இலட்சம் ரூபா பணம் காணாமற் போயுள்ளமை தெரிய வந்தது.

இதுவிடயமாக மட்டக்களப்பு தலைமைப் பொலிஸில் செவ்வாய்க்கிழமை (14.08.2018) கணக்காளரினால் முறைப்பாடு செய்யப்பட்டது.

மட்டக்களப்பு பொலிஸ் பெரும் குற்றத் தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி மேற்கொண்ட விரிவான விசாரணையின் பின்னர் சமுர்த்தி திணைக்களத்தில் கடமையாற்றிய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

தொடர்ந்து மேற்கொண்ட விசாரணையில் இவருடன் கூடவே, மேலும் 8 பேரை பண மோசடியில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபரை விசாரணைகளுக்கு உட்படுத்திய பொலிஸ் குழு அவரது சொந்த ஊரான வவுணதீவு பொலிஸ் பிரிவில் உள்ள கரவெட்டி கிராமத்திற்குச் சென்று பரிசோதனைகளை மேற்கொண்டது.

இதன்போது சந்தேக நபரின் வீட்டிலுள்ள தென்னை மரத்தில் இருந்து 27 இலட்சம் ரூபா பணம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர் இப்பணத்தை தனது உறவினர்கள் நான்கு பேரின் கணக்கிலக்கத்திற்கு பரிமாற்றம் செய்து அதனை மீளப்பெற்று தன்னுடைய வீட்டில் உள்ள தென்னை மரத்தில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் கைது செய்த 9 பேரை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# 2000 வருடங்கள் பழைமையான கல்லறைகள் கண்டுபிடிப்பு





(திருமலை)

திருகோணமலை, குச்சவெளி பிரதேச சபைக்கு உடபட்ட கும்புறுகஸ்வெள காட்டுப்பிரதேசத்தில் 43 இற்கு மேற்பட்ட 2000 வருடங்கள் பழைமையான கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டதாக திருகோணமலை தொல்பொருள் திணைக்கள நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ.எச்.ஏ சுமனதாச தெரிவித்தார்.

யான் ஓயா நீர் திசை திருப்பும் திட்ட நடவடிக்கையின் போதே இக் கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்ட தாகவும், அதே பிரதேசத்தில் பல தொல்பொருட்களையும் தமது குழுவினர் கண்டுபிடித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

கண்டு பிடிக்கப்பட்ட கல்லறைகளில் மூன்றை அங்கிருந்து அகழ்ந்தெடுத்து யான் ஓயா அணைக்கட்டின் அருகில் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் களஞ்சியத்தில் மக்கள் பார்வைக்கு வைக்க தாம் நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் யான் ஓயா நீர் திசை திருப்பும் நடவடிக்கையின் மூலம் கல்லறைப் பிரதேசங்கள் நீரில் மூழ்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ)

## மதுபான நிலையங்களை மூடுவதற்குத் தீர்மானம்

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டுக்கான கண்டி எசல பெரஹெர உற்சவ விழாவின் காரணமாக, கண்டி நகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில், இறைச்சி விற்பனை நிலையங்கள் மற்றும் மதுபான நிலையங்களை மூடுவதற்குத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, பெரஹெர ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள, கண்டி எசல பெஹெர உற்சவத்தையொட்டி, இறைச்சி, மீன் விற்பனை நிலையங்கள் மற்றும் மதுபான நிலையங்களனைத்தும் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை மூடப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சிங்கப்பூர் உடன்படிக்கையில் திருத்தம் செய்ய முடியும்-அரசு



(கொழும்பு)

சிங்கப்பூர் - இலங்கை சுதந்திர உடன்படிக்கையில் நாட்டுக்கு பாதிப்பு ஏற்படும் ஏதாவது விடயங்கள் இருப்பின் அதனை திருத்தம் செய்ய முடியும் என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிங்கப்பூர் - இலங்கை சுதந்திர உடன்படிக்கை சம்பந்தமாக விசாரிப்பதற்கு ஜனாதிபதி குழுவொன்றை நியமித்துள்ளதாகவும், இரண்டு மாத காலத்தில் அந்தக் குழு அது சம்பந்தமாக அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அந்த அறிக்கையின் படி உடன்படிக்கையில் நாட்டுக்கு பாதிப்பு ஏற்படும் விடயங்கள் இருப்பின் அதனை ஒரு வருடத்திற்குள் திருத்தம் செய்ய முடியும் என்றும் அமைச்சர் சமரசிங்க தெரிவித்தார். (இ-7)

# இதுவரை காலமும் முன்னெடுத்த செயற்பாடுகளை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன்- ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றி எதிர்வரும் 18 ஆம் திகதியுடன் மூன்று வருடங்கள் நிறைவடைகின்றன. இந்த நிலையில், அரசாங்கத்தின் இதுவரையான கால செயற்பாடுகளையிட்டு தாம் மகிழ்ச்சியடைவதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

அரசாங்கத்தகவல்திணைக்களத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து எதிர்வரும் 18 ஆம் திகதியுடன் மூன்று வருடங்கள் பூர்த்தியாகின்றன. இதனையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

மக்களுக்குத் தேவையானபல்வேறுமுக்கியதேவைகளை இந்தக் காலத்துக்குள் நிறைவேற்ற முடிந்தமையை யிட்டு தனிப்பட்ட ரீதியாகவும் நான் மகிழ்ச்சியடைகிறேன். அதேநேரம், அரசாங்கத்தின் இந்தச் செயற்பாடுகள் மக்களிடத்தில் முறையாக சென்றடையாத மையை இட்டும், நாம் கவலை அடைகிறோம்.

அரசாங்கத்தின் செயற்பாடுகள் நாட்டு மக்களுக்குத் தெரியாதமை மட்டுமே ஒரு பாரிய குறையாக இருந்து வருகிறது. எனவே, இதனை எதிர்காலத்தில் நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்வோம்.

ஊடகங்களின் பங்களிப்புடன், இனிமேல் அரசாங்கத்தின் செயற்பாடுகளை மக்களுக்குத் தெரியப்படுத்துவதையும் நாம் பிரதான விடயமாக செயற்படுத்துவோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | | மருதனார்மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 70 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 85 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 140 | 160 | 300 | 200 |
| தக்காளி | 60 | 80 | 80 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 40 | 85 |
| கோவா | 130 | 140 | 80 | 160 | 200 |
| கரட் | 200 | 400 | 250 | 400 | 450 |
| பூசணி | 80 | 70 | 50 | 100 | 60 |
| புடோல் | 60 | 60 | 40 | 80 | 80 |
| வாழைக்காய் | 100 | 100 | 70 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 95 | 120 | 120 |
| பாகற்காய் | 140 | 140 | 160 | 200 | 120 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 40 | 100 | 50 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 75 | 120 | 100 |
| பயற்றங்காய் | 100 | 120 | 60 | 80 | 70 |
| லீக்ஸ் | 150 | 140 | 70 | 120 | 140 |
| பீற்றூட் | 80 | 90 | 90 | 120 | 160 |
| கறிமிளகாய் | 140 | 150 | 150 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 60 | 60 | 40 | 120 | 30 |
| போஞ்சி | 250 | 200 | – | 240 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 55 | 100 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 30 | 25 | 50 | 80 | 20 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 45 | 30-50 | 30-60 |
| இராசவள்ளி | 150 | 150 | 120 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 120 | 90 | 200 | 100 |
| முள்ளங்கி | 40 | 50 | 30 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 20 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 60 | 130 | 80 | 100 |

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2018-16.09.2018

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## உச்ச செவ்வாயால் யோகம்!






விளம்பி வருடம் ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் உச்சம் பெற்றுத் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நிலையான வருமானத்திற்கு வழிவகுத்துக் கொள்ள வாய்ப்புகள் கைகூடி வரும். குரு-சந்திர யோகத்தோடும், குருவின் பார்வை பலத்தோடும் இந்த மாதம் பிறக்கின்றது. எனவே நினைத்த காரியங்கள் நிறைவேறும். நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறையவே இல்லத்தில் நடைபெறும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த வேலைவாய்ப்பு கிடைக்கும். நீண்ட நாட்களாக வேலை தேடுபவர்களுக்கு அதற்கான பலன் கிடைக்கும். பணி நிரந்தரமாகவில்லையே என்று நினைத்தவர்களுக்கு அந்த எதிர்பார்ப்பு நிறைவேறும். கல்வி ஸ்தானத்தில் புதன் இருப்பதால், கல்விக்காக எடுத்த முயற்சி வெற்றியாகும். மேல் படிப்பைத் தொடர முடியவில்லையே என்று நினைத்தவர்களுக்கு அதற்கான வாய்ப்புக் கைகூடும். ஒரு சிலருக்கு வெளிநாடு சென்று படிக்கும் வாய்ப்புக்கூட அமையலாம். முயற்சித்த செயல்களில் எல்லாம் முத்தான பலன் கிடைக்கும் நேரமிது. சூரிய பலமும் நன்றாக இருக்கிறது. பஞ்சம ஸ்தானத்தில் சூரியன் பலம்பெறும் பொழுது அஞ்ச வேண்டியதில்லை. குழந்தைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். பார்க்கும் குருவைப் பலப்படுத்த வியாழக் கிழமைதோறும் விரதமிருந்து, தென்முகக் கடவுளை இன்முகத்தோடு வழிபட்டு வாருங்கள். நன்மைகள் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாகக் கிடைக்கும்.

### சனி வக்கிர நிவர்த்தி காலம்!

இதுவரை வக்கிர இயக்கத்தில் இருந்த சனி பகவான் ஒகஸ்ட் 20 ஆம் திகதியன்று வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு 10, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவர் வக்கிர நிவர்த்தியானதும் தொழிலில் மிகப்பெரிய முன்னேற்றம் கிடைக்கும். தொழிலில் குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர். சனி வக்கிர நிவர்த்தியாகும் நேரத்தில், சனிபகவானுக்குரிய சிறப்பு தலங்களுக்கு யோகபலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வந்தால் வளர்ச்சி அதிகரிக்கும்.

### புதனின் பெயர்ச்சி காலம்!

உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், புதன். அவர் ஒகஸ்ட் 28 ஆம் திகதி சிம்ம இராசிக்குச் செல்கிறார். பிறகு செப்டெம்பர் 15 ஆம் திகதி கன்னி இராசிக்குச் சென்று உச்சம் பெறுகிறார். இதற்கிடையில் செப்டெம்பர் 3 ஆம் திகதி சிம்மத்தில் புதன் அஸ்தமனமாகி வலிமையிழக்கத் தொடங்குகிறார். சிம்மத்தில் புதன் சஞ்சரிக்கின்ற பொழுது, சகோதர வர்க்கத்தினருடன் இருந்த சச்சரவுகள் அகலும். பூர்வீக சொத்துப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். புத-ஆதித்ய யோகம் ஏற்படுவதால் மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக்கசப்புகள் மாறும்.

கன்னி இராசியில் புதன் சஞ்சரிக்கும் பொழுது, உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் கிடைக்கும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை தானாக வந்து சேரும். வீடு கட்ட வேண்டும், வாகனம் வாங்க வேண்டுமென்று திட்டமிட்டிருந்தவர்களுக்கு மேலிடத்தில் இருந்து எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அதிகப் பொறுப்புடன் கூடிய பதவிகள் வரலாம்.

### சுக்கிரப் பெயர்ச்சிக் காலம்!

ஒகஸ்டு 28 ஆம் திகதி துலாம் இராசிக்கு சுக்கிரன் வருகிறார். அது அவருக்கு சொந்த வீடாகும். தன சப்தமாதிபதி சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் பொழுது தனவரவு தாராளமாக வந்து கொண்டேயிருக்கும். வருமானம் இருமடங்காகும் நேரம் இது. எனவே உங்கள் சம்பாத்தியத்தோடு உடன் இருப்பவர்களும் சம்பாதித்து உயர்நிலையை அடைய வழிவகுக்கும். அதேநேரத்தில் குரு-சுக்கிர சேர்க்கை இருப்பதால், அசுர குரு, தேவ குருவின் இணைப்பு ஒருசிலருக்கு திடீர் யோகத்தை கொடுக்கும்.

### செவ்வாய் வக்கிர நிவர்த்தி

உங்கள் இராசிநாதன் செவ்வாய், மகர இராசியில் உச்சம் பெற்றும், வக்கிரம் பெற்றும் சஞ்சரிக்கிறார். அவர் செப்டெம்பர் 6 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். இக்காலம் ஒரு இனிய காலமாகும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு. வியாபார விருத்தி அதிகரிக்கும். செயலில் வேகம் காட்டுவீர்கள். சகோதர சச்சரவுகள் அகலும். செய்யும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

இம்மாதம் ஆவணி சதுர்த்தியில் ஆனைமுகப்பெருமானை வழிபாடு செய்வது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் உங்களுக்கு இனிய மாதமாகும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். இராசிநாதன் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாவதால் ஆரோக்கியத் தொல்லை அகலும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். சனி வக்கிர நிவர்த்தியாவதால், பெற்றோர் வழியில் கேட்ட உதவி கிடைக்கும். குரு பார்வையால் விவாகப் பேச்சுகள் கைகூடும். பிள்ளைகளின் சுபகாரியங்கள் குறிப்பிட்டபடி நடைபெறும். பணிபுரியும் பெண்களுக்கு மேலதிகாரிகள் பக்கபலமாக இருப்பர். சம்பள உயர்வு சந்தோசத்தைத் தரும். ஆடை, ஆபரணச் சேர்க்கையுண்டு. சதுர்த்தியன்று முழுமையாக விரதமிருந்து ஆனைமுகப் பெருமானை வழிபட்டால் ஆனந்தமான வாழ்க்கை நமக்கு அமையும்.

## பலம் பெறும் அஷ்டமத்துச் சனி!






விளம்பி வருடம் ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் நீச்சம் பெற்றுச் சஞ்சரிக்கிறார். இராசிநாதன் பலமிழந்து இருக்கும்போது எந்தக் காரியமும் திருப்திகரமாக இருக்காது. எனவே ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். அதிக மனக்குழப்பத்தால் பல காரியங்களைச் செய்ய முடியாமல் போகலாம். தடைகளும் தாமதங்களும் அதிகரிக்கிறதே என்று கவலைப்படுவீர்கள். தன வரவிலும் பிரச்சினை உருவாகும்.

அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் சனி இதுவரை வலிமை இழந்து வக்கிரம் பெற்றுச் சஞ்சரித்தார். அதனால் உங்களுக்கு எண்ணற்ற துயரங்கள், இடையூறுகள் ஏற்பட்டிருக்கும். இம்மாதம் சனி பகவான், வக்கிர நிவர்த்தியாகிப் பலம்பெறப் போகிறார். அகப்பட்டவனுக்கு அஷ்டமத்தில் சனி என்பது பழமொழி. எனவே எதிலும் பிரச்சினைகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

தனாதிபதி புதனை விரயாதிபதி செவ்வாய் பார்ப்பதால் விரயங்கள் ஏற்பட்டாலும், உச்சம் பெற்று சஞ்சரிக்கப் போகும் புதனால் பணத் தேவை உடனுக்குடன் பூர்த்தியாகும். குருவின் பார்வை இரண்டிலும் பன்னிரண்டிலும் பதிவது யோகம்தான். இடமாற்றங்கள், வீடு மாற்றங்கள் மட்டுமின்றி உத்தியோகம், தொழில் மாற்றங்களும்கூட உறுதியாகலாம். இம்மாதம் விநாயகர் சதுர்த்தி வருவதால், அன்றைய தினம் உள்ளன்போடு விநாயகப்பெருமானை விரதமிருந்து வழிபட்டால், வந்த துயரங்கள் வாயிலோடு நிற்கும்.

### சனி வக்கிர நிவர்த்திக் காலம்!

உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகமான சனி பகவான் அஷ்டமத்தில் இப்பொழுது அடியெடுத்து வைக்கிறார். அப்படி வைக்கும் பொழுது ஒரு சில காரியங்கள், நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்றுமாக அமையலாம். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாவது கடினம். நேசித்தவர்களோடு கூட யோசித்துப் பேசும் நிலை ஏற்படும். அப்படிப்பட்ட சனி பகவான் ஒகஸ்ட் 20 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிப் பலம்பெறுகிறார். அதன்பிறகு உங்களுக்கு எல்லா வழிகளிலும் ஏராளமான மாற்றங்கள் ஏற்படப் போகிறது. குரு வீட்டில் சனி இருப்பதால் பயப்படத் தேவையில்லை. எதிர்பார்ப்புகள் எப்படியாவது கடைசி நேரத்தில் நிறைவேறிவிடும். இருப்பினும் திருநள்ளாறு, திருக்கொள்ளிக்காடு, குச்சானூர், பெரிச்சிக் கோவில் போன்ற சிறப்பு ஸ்தலங்களில் ஒன்றுக்குச் சென்று வழிபடுங்கள்.

### புதன் பெயர்ச்சி காலம்!

ஒகஸ்ட் 28 ஆம் திகதி சிம்ம இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், சூரியனோடு இணைந்து புத-ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். எனவே படிப்பில் ஏற்பட்ட தடை அகலும். புதிய பாதை புலப்படும். புகழ் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து பல நல்ல காரியங்களை முடித்துக் கொடுப்பர் பூமியோகம் முதல் அனைத்து யோகங்களும் கிடைக்கும். விலகியிருந்த பெற்றோர்களின் உறவு புதுப்பிக்கப்படும். 3.9.2018 இல் புதன் கொஞ்சம் வலிமையிழக்கின்றார். எனவே அந்த நேரத்தில் பணப்பற்றாக் குறை ஏற்பட்டு அகலும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் உருவாகும். செப்டெம்பர் 15 ஆம் திகதி கன்னி இராசிக்குப் புதன் சென்று உச்சம் பெறுகிறார். இதன் விளைவாக புத-சுக்கிர யோகம் ஏற்படும். மேலும் நீச்ச பங்க இராஜயோகமும் உருவாகும். இந்த யோகங்களின் பலனால் வீட்டில் மங்கல ஓசை கேட்கும் வாய்ப்பும், மழலையின் ஓசை கேட்கும் வாய்ப்பும் உருவாகும். தங்கு தடைகள் ஓரளவு விலகும். தனவரவு திருப்தி தரும். பூர்வீகச்சொத்துகளால் இலாபம் உண்டு.

### சுக்கிர பெயர்ச்சிக் காலம்!

ஒகஸ்ட் 28 ஆம் திகததி துலாம் இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். அங்கிருக்கும் குருவோடு அவர் இணைந்து செயற்படப் போவதால், விபரீத இராஜயோக அடிப்படையில் நல்ல சம்பவங்கள் பலவும் நடைபெறலாம். நாடு மாற்றங்களும் வீடு மாற்றங்களும் ஒருசிலருக்கு ஏற்படும். தங்கம், வெள்ளி, ஆடை, ஆபரணங்கள் வாங்குவதில் தனிக் கவனம் செலுத்துவீர்கள். உடல்நலம் சீராகி உற்சாகப்படுத்தும். சொத்துகள் வாங்குவதில் ஆர்வம் ஏற்படும்.

### செவ்வாய் வக்கிர நிவர்த்தி

உங்கள் இராசிக்கு 7, 12 இற்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் மாதத் தொடக்கத்தில் வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். செப்டெம்பர் 6 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். சப்தம விரயாதிபதி வக்கிர நிவர்த்தியாகிப் பலம் பெறுகின்றார். எனவே விரயங்கள் கொஞ்சம் கூடுதலாகத்தான் இருக்கும். வீடு கட்டும் யோகம் முதல் நாடுமாற்றம் செய்யும் யோகம் வரை நல்ல மாற்றங்கள் உங்களுக்கு வந்து கொண்டேயிருக்கும். பூமி விற்பனையால் தனலாபம் கிடைக்கும். விலகிச்சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்திணைவர். இம்மாதம் சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயரை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

ஆரோக்கியத்தில் அதிக அக்கறை செலுத்த வேண்டிய மாதம் இது. அஷ்டமத்துச் சனி பலம் பெறுகிறார். எனவே அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டியதும் அவசியம். அதிகச் செலவுகளால் வாட்டம் கொள்வீர்கள். புதிய முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படும். தொழில் போட்டிகள் தலைதூக்கும். தொல்லை கொடுப்பவர்களின் எண்ணிக்கை உயரும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. குடும்ப எதிர்காலம் குறித்து முக்கிய முடிவெடுப்பீர்கள். பிள்ளைகள் வழியில் தள்ளிப் போன சுபகாரியங்கள் தானாக முடிவடையும். 6 இல் குரு இருப்பதால் உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் வந்து சேரும். பணிபுரியும் பெண்கள் உயர்வு காண்பர். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்களை வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர்.

(தொடரும்)

துருப்பிடித்து அழிவதை விட
தேய்ந்து அழிவது சிறப்பாகும்.

~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## முதலமைச்சர் மீதான எதிர்ப்பை நிர்மூலமாக்காவிட்டால்...

தமிழ் அரசியல்வாதிகள் தொடர்பில் மக்களிடம் ஆரோக்கியமான கருத்துநிலை இல்லை என்பது தெளிவு.

ஆக, வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் கூறுகின்ற கருத்துக்கள் மட்டுமே தமிழ் மக்களுக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகிறது.

எனினும் தனிமனிதராக நின்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் யதார்த்த பூர்வமான கருத்துக்களைக் கூறுவதால் அவருக்கான எதிர்ப்பு தமிழ் அரசியல் தரப்பிடம் கடுமையாக ஏற்படவே செய்கிறது.

அதாவது முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் தமிழ் மக்கள் தொடர்பான கருத்துக்களும் தென்பகுதி அரசியல்வாதிகளுக்கு உடனுக்குடன் வழங்கும் பதில்களும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் தெரிவிக்கின்ற விடயங்களும் யதார்த்தமானவை என்பதுடன் அவர் இருப்பதால்தான் தமிழ் மக்களின் உள்ளக்கிடக்கை வெளிப்படுத்தப்படுகின்றது என்ற நம்பிக்கையையும் தமிழ் மக்களிடம் ஏற்படுத்தி உள்ளது.

எனினும் தமிழ் அரசியல் தரப்புக்கு இது உடன்பாடில்லை என்றபோதுதான் முதலமைச்சருக்கு எதிரான கருத்துக்கள் சுவாலைவிட்டு எரிகிறது.

எவ்வளவுதான் நெருப்பு எரிந்தாலும் அந்த எரிதலை தணித்து முதலமைச்சரின் கருத்தை நிலைநிறுத்த தமிழ் மக்கள் தயாராக இருக்கின்றனர் என்பது நிறுதிட்டமான உண்மை.

இருந்தும் தமிழ் மக்கள் விடயத்தில் சகலரும் ஒரே கருத்தை; ஒரே கொள்கையைக் கொண்டிருக்கும்போதுதான் தமிழ் மக்களுக்குப் பலமாக அமையும்.

ஆனால் அத்தகைதொரு பொது உடன்பாடும் ஒற்றுமையும் ஏற்படக்கூடிய வாய்ப்பு அறவே இல்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை.

அதாவது தமிழ் அரசியல்வாதிகளில் ஒரு தரப்பினர் சிங்கள ஆட்சியாளர்களிடம் சரணாகதியடைந்து விட்டனர்.

இந்தச் சரணாகதி எதற்கானது என்பது தெரியாவிட்டாலும் அவர்களால் ஆட்சியாளர்களிடம் இருந்து இனிமேல் மீண்டுவர முடியாது என்பது மறுதலிப்பற்ற உண்மை.

இதுதவிர, தமிழின அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட தமிழ் அரசியல்வாதிகள் சிலரும் அரசிடம் சரணாகதியடைந்த தமிழ் அரசியல்வாதிகளுடன் இரண்டறக் கலந்துவிட்டதன் காரணமாக நிலைமை மிகமோசமாகிவிட்டது.

இதன்பின்னணியாக முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களுக்கான எதிர்ப்பு என்பது தமிழ் அரசியல் தரப்பிடம் வலுவடைந்து வருகிறது.

இந்த எதிர்ப்பை தமிழ் மக்கள் முறியடிக்கத் தவறினால் அதன் விளைவு தமிழினத்தின் கதை முடிந்தது என்பதாகவே இருக்கும்.

எனவே யுத்த காலத்தில் இருந்த நிலைமையை விட இப்போதுதான் மிக மோசமான நிலை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமைகளை வெற்றி கொள்வதில்தான் தமிழர்களின் எதிர்கால வாழ்வு தங்கியுள்ளது.

# அம்மா அழைத்தாலும் மகிந்தவை விட்டு விலகேன்

## முன்னாள் அமைச்சர் பஸ்நாயக்க பாசம்

(கொழும்பு)

அம்மா உட்பட எவர் அழைத்தாலும் இனிமேல் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கைவிட்டு செல்லப் போவதில்லை என முன்னாள் அமைச்சர் தாரா நாத் பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திலிருந்து வெளியேறிய 16 பேர் அணியின் சார்பில் கொழும்பில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்திலிருந்து விலகிய 16 பேர் அணியில் முதலில் நானே கூட்டு எதிர்க் கட்சியில் இணைந்தேன். மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து ஆசி பெற்றுக்கொண்ட பின்னரே நான் அரசாங்கத்திலிருந்து வெளியேறினேன். தற்போது 16 பேர் அணி என்று எதுவுமில்லை.

கூட்டு எதிர்க்கட்சியே உள்ளது. இதனால், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அதிகார சபைகளை ஏற்படுத்துவது, அதன் மத்திய செயற்குழுக் கூட்டத்திற்கு செல்வது ஆகியவற்றை மேற்கொள்ள தேவையில்லை.

நான் அப்படி செய்யமாட்டேன. நான் நேரடியாக மகிந்தவுடன் அணியில் இருப்பவன். சிலருக்கு கூட்டு எதிர்க் கட்சியில் போதிய அங்கீகாரமில்லை.

எனினும் என்னை மகிந்த ராஜபக்ஷ முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளார். வேறு நபர்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பதவிகளை பெற்றுக்கொள்ளவும் பதவிகளில் இருக்கவும் வேண்டுமாயின் 16 பேர் அணியை அதனோடு சம்பந்தப்படுத்தக் கூடாது.

கட்சி பற்றி சிந்தித்து, நாட்டுக்கு ஏதாவது ஒன்றை செய்ய வேண்டும் என்று எண்ணியே நாங்கள் அன்று அரசாங்கத்துடன் இணைந்தோம்.

எனினும் மக்களுக்கு சேவைகளை செய்ய முடியாது என்று காட்டிய அரசாங்கம் தற்போதைய அரசாங்கம். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இது தெளிவாக புலப்பட்டது.

இது போன்ற முதுகெலும்பில்லாத அரசாங்கத்தில் அங்கம் வகித்தேன் என்பது வெட்கமானது. அரசாங்கத்தை மாற்றி, மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில், இவை அனைத்துக்கும் தீர்வை வழங்குவோம் எனவும் தாராநாத் பஸ்நாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# விபத்துக்களை கட்டுப்படுத்த அறிமுகப்படுத்திய புதிய அபராத முறையை நீக்கப் போவதில்லை

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா

வீதி விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அபராத முறையை எவ்வித கார ணங்களுக்காகவும் மீளப் பெறுவதில்லை என்று போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறியுள்ளார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அபராத முறையை நீக்க கோருவது பஸ் உரிமையாளர்கள் அல்ல என்றும் பஸ்களில் பணியாற்றும் நபர்களின் தேவைக்கு ஏற்ப ஒருபோதும் இதுபோன்ற தீர்மானங்களை எடுப்பதில்லை என்றும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறியுள்ளார்.

போக்குவரத்தில் உண்மையான ஒழுங்கு முறை இருக்க வேண்டும் என்றும், எதிர்காலத்தில் தேவையென்றால் அதனை வேறு சட்டமூலத்தின் ஊடாக திருத்தம் செய்ய முடியும் என்றாலும் தற்போதைய அரசாங்கம் அதுபோன்ற தீர்மானம் எடுக்காது என்றும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும் இன்றைய பஸ்களின் வேலை நிறுத்தம் மொத்தமாக பார்க்கும் போது தோல்வி என்றாலும் சில பிரதேசங்களில் மக்கள் பாதிப்படைந்திருப்பதாக அறியக் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார். (ம)

## சீரற்ற வானிலையால் நெடுந்தீவுக்கு ஹெலியில் பறந்த வினாத்தாள்கள்

நெடுந்தீவில் தொடர்ச்சியாக நிலவிவரும் சீரற்ற வானிலை காரணமாக தற்பொழுது நடைபெற்றுவரும் உயர்தரப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் அனைத்தும் ஹெலிகொப்டர் மூலம் கொண்டு செல்லப்பட்டன.

நேற்று முன்தினமும் நேற்றும் பெய்த மழையின் காரணமாகவும் கடற்பகுதிகளில் வீசும் கடும் காற்றின் காரணமாகவும் கடல் மார்க்கமாகப் பயணம் செய்ய முடியாத காரணத்தால் பரீட்சைககான வினாத்தாள்கள ஹெலிகொப்ர்மூலமகொண்டு செல்லப்பட்டன. (ம)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### தர்க்கம், விதர்க்கம் மற்றும் குதர்க்கம்

உன்னை அறிவதற்கும் உன்னுடைய செயல்களை மதிப்பிடுவதற்கும் நீ தர்க்கம், விதர்க்கம் மற்றும் குதர்க்கம் பற்றி அறிதல் தேவை.

குதர்க்கம் என்பது தவறான வாதம். உதாரணம் கதவு பாதி திறந்திருக்கிறது என்றால் பாதி மூடி உள்ளது என்று ஆததம. ஆகையால கதவு முழுகக திறநதிருககிறது என்றால் முழுக்க மூடியுள்ளது என்றா அர்த்தம்.

மற்றொரு உதாரணம்: அன்பே கடவுள்; அன்பிற்குக் கண்ணில்லை, குருடு. ஆகையினால் கடவுள் குருடு! பலா தாககததை இவவிதம தவறாக உபயோகிதது அறியாமையில் சிக்கிக் கொள்கிறார்கள்.

தாககம தொடா வாதம; அது விஞ்ஞான அறிவைப பெருக்குகிறது. ஆனால் விஞ்ஞான முடிவுகள் மாறுகின்றன. உதாரணம் முன்பு பூச்சிக்கொல்லிகள் மிக உபயோகமானவை என்று கருதப்பட்டன. ஆனால் இப்போது அவை மிகத தங்கை விளைவிபபவை எனறு நிரூபிக கப்பட்டுள்ளன. தர்க்கத்தில் உதாரணம் காலத்தால் மாறுகிறது.

(தெளிவற்ற கேள்விகளை நேரடி பதில் இல்லாத கேள்விகளைக் கேட்பது விதர்க்கம். " நான் யார்?" " எனக்கு உண்மையிலேயே என்ன தேவை?" இந்தத் தத்துவ ஞானக் கேள்விகள் உன் விழிப்புணர்வை அதிகமாக்குகின்றன. ஆன்மா பற்றிய அறிவைத் தருகின்றன. அறிவாளிகள் எப்படி இந்த மூன்றினையும் வேறுபடுத்தறிவது என்று அறிவார்கள்.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### எட்டு திசைகளிலும் விளக்கு ஏற்றுவதன் பயன்?

**தென்கிழக்கு திசை**

இததிசையை நோககி தபம ஏறறினால குழநதைகளுக்கு புத்தி கூர்மை உண்டாகும். குழந்தைகள் படிப்பில் கெட்டியாக விளங்குவர். இதற்கு தென்கிழக்கு திசையில் தீபம் ஏற்றி அதன் புகையை குழந்தைக்கு நெற்றியில் இடவேணடும.

**தெனமேறகு திசை**

இத்திசையில் தீபம் ஏற்ற பெண்கள் மற்றும் ஆண்களுக்கு வரும் துன்பம், கலகம் ஆகியன நீங்கும். திருமணத் தடங்கல்கள் நீங்கும்.

**வடகிழக்கு திசை**

இத்திசை நோக்கி தீபம் ஏற்றினால் வீட்டின் தலைவர் வாழ்வில் உண்மையான கொடையாளியாக மாறுவார். அவரும் அவர்தம் பிள்ளைகளும் தம்மையும் அறியாமல் தானம் செய்வர்.

**வடமேற்கு திசை**

இத்திசை நோக்கி தீபம் ஏற்றினால் சகோதர சகோதரி ஒற்றுமை நிலவும். குடும்பச் சண்டைகள் நீங்கும்.

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### நல்லதைச் செய்வோம்

✦ ஒழுக்கமுள்ளவனாக இரு! மக்களில் நீயே சிறந்தவன். போதுமென்ற மனப்பான்மை உள்ளவனாக இரு! மக்களில் நீயே நன்றியுள்ளவன். உனக்காக எதை விரும்புகிறாயோ அதையே மற்றவர்களுக்கும் விரும்பு.

✦ மனத்தை அடக்கியாண்டு மறுமைக்குப் பயன்படும் பணிகளைச் செய்பவனே அறிவாளி. மனம் போன போக்கில் நடந்து அருளை எதிர்பார்ப்பவன் முட்டாள்!

✦ நாவு நேர்மையாக இருக்குமானால் ஒருவனுடைய இதயம நேரமையான வழியில செலலும. நாவு நேரமையற்றதாக இருக்குமானால் இதயம் நேர்மையான வழியில் செல்ல முடியாது.

✦ குர்ஆனை கற்றுக் கொடுப்பதை கட்டாயமாக ஆக்கிக் கொள்ளுங்கள். உங்கள் குழந்தை முதல் முதலாக குர்ஆனை ஓத ஆரம்பித்தால் உங்களின் பாவங்கள் உடனே மன்னிக்கப்படுகின்றன.

✦ ஒரு காரியததை நர செயய விருமபினால அதன முடிவை எண்ணிப்பாரும். உம் சிந்தனையில் அதன் முடிவு நலலதாக இருநதால அதைச செயவர! இலலையேல் அதை விட்டு விடும்!

# தேசிய ரீதியிலான குத்துச்சண்டை வடமாகாணத்திற்கு 12 தங்கங்கள்



தேசிய ரீதியில் நடைபெற்ற வூசோ குத்துச் சண்டைப் போட்டியில் வடமாகாணத்தைச் சேர்ந்த 12 வீரர்கள் பதக்கங்களை வென்றுள்ளனர்.

கொழும்பு மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் கடந்த 10 ஆம் திகதி மற்றும் 11 ஆம் திகதிகளில் தேசிய ரீதியில் நடைபெற்ற (வூசோ) குத்துச்சண்டை போட்டிகளில் வவுனியாவைச் சேர்ந்த 15 இளைஞர்-யுவதிகள் பங்குபற்றி 12 பேர் பதக்கங்களை வென்றுள்ளனர்.

வடமாகாண வூசோ அமைப்பினூடாக, வவுனியா கண் போய்ஸ் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் இக் குத்துச்சண்டைப் போட்டியில் பங்கு பற்றியிருந்தனர்.

அந்தவகையில் ஆறு தங்கப்பதக்கங்களையும் நான்கு வெள்ளிப் பதக்கங்களையும் இரண்டு வெண்கலப்பதக்கத்தையும் சுவீகரித்துக் கொண்டனர்.

இப்போட்டியில் நான்கு பெண் வீராங்கனைகள் கலந்துகொண்டு இரண்டு தங்கப்பதக்கத்தையும் இரண்டு வெள்ளிப்பதக்கத்தையும் சுவீகரித்திருந்தனர். (க-250)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் ஸ்கந்தா விளையாட்டுக் கழகம் கிளி/ அக்கராயன் மகா வித்தியாலய பழைய மாணவர் ஒன்றியம் பிரான்ஸ், தொடுவானம் நிகழ்ச்சித் திட்டம் ஊடாக நடத்தும் வடக்கு மாகாண ரீதியான மாபெரும் மென்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி தொடக்கம் செப்டெம்பர் 3 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. அணிக்கு பதினொருபேர் கொண்டதும் எட்டு பந்துப் பரிமாற்றம் கொண்டதுமான மட்டுப்படுத்தப்பட்ட இப் போட்டியில் முதலாம் இடம் பெறும் அணிக்கு ரூபாய் ஐம்பதாயிரமும், இரண்டாம் இடம் பெறும் அணிக்கு ரூபாய் இருபத்தையாயிரமும் வெற்றிக் கேடயங்களும் வழங்கப்படவுள்ளன.

இச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் அணிகள் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் 077 028 1285, 076 919 1301 என்ற தொடர்பு இலக்கத்துடன் பதிவுகளை மேற்கொள்ளலாம். (க)

# ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணம் கே.சி.சி.சி.அணி இரண்டாவது சுற்றில்




ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்திற்காக ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் வருடாவருடம் நடத்தும் சுற்றுப்போட்டியின் முதலாவது சுற்றில் கே.சி.சி.சி.அணி,யாழ்.ஜொனியன்ஸ் அணியை 3 இலக்குகளால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.ஜொனியன்ஸ் அணி 29.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் அன்புஜன்-61,சௌமியன்-26, ஞானமிர்தன்-21, டினேஸன்-11, லவேந்திரா-32, றஜீவ்-10,சன்சஜன்-28, அபிநாஸ்-11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெயரூபன்-02, ஜனுதாஸ்-02, சாம்பவன் -04, நிமலதாஸன்-01, இலக்குகளை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி. அணி 28.4 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 217 ஓட்டங்களைப்பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் ஜெயரூபன்-51, கேதீஸ்-14, ஜனுதாஸ்-20, சாம்பவன்-35, துஷி ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் டினூஸன்-02 பிருந்தாபன்-02, லவேந்திரா-02, அபிநாஸ்-01 இலக்கினை கைப்பற்றினர். தரவரிசை பட்டியலுக்குகே.சி.சி.சி. அணி 6.57புள்ளிகளையும் யாழ். ஜொனியன்ஸ் அணி 2.96 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)

# கனகபுரம் திட்டம் 60வது ஆண்டு நிறைவு விழா

கிளிநொச்சி மாவட்டம் கனகபுரம் திட்டம் தனது 60ஆம் ஆண்டு நிறைவு விழா கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கனகபுரம் 60 ஆண்டு நிறைவுவிழாச்சபையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆண்,பெண் இருபாலாருக்குமான மாவட்டமட்டத்திலான திறந்த மரதன் ஓட்டப்போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறும். 2 ஆம் திகதி ஞாயிற'றுக் கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 6.30 மணி வரை மைதான விளையாட்டுக்கள் நடைபெறும்.

இப்பகுதி மக்களுக்கு வேறாகவும் பாடசாலை மாணவர்களுக்கு வேறாகவும் நடத்தப்படவுள்ளதுடன் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வின் இறுதி விழா கனகபுரம் நண்பர்கள் விடுதியில் காலை 9 மணி தொடக்கம இரவு 7 மணி வரை நடத்தப்படும். (க-254)

# ஆனைக்கோட்டை யூனியனை வீழ்த்தி மல்லாகம் ஸ்ரார் அணி சம்பியன்



கோப்பாய் விக்றி விளையாட்டுக்கழகம் நடத்திய அணிக்கு 7 பேர் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் மல்லாகம் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வெற்றிக் கிண்ணத்தை வென்றுள்ளது.

இறுதிப் போட்டியில் மல்லாகம் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் ஆனைக் கோட்டை யூனியன் அணியும் பலப்பரீட்சை நடத்தின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யூனியன் அணித் தலைவர் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி ஐந்து பந்துப் பரிமாற்றங்களில் ஐந்து இலக்குகளை இழந்து 36 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் அஸ்ரன் 18 ஓட்டங்கள் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் கஜமுகன் 3. இலக்குகளையும் அகில்ராஜ், சஞ்சீஜிவன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். 37 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்ரார் அணி அணித் தலைவர் கஜமுகனின் அபார ஆட்டத்தின் மூலம் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றது.

துடுப்பாட்டத்தில் கஜமுகன் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும் சயன் ஆட்டமிழக்காமல் 4 ஓட்டங் களையும் பெற்றுக் கொண்டனர். (க)

## மருத்துவத் தொழில்...

விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட தாதிகள் விடுதி மற்றும் இலங்கை அரச மருந்தாக்கல், கூட்டுத்தாபனத்தின் அரச ஔசல மருந்தகத் திறப்பு விழா, மீள்வாழ்வு நிலையத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரச வைத்தியசாலைகளின் நெருக்கடிகளைக் குறைக்கும் விதமாக பல தனியார் மருத்துவமனைகள் ஆங்காங்கே தோன்றி சிறப்பாகச் செயற்படுகின்றன.

அரச மருத்துவமனைகளில் உடனடியாக மேற்கொள்ளப்பட முடியாத பல அறுவைச் சிகிச்சைகளும் மற்றும் இன்னோரன்ன சிகிச்சைகளும் உடனடியாகவோ அல்லது மறுதினமோ தனியார் மருத்துவ மனைகளில் மேற்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

ஆனால் அரச மருத்துவ மனைகளில் இது முடிவதில்லை. இதற்கான காரணம் போதிய மருத்துவ நிபுணர்கள் இன்மை, அறுவைச் சிகிச்சைக்கான சத்திர கூட நிலைய வசதிகளின் குறைபாடுகள், நோயாளிகளுக்கான இடப்பற்றாக்குறை மற்றும் வளப் பற்றாக் குறைகள் என்பன. இவற்றின் காரணமாக அரச மருத்துவமனைகளில் இந்த அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாதிருப்பது வேதனைக்குரியது. வாரங்கள், மாதங்கள் என்று நோயாளிகள் கர்த்துக்கொண்டிருக்க வேண்டியுள்ளது.

பிரத்தியேக மருத்துவமனைகளில் பணம படைத்தவர்களும், வசதி படைத்தவர்களும் தமது சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியுமாக இருக்கின்றது. ஆனால் நிதி நிலைமைகளில் நலிந்தவர்கள் தமது மருத்துவ சேவைகளை அரச மருத்துவமனைகளிலேயே பெற்றுக் கொள்ள முடியும். நலிந்த மக்களுக்கும் எமது சேவைகள் கிடைக்கப் பெற வேண்டும். அதற்கான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படல் வேண்டும்.

அதே போன்று பிரத்தியேக மருத்துவ மனைகளும் பொருளீட்டத்தை மட்டும் முதன்மைக் காரணியாகக் கொள்ளாது சேவை அடிப்படையில் நலிவுற்ற மக்களுக்கு ஏதோ ஒரு வகையில் மருத்துவ சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்ற வழி முறைகளை உருவாக்கித் தர வேண்டும்.

பிரத்தியேக மருத்துவமனைகளில் பணத்தைக் கறந்து எடுப்பதற்கென்றே சில உத்தியோகத்தர்களை விசேடமாகச் சேவைக்கு அமர்த்தியிருப்பதாகப் பலரும் கூறக் கேள்விப் பட்டிருக்கின்றேன். அவர்களின் பெயர் விபரங்களைக் கூட பொது மக்கள் வெளியிடுகின்றார்கள். இவர்களின் செயற்பாடு பிரத்தியேக மருத்துவமனைகளின் நிர்வாகக் கட்டமைப்புக்கும் வருமானத்திற்குமாக சில வேளைகளில் ஏற்புடையதாக இருக்கலாம்.

ஆனால் அங்கு மாலை நேரங்களிலும் இரவு நேரங்களிலும் தமது தூக்கம், குடும்ப சூழல் எல்லாவற்றையும் மறந்து சேவையாற்றச் செல்லுகின்ற வைத்திய நிபுணர்களின் பெயர்களுக்குக் களங்கம் கற்பிக்கக் கூடிய வகையில் அவை இடம் பெறக் கூடாது.

சுண்டங்காய் காற்பணம் சுமை கூலி முக்கால் பணம் என்பது போன்று வைத்திய நிபுணர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் மக்களிடம் அறவிடப்படும் பணத்தில் எட்டில் ஒரு பங்கு கூட இருக்குமோ தெரியாது. கால்வாசி கூட இல்லை என்பது நிச்சயம். இந்த அட்டூழியங்கள் குறித்து வைத்திய நிபுணர்களும் அறிந்து வைத்திருக்க வேண்டும். நீங்கள் இவ்வாறான மருத்துவமனைகளுக்குச் சில அறிவுறுத்தல்களை வழங்க முடியும். இவ்வாறான மருத்துவமனைகளின் சேவைகள் பொதுவானதாகவும் எல்லா மக்களுக்கும் ஓரளவுக்கேனும் ஏற்புடையதாகவும் அமையாதவிடத்து அம் மருத்துவமனைகளில் நீங்கள் வழங்குகின்ற சேவைகளை விலத்திக் கொள்ளப் போகின்றீர்கள் எனத் தெரிவியுங்கள். உடனே அவர்கள் வழிக்கு வருவார்கள்.

இதன் மாற்றொழுங்காக அரச மருத்துவ மனைகளில் கூடுதல் கவனம் எடுத்து தற்போது நீங்கள் வழங்குகின்ற அர்ப்பணிப்புடனான சேவையை விட ஒரு படி மேலாகச் சென்று முடிந்தளவு பொருளாதார வசதியில் நலிந்தவர்களை அவர்களது நோய்களின் தன்மைகளிற்கேற்ப அவர்களுக்கான மருத்துவச் சேவைகளை வழங்குகின்ற போது உங்களைக் கடவுளுக்கு ஒப்பானவர்களாக இந்தச் சமூகம் நோக்கும். உங்கள் வளமான வாழ்விற்காகத் தினமும் பிரார்த்தனை பண்ணுவார்கள். உத்தம தொழில்களில் ஆசிரியத்தொழிலுக்கு அடுத்து மருத்துவ தொழில் இடம்பெறுகின்றது. அது மக்கள் சார்ந்ததாக இருக்க வேண்டும். பணம் சார்ந்ததாக இருக்கப்படாது.

மூன்றாவது உத்தம தொழில் சட்டத்தரணித் தொழில். ரோமர்கள் காலத்தில் சட்டத்தரணிகளின் கறுத்த அங்கிகளின் பின் புறத்தில் ஒரு சட்டைப் பை இருந்தது. கட்சிக்காரர்கள் வேண்டிய தொகையை அதில் போட்டுச் செல்வார்கள். பணம் கிடைத்தாலோ கிடைக்காவிட்டாலோ சட்டத்தரணியின் திறமை மக்கள் சார்பாக மன்றில் காட்டப்பட வேண்டியிருந்தது. அந்தக் காலத்தில் பணம் சார்ந்ததாக சட்டத்தரணித் தொழில் இருக்கவில்லை மருத்துவத் தொழிலும் மக்கள் சார்ந்ததாக மாற வேண்டும் என மேலும் தெரிவித்தார்.(ம-9)

## தமிழ் மக்களின்...

க்கப்படும் என்றார்.

அதேநேரம், எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திற்கு முன்னர் வைத்திய நிபுணர்களும் நியமிக்கப்படவுள்ளதுடன், மருத்துவ உதவியாளர்களும் நியமிக்கப்படவுள்ளனர்.

39 சுகாதார உதவியாளர்களுக்கான நியமனங்கள் வழங்கி வைக்கப்படுமென்றும், மகப்பேற்று மருத்துவமனைக்கான கட்டடம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் தொடர்மாடிகளை கட்டுவதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் காலங்களில் 6 மாடிகளைக் கொண்ட கட்டடங்கள் அமைத்துக்கொடுக்கப்படுமென்றும் உறுதியளித்தார்.

அத்துடன், மீள்வாழ்வு புனர்வாழ்வு பிரிவிற்கான கட்டடம் அமைப்பதற்காக குவைத் நாடு நிதி உதவி வழங்கியுள்ளது. கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது. மிக விரைவில், அந்தப் பிரிவும் யாழ்.போதனா வைத்தியசாலையில் திறந்து வைக்கப்படும். இந்த கட்டடத்திற்கான நிதி உதவியை வழங்கிய குவைத் நிறுவனத்தினருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார். (ம-9,101)

## சர்வதேசத்திற்கு...

கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த நிலையில் தமது பகுதிகளிற்கு திரும்பும் மக்களிற்கு உதவும் நோக்கில் ஐ.நா அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து பிரிட்டன் 1.3 மில்லியன் டொலர் பெறுமதியான திட்டமொன்றை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் தமது கிராமங்களிற்கு மக்கள் திரும்புவதற்கு உதவுவது குறித்து மகிழ்ச்சியடைந்துள்ளது என தெரிவித்துள்ள உயர்ஸ்தானிகர் மோதலின் பாரம்பரியங்களிற்கு தீர்வு கண்டு தற்போது இடம்பெற்றுவரும் முன்னேற்றத்திற்கு பங்களிப்பு செய்வதற்கு இது முக்கியமானது எனவும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## மருத்துவர் பற்றாக்...

வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட தாதிகள் விடுதி மற்றும் இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை கிளை ஆகியவற்றின் திறப்பு விழா நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் அவர் இந்த கோரிக்கையினை முன்வைத்தார்.

தொடர்ந்தும் அவர் மேலும் கூறுகையில்,

போரினால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசத்தில் பல்வேறு துறை சார்ந்த மருத்துவர்கள் எமது மருத்துவம்னைகளில் மிகவும் குறைவாக இருக்கின்றார்கள்.

அந்தவகையில் எமது பிரதேசத்தில் பல துறைகளை சார்ந்த மருத்துவர்கள் அவசியம் என்ற நிலையில், மருத்துவர்கள் தாதியர்கள் பற்றாக்குறை தொடர்பில் கூடுதல் அக்கறை செலுத்த வேண்டும் என மாவை சேனாதிராசா இதன் போது கேட்டுக்கொண்டார். (ம)

## 2018ஆம் ஆண்டு...

சுவாமிகளுக்கு வழங்கப்படுகிறது என யாழ்.மாநகர ஆணையாளரும் சைவசமய விவகாரக் குழுவின் தலைவருமான இ.த. ஜெயசீலன் அறிவித்துள்ளார்.

சைவசமய விவகாரக் குழுவின் மகா சபை அண்மையில் கூடிய போது 2018ஆம் ஆண்டிற்கான யாழ்.விருதை சந்நிதியான் ஆச்சிரமத்தின் இயக்குநர் மோகனதாஸ் சுவாமிகளுக்கு வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி யாழ்.விருது எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நல்லைக்குமரன் மலர் வெளியீட்டில் வைத்து வழங்கப்படும் என்றும் ஆணையாளர் அறிவித்துள்ளார்.(ம)

## ஜனாதிபதி தேர்தலில்...

சட்ட நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதிகள் மூன்றாம் தவணைக்காக போட்டியிடுவது தடைசெய்யப்படவில்லை என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். 19-ம் திருத்தச் சட்டத்தின் ஊடாக மூன்றாவது முறையாக எவரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாது என கூறப்பட்டுள்ளது.எனினும், இந்த சட்டத் திருத்தமானது கடந்த காலத்திற்கு பொருந்தக்கூடியதல்ல என சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே, 19-ம் திருத்தச் சட்டமானது முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா, மகிந்தவுக்கு பொருந்தாது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விரும்பினால் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடத் தடையில்லை என தெரிவித்துள்ளனர். எவ்வாறெனினும், இந்த விடயம் குறித்து உச்ச நீதிமன்றிடம் சட்ட விளக்கம் கோரப்பட வேண்டுமெனவும், எதிர்காலத்தில் வாக்காளர் ஒருவரினால் சட்ட விளக்கம் கோரப்படும் எனவும் கூறப்படுகிறது. (ம)

## கார் முற்றாக...

இவ்வாறு திடீரெனத் தீப்பிடித்து சேதமடைந்தது.

மருத்துவர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். தனது துணைவியை வைத்தியசாலைக்குச் சென்று பார்த்துவிட்டு வீடு திரும்பிய அவர், காரை வீட்டின் முன்னாள் நிறுத்திவிட்டு உள்ளே சென்றுள்ளார்.

காரிலிருந்து வயர் எரிந்த நாற்றம் வீசுவதாக அவரது பிள்ளைகள் தெரிவித்துள்ளனர். அதுதொடர்பில் சென்று பார்த்த போது, காரில் தீப்பிடித்தமை தெரிய வந்தது. சம்புவம் தொடர்பில் தீயணைப்புப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டது.

தீயணைப்புப் பிரிவினர் சம்பவ இடத்துக்குச் செல்வதற்குள் கார் முழுவதும் தீ பரவியுள்ளது. தீயணைப்புப் பிரிவினர் தீயை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். எனினும் கார் மோசமாகச் சேதமடைந்தது.

காரின் மின்னோட்ட வயர்களில் ஏற்பட்ட மின் ஒழுக்குக் காரணமாகவே கார் தீப்பற்றியிருக்கும் என்று தெரிவிக்கும் பொலிஸார், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவித்தனர். (ம)

## இலங்கை தொடர்பாக...

த்தல் மீளநிகழாமை தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளரும் தனது அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளார்.

இந்த இரு அறிக்கைகளையும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை ஆராயவுள்ளது. இலங்கைக்கு கடந்த வருடம் பயணம் மேற்கொண்ட கண்மூடித்தனமாக தடுத்துவைத்தல் தொடர்பான ஐ.நா செயற்குழு இலங்கை நிலவரம் தொட்ர்பில் கடும் அதிருப்தியை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தனிப்பட்ட சுதந்திரத்திற்கான உரிமையை இலங்கையின் பாதுகாப்பு தரப்பினரும் நீதித்துறையினரும் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளும் மதிக்கவில்லை என செயற்குழு குற்றம்சாட்டியிருந்தது. (ம)

## ஜெனிவாவில் தமிழ்...

வசந்த கீர்த்திரத்ன தெரிவித்தார்.

பொரளை என்.எம்.பெரேரா நிலையத்தில் உலகளாவிய தேசப்பற்றுள்ள இலங்கையர் ஒன்றியம் ஏற்பாடுசெய்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 38 ஆவது அமர்வில் நாம் கலந்து கொண்டிருந்தோம். அதன்போது எமது நாட்டுக்கு எதிராக புலம்பெயர் தமிழ் அமைப்புகள் எந்தளவிலான கெடுபிடிகளை மேற்கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டபோதும், அது சர்வதேச நாடுகளில் முன்னெடுக்கப்பட்டு வருவதனை அவதானிக்க முடிகிறது. அந்த நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும் காண முடிகிறது. எமது படைப்பிரிவை எவ்வாறாவது தண்டிக்க வேண்டும் என்பதில் அத்தரப்பினர் உறுதியாகவுள்ளனர்.

மேலும் மனித உரிமைகள் பேரவை அமர்வில் கலந்து கொண்ட, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகள் இராணுவத்திற்கு எதிராகவும் அப்போதைய அரசியல் தலைவர்களுக்கு எதிராகவும் பொய்க்குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தன.

ஆகவே எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவையின் 39ஆவது கூட்டத்தொடரில் நாம் கலந்து கொள்ளவுள்ளதுடன் நாட்டுக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை எதிர்க்கவுள்ளோம்.

அதற்கான வேலைத்திட்டங்களை தற்போது முன்னெடுத்து வருகிறோம். அது தொடர்பில் சர்வதேச தரப்பினரை விழிப்புணர்வூட்டும் மாநாடுகளையும் முன்னெடுத்து வருவதுடன் இங்கிலாந்திலுள்ள யுத்த விவகாரங்களுடன் தொடர்புபட்ட நிபுணர்களின் ஆலோசனைகளையும் பெற்றுள்ளோம் என்றார். (ம)

**நீரோகா**

| | |
|---|---|
| திகதி | 2018/08/16 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 434 |

| லக்கினம் | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இலக்கம் |
|---|---|---|---|---|---|
| தனுசு | 16 | 32 | 40 | 68 | 46 |

தேசிய லொத்தர் சபை

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 2018/08/16 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3725 |

| ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| F | 7 | 9 | 1 | 7 | 7 | 0 |

தேசிய லொத்தர் சபை

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 2018.08.16 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1853 |

| ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|
| G | 05 | 45 | 51 | 64 |

தேசிய லொத்தர் சபை

**வாசனா சம்பத**

| | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 1505 |
| திகதி | 2018/08/16 |

Q C K

| வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இலக்கம் |
|---|---|---|---|---|
| 25 | 36 | 52 | 67 | 18 |

தேசிய லொத்தர் சபை

## இந்தியாவின்...

உடல் நலம் குன்றிய நிலையில் வீட்டிலும், மருத்துவமனையிலுமாக சிகிச்சை பெற்று வந்த இவர் நேற்று டெல்லியிலுள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார்.

1924 ஆம் ஆண்டு டிசம்பர் 25 ஆம் திகதி குவாலியரில் பிறந்த வாஜ்பாய், இந்தியாவின் 10 ஆவது பிரதமராக 1996 ஆம் ஆண்டு பதவி ஏற்றார். எனினும், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாமல் போனதைத் தொடர்ந்து 13 நாட்களிலேயே அவர் பதவி விலக நேர்ந்தது.

1998 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அதிக இடங்களை கைப்பற்றி, இரண்டாவது முறை பிரதமராக பதவி ஏற்றார். இவர் மீண்டும் 1999 இலும் பிரதமராக பதவியேற்றார்.

2004 ஆம் ஆண்டு பிரதமராக தனது 5 ஆண்டு கால பதவியை நிறைவு செய்த வாஜ்பாய், 2005 ஆம் ஆண்டு தீவிர அரசியலில் இருந்து ஓய்வுபெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## நாகர்கோவிலி...

குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் காணியினை அதன் உரிமையாளர் கடந்த திங்கட்கிழமை சுத்தம் செய்த போது வெடி பொருட்கள் தென்பட்டன. இது குறித்து கிராம அலுவலருக்கு அறிவிக்கப்பட்டது.

கிராம அலுவலர் பருத்தித்துறை பொலிஸாருக்கு உடனடியாக தெரிவித்தும் பொலிஸார் நேற்று வியாழக்கிழமை மதியமே அப்பகுதிக்கு சென்றுள்ளனர்.

அப்பகுதியில் 50 மில்லிமீட்டர் மோட்டார் குண்டுகள் ஏழு காணப்படுவதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை நீதிமன்றின் உத்தரவு பெறப்பட்டு விசேட அதிரடிப்படையினரினால் அப்பகுதியில் உள்ள வெடிபொருட்கள் அகற்றப்படவுள்ளது.

யுத்த காலத்தில் நாகர்கோவில் பகுதி படை முன்னரங்காக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-60)

## வயோதிபப்...

லண்டனில் இருந்து வந்த குறித்த பெண் ஒரு மாதம் கொழும்பில் தங்கி விட்டு கடந்த நான்கு தினங்களுக்கு முன்னர் சாவகச்சேரி -சங்கத்தானையில் உள்ள தனது உறவினர் வீட்டில் தங்கியிருந்துள்ளார்.

இந்நிலையில் நேற்றைய தினம் வீட்டில் இருந்த தனது உறவுக்கார பெண்ணுடன் வைத்தியசாலைக்கு செல்ல தயாராகியுள்ளார். பின்னர் தலை சுற்றுகிறது நான் வரவில்லை எனக் கூறி வீட்டிலேயே இருந்துள்ளார்.

வீட்டில் தனிமையில் இருந்த சமயமே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. 12.30 மணியளவில் குறித்த பெண்ணிற்கு உணவு வழங்க வந்த உறவினரால் சடலமாக கிணற்றில் இருப்பது இனங்காணப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர். குறித்த பெண் கிணற்றடிக்கு செல்ல வேண்டிய தேவை இல்லை எனவும் வழமையாக அந்த கிணற்றை யாருமே பயன்படுத்துவதில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவத்தில் 66வயதான யோகநாதன் புனிதா என்ற வயோதிபப் பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பெண்ணின் பிள்ளைகள் நால்வரும் லண்டனில்எனத்தெரிவிக்கப்படுகிறது.(ம-30)

## 3 இலட்சம் ரூ...

பேசும் குடும்பத்தினர் சுற்றுலாவின் நிமித்தம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளனர்.

வருகைதந்தவர்கள், விக்டோறியா வீதியில் உள்ள வீடு ஒன்றில் தங்கியபோது, அந்த விடுதியின் உரிமையாளர் இரவில் நகைகள் களவு போய்விடும், பத்திரமாக கழற்றி வைத்துக்கொள்ளுமாறு கூறிச் சென்றுள்ளார். அவ்வாறு சென்ற பின்னர், தங்கியவர்கள், நகைகளைக் கழற்றி அறையில் வைத்துவிட்டு நித்திரை கொண்ட வேளையிலேயே இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காலையில் எழும்பிப் பார்த்தால், நகைகள் மற்றும் பணத்தினைக் காணவில்லை என்றும், அந்த நேரம், அந்தப் பகுதியில் இருந்த அறை ஒன்றில் பல மருந்து வகைகள் காணப்பட்டதாகவும், அந்த மருந்து வகைகள் என்ன என்பது பற்றியும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

விசாரணையின் பின்னர், விடுதி உரிமையாளரை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையினையும் யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றார்கள்.(ம-101)

## தமிழ் மக்களின்...

வைத்தியசாலையில் நேற்று அரச மருந்துக் கூட்டுத்தாபனம் உட்பட தாதியர் விடுதி மற்றும் மீள்வாழ்வு புனர்வாழ்வு பிரிவு கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

வடக்கு மக்களின் முழு ஒத்துழைப்புடன் தான் நாம் ஆட்சியை அமைத்தோம். வடமாகாண மக்களுக்கு முன்னெப்போதும் இல்லாத சுதந்திரம் தற்போதைய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது. அந்தவகையில், வடபகுதி மக்களின் தேவைகள் தொடர்பில் தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருகின்றோம்.

கடந்த முப்பது ஆண்டுகளில் எப்பொழுதும் இல்லாதவாறு முழு உரிமையும், சுதந்திரமும் தற்போது வடக்கில் காணப்படுகின்றது. என்னால் தமிழில் உரையாட முடியாமைக்கு வருத்தம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

யாழ் போதனா வைத்தியசாலையில், 600 முதல் 700 வரையான தாதியர்கள் வெற்றிடம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது 500 தாதியர்கள் கடமையாற்றுவதாக கூறியிருக்கின்றனர். ஏனைய 150 தாதியர்களை மிக விரைவில் நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அதேநேரம், 300 வைத்தியர்களின் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. 273 வைத்தியர்கள் சேவையாற்றுகின்றார்கள். ஏனைய 70 வைத்தியர்களையும் நியமிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடு 23


**Physics - A/L 2019**

★ ஆரம்பத்திலிருந்து முழுப்பாடத்திட்டமும் உரிய காலத்தில் கற்பித்து முடிக்கப்படும்.
★ இரண்டு அலகுகளாக கற்பிக்கப்படும்.
★ வினா - விடை வகுப்பும் உள்ளடங்கலாக கற்பிக்கப்படும்.

➤ ஆரம்பம் : 18.08.2018 சனி காலை 9.00am
★ பொறியியல்
★ வெப்பவியல்

ஆசிரியர்: திரு.ம.ஸ்பெல்மன் (BSc, PGDE)
T.P: 077 611 6724
இடம்: MASTER'S SCIENCE INSTITUTION (MSI)
மணிக்கூட்டு வீதி, BMC ஒழுங்கை,
Jaffna Town
(5379)



10 வருட கல்வி - தொழில் - விசா சேவையில்
உங்கள் நம்பிக்கையின் சிகரம் தரும்
**நியூசிலாந்து நாட்டில்**
கல்வி - தொழில் - நிரந்தர குடியேற்றம்
அனைத்து வகையான கற்கைநெறிகளிலும் டிப்ளோமா, பட்டக்கல்வி பட்ட மேற்படிப்பு
54 வகையான வேலைகளுக்கு
500க்கு மேற்பட்ட வெற்றிடங்கள்
அனைவருக்கும் நிரந்தர குடியேற்றம்
விளக்கக் கருத்தரங்கும் நேர்முகத் தேர்வும்
18-08-2018 வெள்ளி மதியம் 1.30மணி
கல்விச் சான்றிதழ்கள், தொழில் அனுபவ கடிதங்கள், கடவுச் சீட்டு என்பவற்றுடன் நேரில் வரவும்
Student Visa - Work Visa - Spouse Visa - Skilled Migration to UK - Australia - New Zealand - Canada - Malaysia
விபரங்களுக்கு 0777 324 004
SIKARAM ACADEMY
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
இல. 221 - 1/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்
021 - 222 00 11
(சி-3513)



**விற்பனைக்கு**

யன்மார் 2 சிலிண்டர் வள்ள எஞ்சின் ஸ்டான்டட் கிறாங், யப்பான் கெட், பெயரிங், தரமான போர் இயங்கு நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0773573055
வேம்படி, வல்வெட்டித்துறை
(5287)



**விரைவு பொதிகள் சேவை**
விசேட விலை குறைப்பு



UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-3472)


## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை நாகலிங்கம்

(மனேச்சர் - புளியங்கூடல்)



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகலிங்கம் அவர்கள் நேற்று (16.08.2018) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்களான வேலுப்பிள்ளை-கண்ணுமணி தம்பதிகளின் ஏகபுதல்வனும் காலஞ்சென்றவர்களான தங்கம், அன்னக்குட்டி ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற சொர்ணம்மா, சந்திரா ஆகியோரின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-சிவக்கொழுந்து ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான அன்னபூரணம், சோமசுந்தரம், குலசிங்கம், பொன்னம்மா, கோணேஸ்வரி மற்றும் நகுலாம்பிகை,தேவராணி, கந்தலிங்கம் சிவநாதன், செல்வநாயகி, ஜானகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2018) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புளியங்கூடல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்அறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : சி.சிவாஸ்கரன் (பேறாமகன்)

தொ.பே: 0777729127

(சி-3525)


நீரிழிவு (சலரோகம்), மூட்டுவாதம், முட்டு (வீசிங்) போன்ற 16 வகையான நோய்களுக்கு மூன்று மாதங்களில் நிரந்தர தீர்வு

**நோயாளிகளின் கோரிக்கைக்கு அமைய**

37 வருடங்களாக மாத்தளையில் சேவையாற்றிய பிரபல ஹோமியோபதி வைத்திய நிபுணரின் சேவை தற்போது பரந்தனிலும் யாழ்ப்பாணத்திலும் உங்களுக்காக...

கிளினிக் நடைபெறும் திகதி:
யாழ்ப்பாணத்தில் 18.08.2018 (நாளையதினம்)
பரந்தன் 25.08.2018

90 நாட்களில் உங்கள் நோய்களில் இருந்து முற்றாக விடுபடலாம்

**I.A.S. HOSPITAL**
ஐ.ஏ.எஸ் மருத்துவமனை

ஒமெகா இன், இல.101, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (2ஆம் குறுக்குத் தெரு சந்தியில்)

பல நோக்கு கூட்டுறவு சங்க கட்டடம், பரந்தன் சந்தி, பரந்தன்

தொடர்புகட்கு:-
077 440 5969, 077 444 1082
(சி-3526)



**Ahtus**
Ahtus Enterprises (Pvt) Ltd
ஆதுஸ் என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிட்
குழந்தைகள் தாய்மார்களுக்கு வேண்டிய அனைத்து பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.





FARLIN
YOUR BABY IS OUR CONCERN
உலகின் அதி சிறந்ததை உங்கள் குழந்தைக்கு வழங்கிடுங்கள்
இல.30, கன்னாதிட்டி றோட், (வண்.சிவன் கோயில் முன்பாக) யாழ்ப்பாணம்.
Tel : 077 742 7322
(C-3521)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.